# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 11 ஞாயிற்றுக்கிழமை (28.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 275





09 தாய்ப் பாலே தலை சிறந்தது


## மக்களை படைகள் தாக்கியதை எதிர்த்து மனித உரிமை மீறல் மனு தாக்கலாகும்

யாழ்ப்பாணம், ஓக.28

நாவாந்துறையில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

''நாவாந்துறை மக்களை நாங்கள் நேரடியாகச் சென்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம். இதன் பின்னர் அந்த மக்களின் சம்மதத்துடன் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவினைத் தாக்கல் செய்ய உத்தேசித்துள்ளோம்.

அவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை இராணுவத் தளபதி பயங்கரவாதிகள் என்று சொல்லியிருக்கின்றார். ஆனால் இராணுவம்தான் பயங்கரவாதிகள் போன்று நடந்து கொண்டுள்ளது. இராணுவம் முதலில் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். சந்தேக நபர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டு அப்பாவி மக்கள் மீது மிலேச்சத்தனமாகத் தாக்குதல்களை நடத்துவதில் என்ன நியாயம் இருக்கிறது?'' - என்றார் சுரேஸ். (உ-15)

## கழுத்து வெட்டி குடும்பஸ்தர் கொலை

யாழ்ப்பாணம்,ஓக.28

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரது சடலம் நேற்றுமுன்தினம் இரவு யாழ். போதனா வைத்திய சாலையில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பக் 31




17 ஜனநாயகத்தின் நிழலில் சர்வாதிகாரம்


அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டபோதும்

## கைதிகளுக்கு விடிவு இல்லை

### அவர்களின் விடுதலை பற்றிய முடிவு சட்ட மா அதிபரிடமே

கொழும்பு, ஓகஸ்ட் 28

**அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டபோதும் அதன் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகள் ஏதுமின்றியும் போதிய சாட்சியங்கள் இன்றியும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்படமாட்டார்கள் என்று நீதித்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இதனால் சுமார் 6,000 தமிழர்கள் தொடர்ந்தும் சிறைகளில் வாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.**

30 வருடங்களாக நடைமுறையில் இருந்து வந்த அவசரகாலச் சட்டத்தை அரசு நீக்கி உள்ளது. கடந்த 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி சமர்ப்பித்த விசேட பிரேரணையைத் தொடர்ந்து உடனடியாக அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது.

இதனை அடுத்து இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 6,000 தமிழ்க்


பக் 31




29 பீற்றர்ஸன் ஓய்வு


## அரோகரா கோஷம் வான்பிளக்க நல்லூர்க் கந்தன் தேரேறி பவனி

### பக்தி மணங்கமழ ஹெலியிலிருந்தும் பூமாரி



யாழ்ப்பாணம், ஓக. 28

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா நேற்று சனிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. அதிகாலை 4 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகின. காலை 6 மணிக்கு வசந்த மண்டப் பூசைகள் நடைபெற்றன. தொடர்ந்து முருகப் பெருமான் தேருக்கு எழுந்தருளினார். காலை 7 மணிக்கு தேருலா இடம்பெறுவது வழமை எனினும் நேற்றைய தினம் காலை 7.15 மணிக்கே தேருலா ஆரம்பமானது.

லட்சக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துக்கு மத்தியில் ரத பவனி இடம்பெற்றது. தேர் வீதி வலம் வரத்தொடங்கியதும், பெருமளவு அடியார்கள் அங்கப் பிரதிஷ்டை செய்தும் அடியளந்தும்

பக் 31

## மரண தண்டனையை ரத்துச் செய்து மனிதநேயத்தை வெளிப்படுத்துங்கள்

### இந்திய அரசுக்கு சிறீதரன் எம்.பி. உருக்கமான கடிதம்

கிளிநொச்சி, ஓக.28

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோருக்கு தண்டனையிலிருந்து விலக்களித்து பாரததேசத்தின் அன்பையும், மனித நேயப் பண்பையும் பெருமைப்படுத்துமாறு கேட்டுள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன். இது தொடர்பில் தமிழக முதல்வர் ஊடாக இந்திய ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கருணை மனுவில் ஈழத்தமிழர்கள் சார்பாக இந்த உருக்கமான கோரிக்கையை அவர் விடுத்தார்.

அந்தக் கருணை மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பாரத தேசத்தின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் எமது உறவுகளான சாந்தன், பேரறிவாளன், முருகன் மீதான தண்டனையை நிறைவேற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தச் செய்தி அறிந்து ஈழத்தமிழர்கள் ஆகிய நாம்

பக் 31

## ரூ. 21 லட்சத்துக்கு அதிக பெறுமதியான 40 பவுண் தங்க நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் ஆலய வீதியில் கந்தனின் தேர் பவனி வந்தபோது சன நெரிசலைப் பயன்படுத்தி 20 லட்சம் ரூபா பெறுமதியான 40 பவுண் நகைகள் நேற்றுத் திருடப்பட்டன. தாலிக் கொடிகளை அறுக்க முயன்ற இரு பெண்கள் கையும் களவுமாகக் பிடிக்கப்பட்டனர். நகைத் திருட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் சில இளைஞர்களைத் தாம் கைது செய்துள்ளனர் என்று யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பத்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று பொலிஸார் கூறினர். அநேகமான திருட்டுகள் கால் கழுவும் பகுதிகளிலும் ஆலய உள் வீதியிலுமே இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பக் 31


தலைநகரில் தலைசிறந்த 15 வருட சேவை பூர்த்தியை முன்னிட்டு இந்தியப் பயணிகளுக்கு கப்பல் மற்றும் விமான பயணச் சீட்டுக்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள...

Call 0777380557 0773629519

AiRMARK Travels & Tours

IATA

Open Every Day



நவீன் செரமிக்
Naveen Ceramic

#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 0033 / 021 222 0044

#5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 4777 / 021 222 4888

Metro Engineering (Pvt) Ltd



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப் படக்கூடிய சாத்தியம்

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
389/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
ஆவணி 26, 2011

பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,852.96↑
மிலங்கா(MPI) 6,222.08↓

உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,981.43Mn
பங்குகளின் அளவு(No.) 62.87Mn
வியாபாரம்(No.) 23,515

விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
சிங்க பைனான்ஸ் 37.90
கொலனியல் மோட்டார் 408.00
மொறிசன் 3800.00
கலாமசூர் 3900.00
மஸ்ரி பைனான்ஸ் 51.00

குறைவு(Top 5 losers) - விலை Rs.
சிங்கலங்கா(R) 160.00
மீறம பீச் 265.00
களனி வலி 115.00
செலான் மேச்சன்(W15) 1.00
சிங்கலங்கா 306.50

மேலதிக தகவல்கள்- www.cse.lk

# சிகிச்சையின் பின் பிணையில் சென்ற நாவாந்துறைவாசி மீள ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஒக.28

நாவாந்துறையில் படையினரின் தாக்குதலுக்குள்ளாகிக் கைது செய்யப்பட்டு பின்னர் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்ட ஒருவர் தலை விறைப்பு மற்றும் மயக்கம் காரணமாக மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார்.

நாவாந்துறையைச் சேர்ந்த பெலிசோ சுமணன் (வயது -23) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு மீண்டும் சிகிச்சைக்குக் கொண்டு செல்ல வேண்டிய ஏற்பட்டுள்ளது.

நாவாந்துறையில் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி கைது செய்யப்படாத ஆண்கள் மற்றும் பெண்கள் பலரும் தற்போது சிகிச் சைக்கென யாழ். போதனா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-4)

# அவசரகால நிலை நீக்கப்பட்டதை வரவேற்கிறது பத்மநாபா அணி

## தீர்வொன்றை எட்டுமாறும் அரசிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 28

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதை பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிவரவேற்றுள்ளது. அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு வேண்டிய சூழலை ஏற்படுத்துமாறும் அது அரசைக் கோரியுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இந்த அவசரகால நிலை கடந்த மூன்று தசாப்தங்களாக இருந்து வந்திருக்கிறது. புலிகள் மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றுக்கு எதிரான போர்களில் போது அரசின் இந்த அவசரகால நிலை குறிப்பிட்டளவு நியாயப்படுத்தப்பட்டது. அதேவேளை இந்தச் சட்டங்கள் கண்மூடித் தனமான கொலைகள், தன்னிச்சையான கைதுகள், காலவரையற்ற சிறைவாசங்கள், சிறையில் அடைக்கப் பட்டோரை யாரும் பார்க்க முடியாத நிலைமைகள் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்பட்டமையை அனைவரும் கருத்திற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூக அமைப்புக்கள் ஆகியவற்றுடன் இணைந்து பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். இந்த அவசரகால நிலையை நீக்குவதற்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கிறது.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது ஜனநாயக அம்சங்களை பரவலாக்குவதற்கும் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படும் நிலையை விரிவு படுத்துவதற்கும் அவசியமான ஒரு முன்னெடுப்பாக அமையுமென நாம் மனதார நம்புகின்றோம். அதனையே இலங்கையின் அனைத்து மக்களும் நீண்ட காலமாக வேண்டி நின்றார்கள்.

அரச அதிகாரத்தில் இருக்கும் அனைவரும் மிகவும் கவனத்தோடும் எச்சரிக்கையோடும் தமது அதிகாரங்களை பயன்படுத்தி இந்த நாட்டின் அரசியல் முறைமையின் மீது மக்களுக்கு நம்பிக்கையை வளர்க்க வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் இந்த நாட்டின் சமூக அரசியல் பங்காளர்கள் அனைவரும் இந்த நாட்டின் அனைத்து தேசிய இனங்களும் இந்த நாட்டை தமது தேசமென ஒருமுகமாக எண்ணும் வகையான வளர்ச்சியை அடைவதற்கு அவசியமான அரசியல் தீர்வொன்றை எய்துவதற்கு வேண்டிய சூழலை உருவாக்கி முன்னேற்றுவதில் பொறுப்போடு பங்களிக்க வேண்டுமெனவும் வேண்டிக்கொள்கிறோம் - என்றுள்ளது. (த)

# முறைசாராக் கல்வி மாணவருக்கு தேசிய தொழில் கல்விச் சான்றிதழ்

## ஜனவரி முதல் வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 28

வலயக் கல்வி அலுவலகங்களால் நடத்தப்படும் முறைசாராக் கல்விப் பிரிவில் பயிலும் மாணவர்களுக்கு தேசிய தொழில் கல்வித் தகமைச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் இணைந்தே வலயக் கல்வி அலுவலகங்கள் இந்தச் சான்றிதழை வழங்கவுள்ளன.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் முறைசாராக் கல்விப் பிரிவில் பயிலும் மாணவர்களுக்கு இந்தச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களிலும் அடுத்த வருடம் இந்தக் கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கணினி வன்பொருள் திருத்துதல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கட்டட நிர்மாண உதவியாளர், முச்சக்கர இருசக்கர வண்டி திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், வெல்டர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், வெளி இணைப்பு இயந்திரத் திருத்துநர், விவசாய உபகரணங்கள் திருத்துநர், குளிர்சாதன உபகரணம் திருத்துனர், டீசல் வாகனங்கள் திருத்துநர் ஆகிய முறைசாராக் கற்கை நெறிகள் அடுத்தவருடம் ஆரம்பிக்கப்பட வுள்ளன. வட மாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களினதும் முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கான செயலமர்வு கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போதே மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் இந்த விடயம் தொடர்பாக அறிவித்தார். மருதனார் மடத்திலுள்ள மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகக் கேட்போர் கூடத்தில் கூட்டம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவிக்கையில்,

தொழில்சார் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் போக்கு தற்போது அதிகரித்துள்ளது. எனினும் முறை சார்ந்த கல்விக்கு உட்படுத்தப்படு வோரில் இரண்டு வீதத்தினர் மட்டுமே பல்கலைக் கழகம் செல்கின்றனர். ஏனைய 98 வீதத்தினருக்கு தொழில் கல்வி வழங்குவது தொடர்பாக அரசு அதிக கவனம் செலுத்துகிறது - என்றார். (த-14)

# கிறீஸ் பூதமானார் மானி வாசிப்பாளர் மூதாட்டியால் வினை

தென்மராட்சி, ஒக.28

மின்மானியின் பதிவு மேற்கொள்ளச் சென்ற மின்மானி வாசிப்பவர் (Meter Reader) வீட்டிலிருந்த மூதாட்டிக்கு கிறீஸ் பூதமாகத் தென்பட்டார். இந்தச் சம்பவம் அண்மையில் தென்மராட்சியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த மூதாட்டி திடீரெனகிறீஸ்பூதமெனக் கூக்குரலிட மின்மானி வாசிப்பாளர் அச்சத்தினால் அந்த இடத்திலேயே நின்றுவிட்டார்.

மூதாட்டியின் கூக்குரல் கேட்ட அயலவர்கள் ஓடிவந்து விசாரித்த போது கிறீஸ் பூதம் வந்து நிற்பதாகத் தெரிவித்த மூதாட்டி மின்மானி வாசிப்பாளரைக் காட்டினார்.

ஏற்கனவே அந்தப் பகுதியில் மின்வாசிப்பில் இந்த நபர் ஈடுபட்டதால் அவர் அனைவருக்கும் பரீட்சயமானவர். இதனால் கிறீஸ் பூதத்தைப் பிடிக்க ஓடிவந்த அனைவரும் சிரித்தபடி வெளியேறினர்.

# வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களின் முதலாவது அமர்வு

சங்கானை, ஒக. 28

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின் வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் முதலாவது கூட்டம் எதிர்வரும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளதாக அதன் தலைவர் திருமதி நா. ஐங்கரன் உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட பிரதேச சபைகளில் வலிமேற்கு பிரதேச சபை மட்டுமே ஒரு பெண் தலைவரைக் கொண்டுள்ளது. இவரது தலைமையில் சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 11 பேரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த 03 பேரும் உள்ளனர். (த)

# புலிகளின் கப்பல்கள் வர்த்தகப் பணியில்

விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள் டொமினிக்கன் குடியரசில் இருந்து கனடாவுக்கு பொருள்களை ஏற்றி இறக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் இந்த கப்பல்கள் புலிகளுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்களுக்கான பொருள்களையே ஏற்றி, இறக்குவதாக கனடாவில் மாற்று தமிழ் அமைப்புகளின் தகவல்கள் தெரிவிப்பதாக திவயின தெரிவித்துள்ளது.

# நிகழ்வுகள்

## விளையாட்டு விழா

வடமராட்சி, ஒக.28

கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலைய முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் கே.குமணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி கலந்து கொள்வார். (த-236)

## கௌரவிப்பு

தும்பளை, நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் தர்மபரிபாலன சபை, தும்பளை கிழக்கு சனசமூக நிலையம், நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் தலைவர் சட்டத்தரணி சபா ரவீந்திரன், பருத்தித்துறை நகர சபையின் தலைவராகப் பதவி ஏற்றதைக் கௌரவித்து இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வரவேற்பு விழா நடத்தப்படவுள்ளது.

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் தலைமையில் நெல்லண்டை அம்மன் கலை அரங்கில் இடம்பெறும் இவ்வரவேற்பு விழாவில் இளைப்பாறிய கல்வித் திணைக்கள நிதி உதவியாளர் வ. இளையதம்பி, குடத்தனை அ.த.க. பாடசாலை ஆசிரியர் இ.குகன், இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் அ. வீரபுண்ணியம், கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை அதிபர் கா. புஸ்பராசா ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள். (த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன், சாந்தன், பேரறிவாளனை தூக்கில் போடும் திகதி அறிவிப்பு



முருகன் பேரறிவாளன் சாந்தன்

புதுடில்லி, ஒக. 28

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கும் வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று வேலூர் மத்திய சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் அறிவுடைநம்பி உறுதிப்படுத்தினார்.

இது குறித்த அதிகாரபூர்வ தகவல் தமக்கு அளிக்கப்பட்டு விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

1991 ஆம் ஆண்டு மே மாதம் ராஜீவ் காந்தி சென்னையை அடுத்த ஸ்ரீபெரம்பதூரில் தற்கொலை குண்டுத் தாரியால் கொல்லப்பட்டார்.

அதன் பின்னர், மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் கைதான முருகன், பேரறிவாளன், சாந்தன் மற்றும் நளினி ஆகிய நால்வருக்கும் இந்திய உச்சநீதிமன்றம் 1999ஆம் ஆண்டு தூக்குத் தண்டனையை உறுதி செய்தது.

பின்னர், காங்கிரஸ் தலைவரான மனைவி சோனியாகாந்தியின் பரிந்துரையின்பேரில் நளினியின் கருணை மனு ஏற்கப்பட்டு அவரின் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

### 20 ஆண்டுகளுக்கும் அதிக காலம் சிறையில்

20 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்தை சிறையில் கழித்த இந்த மூவரையும் தூக்கிலிடக் கூடாது என்று மனித உரிமை அமைப்புக்களும், அரசியல் தலைவர்களும் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் இவர்களை தூக்கிலிட திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாதாடிய வழக்கறிஞர் புகழேந்தி, இந்த விடயத்தில் தமிழக முதல்வர் தலையிட்டு தூக்குதண்டனையை நிறுத்துவார் என்று அந்த மூவரும் நம்பியிருக்கின்றனர் என்று தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமையன்று தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் நாள் குறித்து அந்த மூவருக்கும் முறைப்படி தெரிவிக்கப்பட்டதாகவும், அதன் பிறகு தான் அவர்களை சந்தித்த போது அம் மூவரும் நம்பிக்கையுடன் காணப்பட்டனர் என்றும் புகழேந்தி தெரிவித்தார்.

அதேநேரம் தமிழக சட்டசபையில் இது தொடர்பாக ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்தை கொண்டுவர புதிய தமிழகக் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி எடுத்த முயற்சிகளுக்கும் பயன்கிட்டவில்லை இது குறித்து டாக்டர் கிருஷ்ணசாமி சட்டசபையில்கூறிய கருத்துக்களும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுவிட்டது.

பிறகு தமிழோசையிடம் கருத்து வெளியிட்ட டாக்டர் கிருஷ்ணசாமி, இந்த விடயத்தை முதல்வர் ஜெயலலிதா அவையில் இருந்த சமயத்தில் மூன்று முறை தான் எழுப்ப முயன்றார் எனவும், ஆனால் தனக்கு ஆதரவாக ஒரு உறுப்பினர் கூடக் குரல் கொடுக்கவில்லை என்றும் தெரிவித்தார். (த)

# தண்டனையை ரத்துச் செய்யுமாறு கலைஞர் கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஒக. 28

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மூவரின் தூக்குத் தண்டனையையும் ரத்துச் செய்ய மத்திய அரசும், தமிழக அரசும் அனைத்து முயற்சிகளும் எடுக்க வேண்டும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோரைத் தூக்கிலிட உத்தரவு வந்துவிட்டமை குறித்து சில நாள்களுக்கு முன் செய்தியாளர்கள் என்னிடம் கேட்டனர். தூக்குத் தண்டனை என்பதே கூடாது என்று பல ஆண்டுகளாகச் சொல்லி வரும் கருத்தினை வலியுறுத்தியதோடு, அந்தக் கருத்து இந்த மூவருக்கும் பொருந்தும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

இந்த வாலிபர்கள் மூவருமே இருபதாண்டுகள் சிறையிலே இருந்துவிட்டார்கள். அவர்கள் செய்தது குற்றமே ஆயினும் - அவர்கள் இத்தனை ஆண்டுகள் சிறையிலே இருந்ததை மனதிலே கொண்டு - மனிதாபிமானத்தோடு - ''மறப்போம், மன்னிப்போம்'' என்ற நிலையில் - உலகமெங்கும் உள்ள தமிழர்கள் எல்லாம் விடுக்கிற வேண்டுகோளினை ஏற்று - தூக்குத் தண்டனையில் இருந்து அவர்களைக் காப்பாற்ற நம்மால் முடிந்த முயற்சிகளை எல்லாம் மேற்கொள்ள வேண்டியது அவசர அவசியமாகிறது.

காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர் சோனியா காந்தியும் இந்தப் பிரச்சினையில் அக்கறையோடு செயற்பட்டு 3 உயிர்களையும் காப்பாற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முடிவெடுக்க இன்னும் சில நாள்களே இருக்கின்ற நிலையில், மத்திய அரசும், தமிழக அரசும் இந்தப் பிரச்சினையிலே அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, இந்த மூவரின் மீதான தூக்குத் தண்டனையை ரத்து செய்திட வேண்டும் எனக் கருணாநிதி கூறியுள்ளார். (த)

## தண்டனையைக் கைவிட திருமாவளவன் வலியுறுத்து

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோர் எதிர்வரும் செப்ரெம்பர் 9 ஆம் திகதி தூக்கில் இடப்படுவார்கள் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது இந்நிலையில் தமிழகமெங்கும் மரண தண்டனைக்கு எதிரான குரல் வெடித்து வருகிறது. மூவரையும் உடன் விடுவிக்க வேண்டும் என்று விடுதலைச்சிறுத்தைகளின் தலைவர் தொல்.திருமாவளவனும் வலியுறுத்தி உள்ளார்.

அத்துடன் இந்தியக் குடியரசு தலைவர் பிரதீபா பாட்டீலுக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் தலைவர் தொல். திருமாவளவன் கடிதம் எழுதியுள்ளார்.

# தூக்குத் தண்டனையைக் குறைக்க முதல்வர் ஜெயலலிதாவால் முடியும்

## டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு

சென்னை, ஒக.28

ஏற்கனவே தூக்கு தண்டனையைவிட மிகக் கொடுமையான தனிமைச் சிறைத் தண்டனையை அனுபவித்துவிட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை விதிப்பது நீதியாக இருக்காது என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் கருணை மனுவை குடியரசு தலைவர் தள்ளுபடி செய்வதற்கான அதிகாரப்பூர்வமான ஆணை வேலூர் சிறை நிருவாகத்துக்கு வந்திருக்கிறது. இதைத் தொடர்ந்து அடுத்த 7 நாள்களில் பேரறி வாளன் உள்ளிட்ட மூவரின் தண்டனை நிறைவேற்றப்படும் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. இது மனிதாபிமானமுள்ள அனைவரின் கண்களிலும் கண்ணீரை வரவழைத்திருக்கிறது.

ஏற்கனவே தூக்குத் தண்டனையைவிட மிகக் கொடுமையான தனிமைச் சிறைத் தண்டனையை அனுபவித்துவிட்ட மூவருக்கும், மீண்டும் ஒரு தண்டனை வழங்குவது நீதியாக இருக்காது.

தமிழக அரசுக்கு இருக்கும் நிர்வாக அதிகாரத்தைப் பயன்படுத்தி இவர்களின் தூக்குத் தண்டனையை குறைப்பதற்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவால் முடியும்.

எனவே, இம்மூவரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்வதற்காக தமிழகச் சட்டப் பேரவையில் தீர்மானம் நிறை வேற்றுவது உள்ளிட்ட நடவடிக்கைகளை முதல்வர் ஜெயலலிதா மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று கோரியுள்ளார் ராமதாஸ். (த)

# மூவரைத் தூக்கில் போட ஏழு பேருக்குப் பயிற்சி

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கான தூக்குத் தண்டனையை நிறை வேற்றுவதற்காக சென்னை புழல் சிறைச்சாலையில் 7 பேருக்குபயிற்சியளிக்க சிறைத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். மேற்படி மூவரும் வேலூர் சிறைச்சாலையில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அந்தச் சிறைச் சாலையிலேயே அவர்களுக்கான தூக்குத் தண்டனையும் நிறைவேற்றப்படவுள்ளது. இருப்பினும் அந்தத் தண்டனையை நிறைவேற்ற வேலூர் சிறைச்சாலையில் எவரும் இல்லாத பட்சத்திலேயே, சென்னையிலுள்ள புழல் சிறைச்சாலையில் ஏழு பேருக்கு பயிற்சிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வேலூர் மத்திய சிறைச்சாலையானது, 171 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இங்கு இரு தூக்கு மேடைகள் உள்ளன. ஆனால் சிறையில் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற தனியாக பணியாளர்கள் எவரும் இல்லை. இதனால் இரு மேடைகளும் துருப்பிடித்து காணப்படுகின்றன. இப்போது அவற்றைச் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதே வேளை பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரைத் தூக்குத் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்கான முயற்சிகளும் மறுபுறம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சட்ட நடவடிக்கை

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவுள்ள முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரைக் காப்பாற்ற சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தண்டனைக்கு எதிராகத் தடை விதிக்கக் கோரியும் இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் கருணை மனுவை நிராகரித்ததை எதிர்த்தும் நாளை திங்கட்கிழமை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்று வழக்கறிஞர் புகழேந்தி தெரிவித்தார்.

இந்த வழக்கில் மூத்த வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி ஆஜராகி வாதிடுவார் என்றும் அவர் தெரிவித்தார். (உ)

## செல்வச் சந்நிதி அமுத சுரபி மண்டப 50 ஆவது ஆண்டு விழா

சாவகச்சேரி, ஒக. 28

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள அமுதசுரபி அன்னதான மண்டப 50 ஆவது ஆண்டு விழாவும், அதனையொட்டிய மலர் வெளியீட்டு நிகழ்வும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் திறப்புவிழாவும் செல்வச் சந்நிதி அமுதசுரபி அன்னதான மண்டபத்தில் நாளை திங்கள் முற்பகல் 10 மணிக்கு அமுதசுரபி அன்னதான மண்டப இயக்குநர் க.சிவஞானராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய சிறு கைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். சேவையின் நிறைவேற்று அதிகாரி த.உருத்திரபாபதி, கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி எஸ்.செந்தூர்செல்வன், பொறியியலாளர் ச.சத்தியரூபன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தொண்டமானாறு தெற்கு கிராம உத்தியோகத்தர் சேகர், டாக்டர் பத்மநாதன், தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் சி.நந்தகுமார், வடமராட்சி பிரதேச ஈ.பி.டி.பி. பொறுப்பதிகாரி எஸ்.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ஆசிரியுரையை நல்லை நகர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், துர்க்கா தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன், சந்நிதி தேவஸ்தான குரு எஸ்.மணிஜயா, சுன்னாகம் கதிரைமலைச் சிவன் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ காந்தன் குருக்கள் ஆகியோரும் அருளுரையை தவத்திரு குமார சுவாமி ஐயாவும், வாழ்த்துரையை செந்தமிழ் கலைஞானி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தமும் வழங்குவர். (உ-131)

## பரிசளிப்பு விழா

ரவீன்ஸ் ஆங்கில மொழி மூல கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக பிராந்திய சுகாதார திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (உ-15)

## அனலைதீவில் ஆணின் சடலம்

அனலைதீவுக் கடற்கரையில் 35வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் நேற்று மாலை கரையொதுங்கியுள்ளது. சடலத்தின் தலைப்பகுதி கடுமையாக சிதைவடைந்துள்ளதால் அடையாளம் காண்பது சிரமமானது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சடலத்தில் 'ரீ சேட், உள்ளாடையும் மட்டுமே காணப்படுகின்றன. நேற்று மாலை ஊர்காவற்றுறை பொலிஸாரால் மீட்கப்பட்ட, சடலம் இனங் காண்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சடலம் இந்திய மீனவருடையதாக இருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்தனர். (உ-15-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் விருந்தோம்பல்: இன்று நிலை என்ன?




விருந்தோம்பலில் யாழ்ப்பாணத்தவர்களுக்கு நிகர் ஒருவருமில்லை என பேராசிரியர் சந்திரசேகரம் அண்மையில் கொழும்புப் பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ளார். அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்ற தமிழகப் பேராசிரியை சரஸ்வதி இராமநாதனும் யாழ்ப்பாணத்தவரின் விருந்தோம்பலைப் பற்றிப் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

வெளியூர்க்காரர்கள் யாழ்ப்பாணத்தவர்களின் விருந்தோம்பலைப் பற்றிப் புகழ்ந்து தள்ளியுள்ளது எவ்வளவு தூரம் உண்மை என்பதை இங்கே நான் பகிர்ந்து கொள்ளவுள்ள அனுபவங்களை வைத்து நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

நான் யாழ்ப்பாணத்தில் நேரடியாக அனுபவித்த விடயங்களையே இங்கு கூற விரும்புகிறேன்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் வியாபாரம் செய்பவர்கள் தமது வாடிக்கையாளருடன் இன்முகத்துடன் பழகுவார்கள். காரணம் தமது வியாபாரம் கெட்டுப்போய் விடக் கூடாது என்பதே. ஆனால், யாழ்ப்பாணத்தவர்கள் பணத்திற்கெல்லாம் மயங்க மாட்டார்கள். தமது வியாபாரம் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை நாங்கள் எமது பழக்கத்தை, இறுக்கத்தை என்பதே யாழ்ப்பாணத்தில் வர்த்தகம் செய்பவர்களின் நிலைப்பாடு.

உங்களில் பலர் யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள உணவகங்கள், விடுதிகளுக்குச் சென்றிருப்பீர்கள். உங்களுக்கு அங்கு என்ன விதமான அனுபவம் கிடைத்ததோ தெரியாது. யாழ்ப்பாணத்திலுள்ள உயர்தர உணவகங்கள், விடுதிகளில் நான் பார்த்தவற்றைச் சொல்கிறேன்.

இங்கே நான் கூறப்போகும் விடயங்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் வந்த வெளிநாட்டவர்களுக்குக் கிடைத்த அனுபவங்கள் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கண்டியைச் சேர்ந்த விசாகா என்ற பெண்மணி இங்கு வந்திருந்தார். இவர் மகளிர் அமைப்பு ஒன்றின் தலைவி. யாழ்ப்பாணம் வந்து கடற்கரை வீதியிலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்தார். இந்த விடுதியில் இரவு உணவுக்காக இருநூறு ரூபா கட்டணம் அறவிடப்பட்டது. ஏழு வருடங்களுக்கு முன்னர் இருந்த கட்டணம்தான் இருநூறு ரூபா. பரிமாறப்பட்ட பருப்புக் கறி காலையில் சமைத்த பழுதடைந்த கறி. விடுதி உரிமையாளரிடம் விடயத்தைக் கூறிய போது நீங்கள் பருப்புக் கறிக்குப் பணம் தரவேண்டாம். 180 ரூபா தந்தால் போதும் என்றார் விடுதி உரிமையாளர். அவர் கூறியபடி காலையில் சமைத்த புளித்துப்போன பருப்புக் கறிக்கு இருபது ரூபா கழித்துக் கொண்டு 180 ரூபா படி கணக்கு முடிக்கப்பட்டது. சம்பலும் சற்றுப்புளித்து விட்டது. சம்பலுக்கும் காசு கழி என்று கேட்க மனம் வராததால் விட்டுவிட்டார்.

சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலத்தில் ஜப்பானிய தேசிய தொலைக்காட்சி நிறுவன ஊடகவியலாளர்கள் சிலர் கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணம் வந்தனர். ஜப்பானியர்களுக்கு கடமைதான் முக்கியம். உணவு இரண்டாவது பட்சம். வந்தவர்கள் காலையிலிருந்து எதுவுமே சாப்பிடவில்லை. தமது கடமையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். கிளிநொச்சியில் படப்பிடிப்பை முடித்துக் கொண்டு மாலையில் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டனர். அனைவருக்கும் கடும் பசி. மாலை ஆறு மணியளவில் யாழ். கச்சேரியடியிலிருந்த உணவகம் ஒன்றின் முன்னால் வாகனத்தை நிறுத்தி விட்டு உள்ளே சென்று 'சூப்' பிற்கும் உணவுக்கும் ஓடர் கொடுத்தனர். மாலை 6.45 மணியளவில் 'சூப்' வந்தது. 7.15 மணியாகியும் உணவு வந்து சேரவில்லை. பொறுமையிழந்த ஜப்பானியர்கள் உணவக முகாமையாளரை அழைத்து ஆயிரம் ரூபா தாள் ஒன்றை எடுத்துக் கொடுத்து இதை 'சூப்'பிற்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறி விட்டு வாகனத்திலேறிப் புறப்பட்டனர். நான் அருகிலிருந்த வேறோரு உணவகத்துக்கு அழைத்துச் சென்று உரிமையாளரிடம் விடயத்தைக் கூறி உடனடியாக உணவு சமைத்துத்தர முடியுமா என்று கேட்டேன். உரிமையாளரும் இருபது நிமிடங்களில் எமது பசியைத் தீர்த்து வைத்தார்.

தமிழர்களால் நடத்தப்படும் அரச சார்பற்ற நிறுவனமொன்று ஒருமுறை கண்டி வீதியிலுள்ள விடுதியொன்றில் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. மதிய இடைவேளையின் போது பரிமாறப்பட்ட பருப்புக்கறியினுள்ளும் கத்தரிக்காய்க் கறியினுள்ளும் இரு புழுக்கள் காணப்பட்டன. புழுக்களைக் கண்டுபிடித்த இருவருக்கும் மேலதிக ஐஸ்கிறீம் வழங்கப்பட்டதுடன் விடுதி உரிமையாளரும் வருத்தம் தெரிவித்தார் என்பதுடன் அந்தப் பிரச்சினை முடிக்கப்பட்டது.

அல்ஜசீரா தொலைக்காட்சி நிறுவனத்தினர் பிரபாகரனின் தாயார் காலஞ்சென்ற பார்வதியம்மாளைப் பேட்டி காண்பதற்காக வந்து கச்சேரியடியிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்தனர். இவர்கள் வந்த அடுத்தநாளே யாழ்ப்பாணத்தை விட்டு உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு வந்தது. இவர்கள் தங்கியிருந்த விடுதி முகாமையாளரிடம் பில்லைக் கேட்டபோது முகாமையாளர், ''உரிமையாளர் 'பில்' றெடி பண்ணி வைக்கிறாராம் உங்களை வாகனத்தை எடுத்துக்கொண்டு ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மற்றைய விடுதிக்கு வரட்டாம்'' என்றார்.

நான் முகாமையாளரிடம் தொலைபேசியை வாங்கி ''அண்ணை றூம் காலி பண்ணினால் பில்லைக் கொடுக்க வேண்டியது உங்கள் கடமையல்லவா? ஏன் மற்றைய விடுதிக்கு வரச் சொல்லுகிறீர்கள்'' என்று சற்றுக் காரமாகக் கேட்டேன். சரி நான் பில்லுடன் வருகிறேன் எனக் கூறிய உரிமையாளர் உடனே வந்து கணக்கு முடித்தார்.

கடந்த வருடம் பிரட்ரிக் ஈபேட் மன்றம் யாழ். பொதுநூலகத்தில் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. மாலை 4.30 மணிக்கு சிற்றுண்டியும் தேநீரும் அனுப்புமாறு ஸ்ரான்லி வீதியிலுள்ள ஒரு பிரபல உணவகத்தில் ஏற்பாடு செய்திருந்தார் கருத்தரங்கை ஏற்பாடு செய்த ரஷ்ய நாட்டுக்காரர். கருத்தரங்கு முடிந்து அனைவரும் வீடு சென்ற பின் 5.30 மணிக்கு சிற்றுண்டியும் தேநீரும் வாகனத்தில் வந்திறங்கின. ஏற்பாட்டாளரான ரஷ்யக்காரர் உரிய நேரத்துக்கு உணவு அனுப்பவில்லையெனக் கூறி பணம் கொடுக்க மறுத்தார். பின்னர் பணம் கொடுத்தாரா இல்லையா என்பது தெரியவில்லை.

■ நா.பரமேஸ்வரன்

கடந்த மார்ச் மாதம் பிரபல ஹொலிவூட் திரைப்படத் தயாரிப்பாளரான சந்திரன் இரத்தினத்தின் மனைவி தனது விமானத்தில் (சொந்த) யாழ்ப்பாணம் வந்து சென்றார். பலாலியில் விமானத்தை நிறுத்தி விட்டு வாகனத்திலேறிய திருமதி இரத்தினம் யாழ்ப்பாண உணவு சாப்பிட ஆசையாக இருக்கிறது எங்காவது தரமான யாழ்ப்பாண உணவுக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றார். நானும் மானிப்பாய் வீதியிலுள்ள ஒரு விடுதியில் 'கூழ்' ஏற்பாடு செய்தேன். நாங்கள் விடுதியை அடைந்த போது கிட்டத்தட்ட மூன்று மணியாகி விட்டது. மேசையிலிருந்த கூழ் களிநிலைக்கு வந்து விட்டது. கூழ் குடித்து முடிந்ததும் அருகில் நின்ற சிப்பந்தியிடம் ஐஸ்கிறீம் கேட்டேன். அவர் முகாமையாளரிடம் ஐஸ்கிறீம் கேட்கிறார் கொடுப்பதா என வினவினார். முகாமையாளர் 'ஓம் கொடு' என அனுமதி வழங்கியதும் எனக்கு ஐஸ்கிறீம் கிடைத்தது. சந்திரன் இரத்தினத்தின் பிரத்தியேக உதவியாளர் சொன்னார் இது ஒரு மோசமான உணவு என்று.

மேலே கூறப்பட்ட சம்பவங்கள் யாவும் நான் நேரடியாக அனுபவித்த விடயங்கள். இப்போது கூறுங்கள் விருந்தோம்பலில் யாழ்ப்பாணத்தாருக்கு நிகர் யாழ்ப்பாணத்தார்தான் என்ற கூற்றுக்கு நூற்றுக்கு நூறு உண்மை என்பதை ஏற்றுக் கொள்வீர்கள்தானே. *

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு கம்பராமாயணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் ''அக்கினிப் பிரவேசம்'' எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா உரை நிகழ்த்தவுள்ளார். (ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் அனுசரணையில் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் எஸ்.குமாரசாமி, எ.ஜெயராமன், எஸ். துரைராசா, எஸ்.செந்தூரன் ஆகியோர் பங்கு பற்றும் இசையரங்கு இடம்பெறும். (ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் தீர்த்தத்திருவிழாவை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ''மூலப் பொருள்'' எனும் தலைப்பில் சுப ஜெயகோபாலசாமி நிகழ்த்தும் சிறப்புச் சொற்பொழிவும், நயினாதீவு [illegible] அறநெறிப் பாடசாலை, [illegible] நாகபூசணி அம்பாள் அறநெறிப் பாடசாலை ஆகியன பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (வ-313)

* * *

யாழ்ப்பாணம், ஓக.28

இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மகேஸ்வரன் மணிமண்டபத்தில் தெய்வீக இசையரங்கு இடம் பெறவுள்ளது.

இதில் சங்கீதா தில்லைநாதனின் பாட்டுக் கச்சேரியும் கே.இசைப்பிரியன் (கீபோட்), ஆர்.வசந்தன் (நாதஸ்வரம்), கே.கண்ணதாசன் (மிருதங்கம்), ஆர். ஆனந்தகணேசன் (தவில்) ஆகியோர் [illegible] வாத்திய சங்கமம் இடம் பெறும். (வ-313)

# சமய சொற்பொழிவும் கலை நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவ காலத்தில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் சமய சொற்பொழிவும் கலை நிகழ்வும் இன்று மாலை 6 மணிக்கு நல்லை ஆதீன திருஞானசம்பந்தர் கலா மண்டபத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ..இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி கலந்துகொள்ளவுள்ளார் என்று மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி அறிவித்துள்ளார். கலை நிகழ்வில் இந்தியக் கலைஞர்கள் பங்கெடுக்கவுள்ளனர். (உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இந்தப் புறக்கணிப்பின் நியாயம் என்ன?

போர் முடிவுக்கு வந்தபின்னர், அதனால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு, சீர்கெட்டுப் போயுள்ள வடக்கின் உட்கட்டுமானங்களை முந்திய நிலைக்கு மீள்விப்பதற்கு 2,000 கோடி அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்தப் பணத் தொகையையும் தாண்டி நிதித் தேவை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பணம் வெவ்வேறு நாடுகளில் இருந்தும் நிதி நிறுவனங்களிடம் இருந்தும் நீண்டகால மற்றும் குறுங்காலக் கடன்களாகப் பெறப்பட்டவை. எவ்வாறேனும் இன்னும் இரண்டு வருடங்களில் வடக்கில் முழுமையான அபிவிருத்தியைச் செய்யவுள்ளோம். -

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாக நாடாளுமன்றில் அறிவித்தபோது ஆற்றிய உரையில் தெரிவித்திருந்தார்.

அதற்கு முன்னர், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில், அரச கட்சியான பொது சன ஐக்கிய முன்னணிக்கு, தெற்கின் அம்பாந்தோட்டையில் கிடைத்த வாக்குகளை விட, வடக்கின் நெடுந்தீவு பிரதேச சபைக்கு அக் கட்சிக்கு அதிக வாக்குகள் கிடைத்தமையினால், அதற்கு அதிகூடுதல் நிதி ஒதுக்குமாறு ஜனாதிபதி அறிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் இக்கருத்துகளுக்கும் அறிவிப்புகளுக்கும் மத்தியில், வடக்கில் கடந்த மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தலில் தமது கட்சி வெற்றியீட்டிய மூன்று பிரதேச சபைகளின் அபிவிருத்திக்கே அவர் கூடுதல் நிதியை வழங்க உள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்தபோது மேற்கண்ட விடயத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் வடக்கில் நடைபெற்று முடிந்த பின்னர், யாழ். மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை முதல் முறையாக நடைபெற்றது. மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் குழுக் கூட்டங் களுக்கு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படுவது நடைமுறை வழக்கம். ஆனால் வியாழனன்று நடைபெற்ற கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை.

அத்தோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பதின்மூன்று பிரதேச சபைகளின் தலைவர்கள், உபதலைவர்களும் மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக்குழுக் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் அரச தரப்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மூன்று பிரதேச சபைகளின் தலைவர்கள், உப தலைவர்கள் மட்டுமன்றி உறுப்பினர்களும் அழைக்கபட்டிருந்தனர்.

போரின் காரணமாக உட்கட்டுமானங்கள் மிகப்பெரிய அளவில் சீரழிந்துபோன மாவட்டங்களில், யாழ்ப்பாண மாவட்டமும் பிரதானமானது. பிரதேச சபைகள், நகர சபைகள் என்ற வேறுபாடின்றி சகல பிரதேசங்களினதும் அபிவிருத்தி பல வருடங்களால் பின்னடைவு கண்டுள்ளது.

அவ்வாறிருக்க, ஆளுங்கட்சி நிர்வாகத்தைக் கைப்பற்றிய மூன்று பிரதேச சபைகளில் மட்டுமே உட்கட்டுமானங்கள் சீர்செய்யப்பட்டு, அபிவிருத்தி நிமிர்த்தி உயர்த்தப்படும் என்பது அப்பட்டமான ஏகாதிபத்தியப் போக்காகும். ஏனைய பிரதேசங்கள் - அதாவது வடக்கின் எண்பத்தொரு சதவீதமான பிரதேசங்களின் மீள்கட்டுமானமும் அபிவிருத்தியும் புறக்கணிக்கப்படுவது யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு எதிரான அப்பட்டமான ஜனநாயக விரோதமான சதி. இல்லை அதற்கும் அப்பால் சர்வாதிகாரம். மாவட்டத்தில் உள்ள மக்கள் அரசாங்கக் கட்சிக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக, அவர்களை வஞ்சம் தீர்க்கும், பழி தீர்க்கும் அராஜகமும் ஆகும்.

யாழ்ப்பாணத்தில், உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் அரசாங்கக் கட்சி வெற்றியீட்டிய பிரதேசங்களில் மட்டுமே அபிவிருத்தி என்றால், சர்வதேச நாடுகள் வழங்கிய நிதி உதவி மற்றும் கடன் வசதிகளில் தென்பகுதிக்கு ஒதுக்கப்படப் போகிறதா?

அவ்வாறாயின், இது குறித்து நிதி உதவி வழங்கிய நாடுகளுக்கு குறிப்பிட்ட பதின்மூன்று பிரதேச சபைகளும், அவர்கள் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முறைப்படி அறிவித்து, ஆட்சேபம் தெரிவித்து, நிதி ஒதுக்கீடுகளை நிறுத்தக் கோருவதை விட வேறு வகையிலான மார்க்கம் இல்லை.


இது வெறும் அரசியல் சமாசாரம் இல்லை. போரினால் நொந்து, நொடிந்து மீண்டும் வாழ்வியலின் சகல துறைசார் வளர்ச்சியை நாடி நிற்கும் மக்களை அதனை எய்தவிடாது தடுத்து ஆழக்குழிக்குள் அமிழ்த்தும் அராஜகமாகும்.

ஜனநாயகப் பண்புகளுக்கு ஏற்ப, தமது பிரதேசத்தின் மீள் எழுச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவுவார்கள் என்று தாம் நம்பிக்கை வைத்துள்ள தரப்பினரை உள்ளூராட்சிப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்தார்கள் என்பதற்காக -

மக்களை, பிரசைகளைப் பாரபட்சப்படுத்திப் புறக்கணிக்க எந்தவொரு ஜனநாயக நாட்டினதும் அரசுக்கும் அதிகாரம் இல்லை. இதனை வெளிநாடுகள், குறிப்பாக நிதி வழங்கிய நாடுகள் மிகவும் நன்கறியும்.

இப்போதே, கால தாமதம் செய்யாமல், யாழ். மாவட்டத்தில் உள்ள சம்பந்தப்பட்ட பதினாறு உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயலில் இறங்க வேண்டும். இல்லையேல் பாதிக்கப்படவிருப்பவர்கள் மக்களே.

# தொண்டமானாறு செல்வச்சந்நிதி பெருந்திருவிழா நாளை ஆரம்பம்



வடமராட்சி, ஓக. 28

பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை திங்கட்கிழமை காலை 9.20 மணிக்கு பிரதமையுடன் கூடிய சுப வேளையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

நாளை மாலை 5 மணிக்கு இரண்டாம் திருவிழாவும், எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விநாயகரும் வேலவரும் எழுந்தருளும் 5 ஆம் திருவிழாவும் 6 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு 10 ஆம் திருவிழாவான பூங்காவனத் திருவிழாவும், 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு 11 ஆம் திருவிழாவான கைலாச வாகனத் திருவிழாவும்

10ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 5 மணிக்கு மௌனத் திருவிழாவும் இடம்பெறுவதுடன் பெருந்திருவிழா நிறைவடையும்.

பெருந்திருவிழாக் காலத்தில் தினமும் காலைத் திருவிழா 8மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 5மணிக்கும் நடைபெறும். உற்சவகால பிரதம குருவாக சிவஸ்ரீ சிவானந்த ஐயர், செல்வமணிஐயர் பணியாற்றுவர்.

சந்நிதி பெருந்திருவிழாக்காலத்தில் சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமம் உட்பட அனைத்து அன்னதான மடங்களிலும் அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெருந்திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்கள் வசதிகருதி விசேட போக்குவரத்து, சுகாதார, குடிதண்ணீர், பாதுகாப்பு வசதிகள் யாவும் செய்யப்பட்டுள்ளன. திருவிழாக்காலத்தில் ஆலயத்துக்கு வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது. ஆலயத்துக்கு வரும் வாகனங்கள் யாவும் கிழக்கு வீதியின் எல்லைப் புறத்திலும், வடக்கு வீதிக்கு அப்பாலும் தரித்து நிற்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கிழக்குப்புற வீதியில், தொண்டமானாறு- துன்னாலை வீதிக்கு அண்மித்த பகுதியில் தற்காலிக இ.போ.ச.பஸ் நிலையமும், தனியார் பஸ் நிலையமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சந்நிதி ஆற்றில் நீந்துவோர் மறுபுற எல்லைக்குச் செல்லக்கூடாது என்றும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (த-236)



நல்லூர் முருகனின் தேர்த்திருவிழாவான நேற்று தேர் அசைந்து வருகையில் விமானப்படையினர் ஹெலியிலிருந்து பூமாரி பொழிவதை படத்தில் காணலாம். (7-86)

# நல்லூரில் 'ஹெலி'யைக் கண்டு அழுது குழறிய சின்னஞ்சிறுசு!

யாழ்ப்பாணம், ஓக. 28

நல்லூரில் நேற்று முருகப் பெருமான் தேரில் பவனி வந்த வேளையில், வான் பரப்பில் பிரவசித்த ஹெலிக்கொப்டரைக் கண்டு சிறுவர், சிறுமியர் சிலர் குழறத் தொடங்கி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு அருகில் நடந்த ஒரு சம்பவத்தை விவரிக்கிறார் ஒருவர்:

''அம்மா போவம், போவம்; பயமாய் இருக்குப் போவம்'' என்று அழத் தொடங்கி விட்டான் சிறுவன் ஒருவன். ஹெலியில் இருந்து பூமாரி பொழிய அந்தச் சிறுவன் என்னவென்று தெரியாமல், புரியாமல் பெற்றோருக்கு இடையில் புகுந்து பதுங்கிக் கொண்டான்.

இரண்டாவது தடவையாகவும் ஹெலி வர, தந்தையை இறுக்கமாகக் கட்டிப் பிடித்துக் கொண்டு, அழத் தொடங்கிவிட்டான் சிறுவன்.

பெற்றொரும் அருகில் இருந்தவர்களும் அவனைச் சமாதானப் படுத்தினர். ''சுவாமிக்கு ஹெலியில் இருந்து பூபோடுகினம் பயப்படாதே குஞ்சு'' என்று அவர்கள் கூறியபோதும் அவன் அழுகை நிற்கவில்லை. தொடர்ந்து அழுது கொண்டிருந்தது அந்தச் சின்னஞ் சிறுசு.

அருகில் நின்ற பெண்மணி ஒருவர்; ''செய்யிறதை எல்லாம் செய்துபோட்டு, இப்ப பூ போட வந்திட்டினம்'' என்று கூறிக் கொண்டிருந்தார்.

விசாரித்ததில் சிறுவனின் குடும்பம் முள்ளிவாய்க்காலில் சிக்கி, உறவினர் பலரை இழந்து மீண்டு வந்தவர்கள் என்று தெரிய வந்தது. (ஒ)

# பருத்தித்துறை நகரசபையின் கூட்டம் நாளை

வடமராட்சி, ஓக. 28

பருத்தித்துறை நகர சபையின் முதலாவது கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு, சபைத் தலைவர் சட்டத்தரணி சபா ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை நகரசபை அலுவலகம் ஆத்தியடியில் உள்ள தனியார் வாடகை வீட்டில் இயங்கி வருவதால் கூட்டம் நடத்துவதற்கான சபா மண்டபம் இல்லாத நிலையில், நகர பொது நூல் நிலைய கட்டடத்தில் தற்காலிகமாக சபா மண்டபம் ஒன்றை அமைத்துள்ளது.

பொது நூல் நிலையத்தின் பின் பகுதியில் நூல் நிலையத்துடன் இணைந்த சிறிய கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டு கூட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தற்காலிக சபா மண்படத்தில் சபைக் கூட்டங்கள் இடம்பெறும் என நகரசபைச் செயலாளர் எஸ். செவ்வேள் தெரிவித்தார்.

முதலாவது கூட்டத்தில் கலந்துகொள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த இரு உறுப்பினர்களும் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. (த-236)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேவை

## சிரேஷ்ட உதவி ஆசிரியர்கள்
(3 வருட அனுபவம்)

## உதவி ஆசிரியர்கள்
(ஒரு வருட அனுபவம்)

## செய்தியாளர்கள்
(ஒரு வருட அனுபவம்)

## ஒப்புநோக்குநர்கள்
(அனுபவம் உள்ளோர்)

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

uvacancies@gmail.com



# Investment Opportunity

## முதலீட்டு வாய்ப்பு

Partner with a Leading Higher Education Institution in SriLanka & Invest in their new Jaffna Campus

இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்து Jaffna Campus திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்.

சர்வதேச பல்கலைக்கழகங்களினூடான இணைப்பு, முதலீட்டு சபையின் (BOI) அங்கீகாரம் மற்றும் இலங்கையில் வெளிநாட்டு பட்டப்படிப்புகளை வழங்குவதற்கான அனுமதி என்பவற்றோடு உயர் கல்வித் துறையில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்துடன் கூடிய இலங்கையின் முன்னணி உயர் கல்வி நிறுவனம் நாட்டின் தெரிவு செய்யப்பட்ட நகரங்களில் எமது கற்கை வளாகங்களை (Campus) அமைக்கவுள்ளது.

உடனடியாக அமைக்கப்படவுள்ள Jaffna Campus இல் முதலீடு செய்யக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் முதலீட்டுத் தொகை ரூபா 10 மில்லியன் அல்லது Campus அமைக்கப் பொருத்தமான கட்டட வசதியும் முதலீட்டுத் தொகையும் ( Campus முகாமைத்துவத்தில் பங்கேற்கக் கூடிய முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

ஆர்வமுடையவர்கள் investcampus@gmil.com என்ற மின்னஞ்சல் முகவரியோடு தொடர்பு கொள்ளவும்.


## நெடுந்தீவில் தையல் பயற்சி நிலையம்

நெடுந்தீவில் புதிதாக அமைக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையம் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை திறந்து வைக்கப்படும்.

நெடுந்தீவில் உள்ள வசதி குறைந்த மக்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாக நெடுந்தீவு கடற்படையினர் இந்த நிலையத்தை அமைத்துள்ளனர்.

(த-111)

## திருட்டு முயற்சி முறியடிப்பு

நவாலி, ஓக.28

ஆனைக்கோட்டை நவாலிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு திருடர்களின் நடமாட்டத்தால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்துடன் அன்றைய பொழுதைக் கழிக்க வேண்டியிருந்தது.

ஆனைக்கோட்டையிலுள்ள சோம சுந்தரம் வீதியில் நேற்று முன்தினம் இரவு பொல்லுகள், தடிகளுடன் வீடொன்றுக்குள் சிலர் நுழைந்த போது திடீரென வீட்டுக்காரர் விழித்தெழுந்து சத்தமிடவே அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

அன்று இரவு நவாலி களையோடை அம்மன் ஆலயத் தடியில் உள்ள வீடொன்றுக்குள் திருடர்கள் நுழைவதற்குத் தயாரான போது அவர்கள் கதைக்கும் சத்தம் கேட்டு விழித்தெழுந்த வீட்டுக்காரர் அயல் வீட்டுக்காரரின் உதவியுடன் இவர்களைப் பிடிப்பதற்குப் பதுங்கி சென்ற போது அந்த முயற்சி பலனளிக்கவில்லை. இதனால் அவர்கள் தப்பிச் சென்று விட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-100)


# விநியோகஸ்தர் தேவை
(Distributor)

பிரபல தனியார் மருத்துவக் கம்பனிக்கு விநியோகஸ்தர் தேவை.
களஞ்சிய வசதிகள் (யாழ்/ கிளிநொச்சி), வங்கி உத்தரவாதம் கொடுக்கக்கூடியவர்.

தொடர்பு கொள்ளவும் : 075 7627030



# EXTERMINATORS
THE ULTIMATE PEST CONTROL SERVICE PROVIDER



உங்களது நிலத்திலே கறையான் தொல்லையா?

10 Years Warranty

புதிதாக கட்டடங்களை அமைப்பவர்களும்,
ஏற்கனவே கட்டடங்களை அமைத்தவர்களும்
கறையான் தொல்லையால் அவதிப்படுகிறீர்களா!!!
கவலை வேண்டாம் நாங்கள் 10 வருட
உத்தரவாதத்துடன் தீர்வினை வழங்குகின்றோம்

'FREE' INSPECTION: CALL TO
N.Rubakanth - 0771051668

Exterminators PEST-CONTROL

www.pestcontrol.lk

Tele: Jaffna +94771051668, Colombo 0115760760, Bambalapitiya 0117760760

இப்பொழுது எமது சேவை வெற்றிகரமாக யாழ் குடாநாட்டிலும்

ISO 9001;2008 ISO 14001;2004 & OHSAS CERTFIED



# STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY

UK → பல்கலைக்கழகத்தில் குறைந்த கட்டணம் + 20 Hrs. PT + Paid Internship
USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0
CANADA → IELTS, Sponsor தேவையில்லை. No age limit, Work Permit Available
POLAND → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
GERMANY → பகுதி நேர தொழில் வாய்ப்பு + PR +With / Without IELTS
CYPRUS → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.

Next Intake: Oct.2011

UKRAINE - Aerospace ,Aeronautical Eng, MBBS, Nursing, Tele communication, Bio Medical Science at lower cost + 1Year Free Accommodation
No need Sponsor

பஸ்னா - 0778 438403

READ International
E-mail: read.int@gmail.com

No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)


# ஓராண்டு நினைவஞ்சலி

## பிரம்மஸ்ரீ சிவகணேசக் குருக்கள் ஸ்கந்தசிவரூப சர்மா



மலர்வு: 26.05.1989
உதிர்வு 08.09.2010
திதி: 28.08.2011

ஓராண்டென ஒரு யுகம் சென்றிடினும்
தீராது உன் நினைவுகள்
உன் உறவு உடைந்தாலும்
உன் நினைவு உடையாது
தாயைப் பிரியாத தனயனாய்
எம்மைப் பிரியாத தமையனாய்
உறவுகளோடு ஒன்றிய உந்தன்
உயிரது பிரிந்ததேனோ?
காலமது நகர்ந்தாலும் ஓலமது குறைந்தாலும்
ஞாலமெங்கும் உன் சிரிப்பை தேடுகின்றோம் நாமிங்கு
இளவயதில் மரணம் தழுவி
இளமனங்களை வாட்டுகின்றாய்
மண்ணிலே உன் வாசம்
கண்ணிலே உன் சோகம்
கந்தனவன் புகழ்பாட – எம்
பந்தங்களை விட்டகன்றாய்
என்றென்றும் உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

வண்ணைப்புரம், சிவன்கோயில்,
அராலி சந்தி, வட்டுக்கோட்டை.

உன் நினைவுடன்,
பெற்றோர், சகோதரர்கள், உ...


## வீடு விற்பனை

நல்லூரில் 5 பரப்பில் நவீன முறையில் கட்டிய வீடு விற்பனைக்குண்டு. தரகர்கள் தவிர்ந்தோர் தொடர்பிற்கு :

072 681 6886



## தளபாடம் விற்பனைக்கு

உயர்தர மரத்தினால் மொறட்டுவவில் உருவாக்கிய வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு. தொடர்புகட்கு


# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## சின்னட்டி இராசதுரை

திதி:அமாவாசை



தோற்றம் 19.06.1938

மறைவு 11.09.2007

பண்பின் உயர்விடமாய்
பாசத்தின் நிறைகுடமாய்
பரிவுடனே எம்மை வளர்த்து
பாரினிலே உயர வைத்தீர்
அன்பின் திருவுருவே
ஆண்டு பல சென்றிடினும்
அப்பாவே நீர் எமக்கு
அணையாத தீபம் தான்

நிற்சாமம்,
சங்கானை மேற்கு,
சங்கானை.

என்றும் உங்களை மறவாத
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதூரமான குற்றச்சாட்டுக்களைச் சோடித்து அப்பாவிகளைச் சிறைவைக்க பொலிஸார் முயற்சி

## நீதிமன்றில் சட்டத்தரணி சிறீகாந்தா கடும் வாதம்

யாழ்ப்பாணம், ஓக. 28

அவசர காலச் சட்டமும் குற்றவியல் தண்டனைச் சட்டமும் அமுலில் இருந்த போதும் சாதாரண சட்டத்தின் கீழ் பாரதூரமான குற்றச்சாட்டுக்களைப் பதிவுசெய்து இந்த அப்பாவிகளான பொதுமக்களை தொடர்ந்தும் சிறையில் அடைத்து வைக்க வேண்டும் என்பதாலேயே பொலிஸார் திட்டமிட்டு இந்த வழக்கை சோடித்துள்ளனர் எனச் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சிறீகாந்தா தெரிவித்தார்.

நாவந்துறை அசம்பாவிதங்கள் தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் இரண்டாவது தடவையாக யாழ். மாவட்ட நீதிபதியின் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அப்போது யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா இரண்டாவது தடவையாகவும் குற்றப்பத்திரிகை ஒன்றை மன்றில் சமர்ப்பித்தார்.

அரசுக்கு எதிரான சதித்திட்டம் ஒன்றை வகுத்து செயல்பட்டமை, சட்டவிரோதமாக கூட்டம் கூடி பொலிஸாரைத் தாக்கி காயப்படுத்தியமை, அரச உடைமைகளுக்குச் சேதம் விளைவித்தமை தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றாஞ்சாட்டுக்கள் மிகவும் பாரதூரமானவை. இதன் அடிப்படையில் நீதிவான் நீதிமன்றத்துக்கு இவர்களுக்குப் பிணை வழங்கும் அதிகாரம் கிடையாது-என்றார் சமன் சிகேரா.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் பிரிவினர் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். எனவே இவர்களைப் பிணையில் விடுவதை ஆட்சேபிப்பதாகவும், பிணை வழங்கக் கூடாது என்றும் குறிப்பிட்ட தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தாக்குதலை நடத்திவிட்டு பலர் ஓடிய போதும் சந்தேகத்தின் பேரிலும் சிலர் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் 18பேரை பிணையில் விடுதலைசெய்ய ஆட்சேபனை இல்லை என்றும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான 32 சட்டத்தரணிகளுள் ஒருவரான சிறீகாந்தா இதனைக் கடுமையாக ஆட்சேபித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

சந்தேக நபர்கள் அரசுக்கு எதிரான ஒரு செயலில் ஈடு பட்டனர், பொதுச்சொத்துக்களை சேதப்படுத்தினர், பொலிஸாரைத் தாக்கிக் காயப்படுத்தினர் என்று பல குற்றச்சாட்டுக்களைப் பொலிஸார் முன்வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற போது அவசர காலச் சட்ட மும், குற்றவியல் தண்டனைக் கோவைகள் சட்டமும் அமுலில் இருந்தன. பொலிஸார் அந்தச் சட்டங்களின் கீழ் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்க முடியும்.

ஆனால் பொலிஸார் அப்படிச் செய்யவில்லை. இந்த அப்பாவிகளைப் பிணையில் விடாமல் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைத்திருக்க வேண் டும் எனச் சட்டத்தின் வளைவு நெளிவுகளைத் தேடிச் சாதராரண சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்கள் மரண தண்டனை அல்லது 20 வருட ஆயுள் தண்டனை வழங்கப்பட வேண்டிய வகையில் குற்றச்சாட்டுக்களைச் சோடித்துள்ளனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் அனைவருமே பாதுகாப்புப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டவர்கள். நீதிபதி அவர்கள் இந்த சந்தேக நபர்களை நேரடியாகப் பார்த்தபின் அவருடைய உத்தரவின் பேரிலேயே அவர்கள் வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டனர்.

இங்கே ஆஜர்படுத்தப்பட்டவர்களைப் பாருங்கள். நடக்க முடியாதவர்களும், பார்வை அற்றவர்களும் கூட கைது செய்து தாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அரசுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் என்று பொலிஸார் கூறுகின்றனர். பொலிஸார் இவர்களைத் தாக்கவில்லையாம். இராணுவத்தினர் ஒரு துப்பாக்கி ரவையைக் கூடப் பயன்படுத்தவில்லையாம். அப்ப டியானால் இவர்களுக்கு எப்படி இந்தக் காயங்கள் ஏற்பட்டன. பொலிஸார் எந்த அடிப்படையில் வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தாலும் அவற்றின் உண்மைத் தன்மை அறிந்து பிணை வழங்கும் அதிகாரம் இந்த நீதிமன்றத்துக்கு உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேவேளை நீதிபதி அவர்கள் சம்பவம் நடந்த இடத்தை நேரடியாகப் பார்வையிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என்றார் சட்டத்தரணி சிறீகாந்தா.

இதனைத் தொடர்ந்து நாவாந்துறைக் கிராமத்தின் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்த்தபின் சந்தேக நபர்களுக்கு நிபந்தனையுடன் பிணை வழங்கித் தீர்ப்பளித்தார் நீதிபதி. சந்தேக நபர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம் தலைமையில் ஏ.முத்துக்கிருஷ்னண், திருமதி லிங்கா துரைராசா, பி.தவபாலன், கே.கனகசிங்கம், செல்வி தேவி இராஜப்பு, பி.சுந்தர லிங்கம், ஏ.ராஜரட்ணம், பி.கே.அன்ரனி, மு.றெமீடியஸ், பி.குகனேஸ்வரன், என்.அரியபுத்திரன், ஜே.ஜெரூபன், பி.பார்த்தீபன், கே.சயந்தன், செல்வி சி.கிருஸ்ணவேணி, ஏ.அற்புதராஜ், ஜொனி மதுரநாயகம், ஜி.அபிமன்யு, செல்வி கே.நீபூஷா, சி.வி.விவேகானந்தன், என்.ஸ்ரீகாந்தா, வி.புவிதரன், அன்ரன் புனிதநாயகம், சிவசுப்பிரமணியம், வரதராஜா, குமாரசாமி, வேலாயுதம், திருமதி க.அபிமன்யு, விஸ்வலிங்கம், கே.கேசவன் வி.ரி.சிவலிங்கம், திருமதி ஸ்ரீ.சர்மினி, ஜெயக் குமார் ஆகிய சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகினர். (த-2-4-14)

## மர்மப் பொருள் வெடித்து வாகனத்தின் ரயர் சேதம்

யாழ்ப்பாணம், ஓக.28

சரசாலை கனகம் புளியடிச் சந்தியில் மர்மப்பொருள் ஒன்று வெடித்ததில் வீதியால் பயணித்த வாகனத்தின் ரயர் பிரிந்தது.

வீதி அகலிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 'பைக்கோ' வாகனத்தின் ரயரே இவ்வாறு பிரிந்து சேதமடைந்ததாகத் தெரிவிக்கப் பட்டது. நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும், சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும், குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டு பெருமளவு படையினர் அந்த இடத் தில் கூடினர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மீசாலையிலிருந்து புத்தூர் செல்லும் வீதியின் அகலிப்புப் பணியில் வாகனம் ஈடுபட்டிருந்த போதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. (த-207)

## கடையில் காலாவதியான உணவுப் பொருள்களை விற்ற இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஓக.28

காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்துக்காக இரண்டு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு யாழ்.நீதிவான் நீதி மன்றம் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

திருநெல்வேலிச் சந்தியிலுள்ள இரண்டு பலசரக்குக் கடைகளின் உரிமையாளர்களையே இவ்வாறு அபராதம் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காலாவதியான 'பிஸ்கட்' வகைகள் மற்றும் இனிப்புப் பொருள்கள் ஆகியவை விற்பனைக்காகக் கடைகளில் வைக்கப்பட்டிருந்த போது நல்லூர்ப் பொதுச் சுகாதார பரிசோதகர் க.மதனகுமார் மேற்கொண்ட பரிசோதனை நடவடிக்கையில் அவை சிக்கின.

உணவுச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு இந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் இருவரும் கடந்த 25 ஆம் திகதி யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.க.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த வர்த்தக நிலையங்களில் உரிமை யாளர்கள் இருவரையும் தலா மூவாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

(த-4)

## யாழ்.மணிக்கூட்டு வீதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் வடிகால்

யாழ்ப்பாணம், ஓக.28



யாழ். மணிக்கூட்டு வீதியில் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகச் செல்லும் வடிகால் நீண்ட நாள்களாகத் துப்புரவு செய்யப் படாமையால் அதனுள் கழிவுப் பொருள்கள் தேங்கித் துர்நாற்றம் வீசுகிறது.

அத்துடன் அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதுடன் நுளம்பு பெருகக் கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். நகரின் மத்தியில் போதனா வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள மணிக்கூட்டு வீதியில் இந்தப் பிரதான வடிகால் அமைந்துள்ளது. அப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் யாழ். பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் இருந்து வெளியேற்றப்படும் நீர் இந்த வடிகால் ஊடாகவே கடலைச் சென்றடைகின்றது.

இந்த வடிகாலின் துப்புரவுப் பணிகளை யாழ். மாநகர சபையே மேற்கொண்டு வருகிறது. எனினும் நீண்ட நாள்களாக இந்த வடிகால் மாநகர சபையினால் துப்புரவு செய்யப்படவில்லை. அத்துடன் வடிகால் இரு பக்கங்களும் பற்றைகள் வளர்ந்துள்ளன.

இதனால் அப்பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் நுளம்பு உற்பத்தியாக ஏதுவான சூழல் அங்கு காணப்படுகின்றது.

எனவே மாநகரசபை இந்த விடயத்தில் உடன் அக்கறை காட்டி இதனைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-26)

## கண்ணியமான கடமை...



பரிசோதனை: யாழ். சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நேவின் பத்மதேவா கடந்த செவ்வாய் மானிப்பாய் பொலிஸ் நியைத்துக்கு சென்று பொலிஸாரின் ஒழுக்கப் பரிசோதனை மேற்கொண்டார். (த-100)

## மாடிக்கடைத் தொகுதிகளுடன் புதிய பஸ் நிலையம் பளையில்

### ரூ.50 மில்லியன் செலவில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஓக.28

பளை நகரில் 50 மில்லியன் ரூபா செலவில் மாடிக்கடைத் தொகுதிகளைக் கொண்ட புதிய பஸ் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

வடக்கின் துரித மீட்சித் திட்ட நிதியில் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் சி.சிவப்பிரகாசம் தலைமையில் அண்மையில் அடிக்கல் நடும் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் நிரந்தர பஸ் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வடக்கின் துரித மீட்சித்திட்ட நிதியின் மூலம் இந்த பஸ் நிலையத்தை அமைக்கும் பணிகள் விரைவாக முன்னெடுக்கப் படவுள்ளன.

நீண்ட காலத்தின் பின்னர் பளை நகர்ப் பகுதியில் நிரந்தர பஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CEYMED HOSPITAL SERVICES (PVT) LTD.**
*A Ceyline group company.*
No. 514, Hospital Road, Jaffna. Sri lanka.

**வேலை வாய்ப்பு**
சீமெட் வைத்தியசாலை சேவைகள் (பிறைவேட்) லிமிட்டட்.

சுகாதார பராமரிப்புத் துறையில் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் தனது சேவையை யாழ்ப்பாணத்தில் விரிவுபடுத்தியுள்ளது. இளமையான மற்றும் துடிப்பானவர்களை எமது நிறுவனத்தின் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

1. வரவேற்பாளர் / காசாளர் - (ஆண்/பெண்) :- க.பொ.த (உயர்தரம்) (G.C.E. A/L), கணினி அறிவு, அழகான 30 வயதிற்குட்பட்டவர்கள்.
2. உதவியாளர்கள் - (ஆண்கள்) வயதெல்லை : 20 - 30. மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தமிழ் ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் சரளமானவர்கள் விரும்பத்தக்கது.

Forward your CV within 10 days via e - mail or under registered post to:
**Branch Manager,**
Ceymed Hospital Services (Pvt) Ltd.
No. 514, Hospital Road, Jaffna. E- mail : ccj400@ceymed.lk

# விபத்தில் படுகாயமடைந்த நிலையில் முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஓக.28

வாகன விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் சிகிச்சை பயனளிக்காது நான்காவது நாளான நேற்று அங்கு மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் கந்தரோடை மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த வ.கிஷ்ண பிள்ளை (வயது 72) என்பவரே மரணமானார்.

கோண்டாவில் டிப்போவை அண்மித்து கடந்த செவ்வாய்க்கிழமை காரும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இவர் படுகாயமடைந்தார்.

உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் சிகிச்சைக்கா அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் மரணமா னார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக் கப்பட்டது.

(த-4-7)

**காணி விற்பனைக்கு**
நாவாந்துறை வீதி, காக்கை தீவில் தென்னந்தோட்டம் 30 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 5743885



## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை அதிபர் திருமதி
சந்திராவதி பாலகிருஷ்ணன்
அவர்களின் பாசமிகு சகோதரன்
**அமரர் கிருஷ்ணசுவாமி ஆத்மநாதன்**
அவர்களின் பிரிவால் துயருறும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தருமபுரம், பரந்தன்.
ஆசிரியர்கள்,
கிளி/குமாரசாமிபுரம் அ.த.க.பாடசாலை

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநர்
**நாகலிங்கம் பூரணலிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக உறுப்பினர்கள், தீபம் இன்ஸ்ரிரியூட்,
140, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

**DANISH DEMINING GROUP**

## விலைமனுக் கோரல்

DDG நிறுவனமானது தனது நிறுவனப் பயன்பாட்டிற்காக (வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கான) ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் வாகனங்களிற்கான விலை மனுக்கோரலை கோருகிறது.

1. கன்ரர் வகை வாகனம்
2. கயஸ் வகை வாகனம் ( நாற்சக்கர வலுப்பயன்பாடு விரும்பத்தக்கது)
3. நாற்சக்கர உழவு இயந்திரம் சுமைப் பெட்டியுடன்
4. நீர்த்தாங்கி (வாகனத்துடன் / நாற்சக்கர உழவு இயந்திரத்துடன்)

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழுவுடன் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்ற ஆர்வமுடையவர்கள் கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

அனுப்ப வேண்டிய இறுதித் திகதி – 02.09.2011 நண்பகல் 12.00 மணி

1. அமையவியலாளர்:
டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழு, இல-456, பிரதான வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல் – logjaffna@ddg.lk
2. அமையவியலாளர்:
டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழு, கற்பகபுரம் பம்பைமடு
வவுனியா.
மின்னஞ்சல – logvavuniya@ddg.lk

ஒப்பந்த அடிப்படையிலான வாகன விலை மனுக்கோரல் படிவம்

| இல | வாகன வகை | வாகன பதிவிலக்கம் | வாகனம் தொடர்பானபிற தகவல்கள் | நாளாந்த வாடகை எரிபொருள் நீங்கலாக |
|---|---|---|---|---|
| | | | இயந்திர இயலளவு<br>AC வகை<br>இருக்கை விபரம் | |

வேண்டுகையாளர் முகவரி:

தொலைபேசி இல: 1. ..........................

2...........................

ஒப்பம் : ............ திகதி:...................

பிற்குறிப்பு :

வாகன ஒப்பந்தத் தெரிவானது வாகனத்தின் தன்மை, வலு, தரம் ஏற்றுக்கொள்ளத்தக்க கட்டணக்கோரல் (வாடகை) போன்றவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

நிறுவனம் கோருமிடத்து வன்னியில் தரித்து நின்று பணிபுரிய ஆயதத்தமாக இருக்க வேண்டும்.

வன்னியில் சேவையாற்றும் காலகட்டத்தில் சாரதிக்கான இருப்பிட வசதி மாத்திரம் இலவசமாக செய்து கொடுக்கப்படும்.

மாதாந்தம் 22 நாள் தொடக்கம் 24 நாள்வரை வேலைநாளாக இருப்பதுடன் வேலை நாட்களில் வாகனங்கள் எமது அலுவலகத்திலேயே நிறுத்தப்படவேண்டும்.

புராமரிப்புச் செலவுகள் யாவும் வாகன உரிமையாளரால் மேறுகொள்ளப்படல் வேண்டும்.

கடமை நேரம் காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரையாகும்.

மேலதிக விவரங்களுக்கு:
டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழு,
யாழ்ப்பாணம் காரியாலயம்
தொ.பே.: 0212228181/ 0777289753

டெனிஸ் கண்ணிவெடி
அகற்றும் குழு
வவுனியா காரியாலயம்,
தொ.பே.: 0264923584/
0776900767

# பல்கலைக்கழக மாணவி விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக.28

மோட்டார் சைக்கிள் ஹையேஸ் வான் விபத்தில் மோட்டார் சைக் கிளில் சென்ற மருத்துவபீட மாணவி காலில் படுகாயமடைந்து சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து யாழ்ப்பாணம் நாவலர் வீதிச் சந்தியில் நேற்று மதியம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் சங்கானையைச் சேர்ந்த செல்வி பு.தேவ ரஞ்சனா (வயது -24) என்பவரே படுகாயமடைந்தார்.


இவர் யாழ். பல்கலைக்கழக இறுதி ஆண்டு மருத்துவபீட மாணவியாவார்.

விபத்தினை அடுத்து அவர் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

(த-4)

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வைத்திலிங்கம்
சிங்கவேலு
(முன்னாள் உரிமையாளர்,
எரிபொருள் நிலையம்,
மருதனார்மடம்)
தோற்றம்: 05.11.1917
மறைவு: 18.07.1990
திதி: 28.08.2011



அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர்.
(7317)
அவரது பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கார் விற்பனைக்கு

FOR PERMIT HOLDERS.

**City Car Sales (PVT) LTD**
Drive a great deal...



- BUY YOUR DREAM VEHICLE FROM US.
- யப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து தரப்படும்.
- மிகச் சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- SPECIAL OFFERS FOR PERMIT HOLDERS.

City car sales Limited.
Colombo. 6
Contact : Mr. Senthil.
Tp : 0772 365177
e -mail : msenthil1917@gmail.com



## மணமகன் தேவை

யாழ். தெல்லிப்பழையில் பிறந்து வளர்ந்து தற்போது அமெரிக்காவில் பிராஜாவுரிமைபெற்று, 2003 ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்து வரும் மகளுக்கு பெற்றோர் மணமகன் தேடுகின்றார்கள். மணமகள் 1986 ஆம் ஆண்டு பிறந்தவர். 5'9'' உயரமுடையவர். G.C.E: O/L சித்தி பெற்று தற்போது அமெரிக்காவில் படித்துக்கொண்டும், பகுதிநேரவேலை செய்துகொண்டுமிருக்கிறார். செவ்வாய் குற்றமற்ற கிரகபாவம் குறைந்த ஜாதகம்.

மணமகன் படித்த 6' உயரம் அதற்குமேல் நல்ல ஆங்கில அறிவுடைய, அமெரிக்காவில் தொழில் புரியக்கூடியவராக இருக்க வேண்டும். யாழ். இந்து கௌரவகுடும்பம், டாக்டர், கம்பியூட்டர் என்ஜினியறிங் மற்றும் வைத்தியத்துறை போன்ற துறைகளில் தொழில்புரியக்கூடியவர் பெரிதும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
பரா - பாலு தொ.பே.: 0215100289, 0777174563

## யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக ஓர் சர்வதேச இன்னிசைப் பெருவிழா!

LIVE PRAISE AND WORSHIP

இதுவரை இல்லாத
அரங்கம் அதிரும்.... Drama
சிந்தனையைத் தூண்டும் ... செய்தி
பிரவேசம் இலவசம்.

ஓகஸ்ட்
30, 31
தினமும் மாலை 4.00

போதகர்: ஆல்வின் தாமஸ்
துதி, ஆராதனை, செய்தி

**FREEDOM II**

For more Details
Visit: www.ruahfreedom.com
Call: 0777 238300, 077 4683217

யாழ்ப்பாணம்
AUGUST
ஏஞ்சல் சர்வதேச கல்லூரி
மானிப்பாய், யாழ்ப்பாணம்.
Angel International School
Manipay, Jaffna.



விசேஷித்த வாலிபர் ஆராதனைக் கருத்தரங்கு 30, 31 ஓகஸ்ட் 9.00 A.M -12.30 P.M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பாலே தலை சிறந்தது கொடுக்க ஊக்குவியுங்கள்



தாய்ப்பாலூட்டலின் அவசியம், மற்றும் நன்மைகள் பற்றி தாய் மாருடன் கர்ப்பகாலத்தி லும் பிள்ளைப்பேற்றின் பின்னரான காலத்திலும் விளக்கப்படு வதே இதுவரை பொது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் தம்மாலியன்ற வரை தாய்ப்பாலூட்டலின் அவசியம், நன்மைகள் பற்றி எடுத்துக் கூறு வது இந்த வருடத்தின் தொனிப் பொருளாக சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. தாய்ப் பாலூட்டலை ஊக்கப்படுத்துவதில் தமது பங்களிப்பை ஏனை யோரும் வழங்குவதை ஊக்குவிப்பதே இதன் நோக்கம்.

அதாவது குடும்ப அங்கத்தவர்கள், பராமரிப்பாளர்கள், சமூக அங்கத்தவர்கள், சமூகத் தலைவர்கள் போன்றோர் தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கவும் தாய்ப்பாலூட்டுவதற்கான உரிய கவனிப்பையும் ஆதரவையும் வழங்குவதற்கும் முன்வர வேண்டும். தாய்ப்பாலூட்டல் பிள்ளையின் வளர்ச்சி மற்றும் ஆரோக்கிய வாழ்விற்கு மாத்திரம் முக்கியமானதல்ல. அதைவிடவும் சூழல் பாதுகாப்பு, பெண்களின் உரிமையை நிலைநாட்டுதல் சமூக மேம்பாடு போன்ற வற்றிற்கும் முக்கியமானது.

இலங்கையின் தாய்ப்பாலூட்டலுக்கான தேசிய கொள்கைகளாவன.

* பிறந்து ஒரு மணித்தியாலத்தினுள் தாய்ப்பாலூட்டலை ஆரம்பித்தல்.
* முதல் ஆறு மாதங்களுக்கும் தாய்ப்பால் மட்டுமே வழங்குதல்.
* ஆறு மாதங்களின் பின் உரிய மேலதிக ஆகாரங்களு டன் இரண்டு வயது வரை தாய்ப்பாலூட்டல் (பிரதான உணவு வேளைகளில் திண்ம ஆகாரமே கட்டாயமாக வழங்கப்படல் வேண்டும். மிகுதி நேரங்களில் பிள்ளை கேட்கும்போது தாய்ப்பால் வழங்கப்படல் வேண் டும்)

போன்றவற்றை வலியுறுத்துவதும் தாய்ப்பாலூட்டல் வாரத்தின் முக்கியமான நோக்கங்களாகும்.

### நலம் காக்கும் தாய்ப்பால்

பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதால் குழந்தைக்கு மட்டுமல்ல தாய்க்கும் மிகுந்த நன்மை ஏற்படுகிறது. தாய்ப்பாலில் குழந்தைக்குத் தேவையான அத்தனை சத்துக்களும் தேவையான நோயெதிர்ப்பு சக்திகளும் அடங்கி இருக்கிறது. தண்ணீர், கொழுப்பு, புரதம், குளுக்கோஸ், தாதுப்பொருள்கள் ஆகியவை தாய்ப்பாலில் காணப்படுகிறது.

புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு விட்டமின் சி சத்து கிடைக்காது. ஆனால், தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக ளுக்கு இந்த சத்தும் கிடைத்துவிடுகிறது. பெண்களின் இரண்டு மார்பகங்களும் சேர்ந்து ஒரு நாளைக்கு 100 மி.லீ முதல் 1.5 லீட்டர் வரையில் பால் உற்பத்தி செய்கின்றன.


இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ், கல்சியம், விட்டமின் கள் ஆகியவற்றை மார்பகச் சிற்றறைகள் பிரித்து பாலாக மாற்றுகின்றன. ஆகவே எல்லா வித சத்துக்களும் அடங்கிய பால் குழந்தையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது.

தாய்ப்பால் குடிக்கின்ற குழந்தைகளுக்கு தனியாக வேறு எந்த விதமான சத்துணவையும் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை. பச்சிளங் குழந்தைக்கு குறைந்தது ஆறு மாதம் வரையில் கட்டாயமாக தாய்ப்பால் மட்டுமே கொடுப்பது அவசியம்.

### போதுமான பால் சுரப்பது எப்படி தெரிந்துகொள்வது?

உங்கள் குழந்தை ஒரு நாளைக்கு குறைந்தது ஆறில் இருந்து எட்டு முறை சிறுநீர் கழிக்கிறதா என்று கவனியுங்கள். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை மலம் கழிக்கிறதா என்பதைப் பாருங்கள்.

இப்படிச் செய்தால் அதற்குத் தேவையான போது மான அளவுக்குப் பால் சுரப்பு இருக்கிறது என்பது பொருள். இவ்வாறு தன் வயிற்றுக்குத் தேவையான பால்



குடிக்கும் குழந்தைகள் அசந்து தூங்குவதைப் பார்க்கலாம். அதே சமயத்தில் மாதா மாதம் குழந்தையின் எடை அதிகமாகிறதா என்பதிலும் ஒரு கண்வைத் திருங்கள்.

குழந்தைகள் குறித்து லண்டனில் உள்ள மருந்து ஆராய்ச்சிக் கழகம் ஓர் ஆய்வை மேற்கொண்டது. அந்த ஆராய்ச்சியில் தாய்ப்பாலில் அதிசயிக்கத்தக்க ஆற்றல் படைத்த ஓர் இரசாயனப் பொருள் இருப்பதையும், அது பிறந்த குழந்தையின் செரிமான உறுப்புக்களை பாதுகாக்கவும், குறைகளைப் போக்கவும் பெரிதும் உதவுகிறது என்பதையும் கண்டறிந்தனர். இந்த தாதுப்பொருள் குழந்தை பிறந்தவுடன் சில நாள்களுக்குச் சுரக்கின்ற சீம்பாலில் மிக அதிக அளவில் இருக்கிறது. இது குழந்தையின் குடல் பகுதிகளை மற்ற அமிலச்சுரப்பின் பாதிப்பில் இருந்து பாதுகாக்கின்றது. மேலும் குழந்தை இனிமேல் சாப்பிடப்போகும் உண வுகளை ஏற்றுக்கொள்ளும் விதமாக பக்குவப் படுத்துகிறது என்று அந்த ஆராய்ச்சி மேலும் குறிப்பிடுகிறது. எனவே சீம்பாலை கறந்து வீசிவிடும் பழக்கம் நிறுத்தப்படவேண்டும். சீம்பாலில் நோயெதிர்ப்பு சக்தி அதிகம்.

ஆனால் இதை அறியாத பல பெண்கள் தங்கள் அழகு கெட்டு விடும் என்ற தவறான கண் ணோட்டத்தினால் தாய்ப் பால் கொடுப்பதைத் தவிர்க்கிறனர். குழந்தைக்குத் தாய்ப் பால் கொடுப் பதால் தாய்க்கும், குழந்தைக்கும் இடையிலான உறவு வலுப்படுகிறது. தாய்க்கும், சேய்க்கும் மன அமைதி, மகிழ்ச்சி ஆகியவை ஏற்படுகிறது. கையில் எடுத்து மார்போடு அணைத்து பால் கொடுப்பதன் மூலமாகக் குழந்தைக்கு ஒரு பாதுகாப்பு உணர்ச்சி ஏற்பட்டு அது மனநிறைவோடு காணப் படுகிறது. குழந்தைகள் தாயின் மார்பில் உறிஞ்சி பாலைக் குடிப்பதால் அதன் கன்னம் மற்றும் தாடை எலும்புகள் வலுவடைகின்றன.

அதிக கல்சியம் சத்து நிறைந்த தாயின் பால் குழந்தைகளுக்கு பற்சொத்தை ஏற்படாமல் பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்துகிறது. தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைகளுக்கு ஆஸ்மா மற்றும் தொற்றுநோய்கள் அரிதாகவே ஏற்படுகின்றன. நோய் எதிர்ப்பு சக்தி தாய்ப்பால் குடிக்கும் குழந்தை களிடம் அதிகமாக இருப்பதே இதன் காரணம்.

### உங்களது பிள்ளை திறமையுள்ள குழந்தையாக வளர வேண்டுமா?

உங்கள் குழந்தை உலகம் போற்றும் திறமையோடும். ஆற்றலோடும் வளரவேண்டுமா? சாதனைகள் செய்து பேரும், புகழும் எடுக்கவேண்டுமா? அப்படியென்றால் தாய்மார்களே உங்கள் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுங்கள். ஏன் என்றால் தாயின் பாசத்தோடு தாய்ப்பால் குடித்து வளர்ந்த பிள்ளைகள் பிற்காலத்தில் நல்ல சுறுசுறுப்போடும், புத்திசாலித் தனத்தோடும் இருப்பதைப் பார்க்கலாம். புட்டிப்பால் குடித்த குழந்தைகளை விடத் தாய்ப்பால் குடித்த குழந்தைகள் அறிவுஜீவிகளாக இருப்பதை லண்டன் தேசிய அறிவியல் கழகம் நடத்திய ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

தாய்ப்பாலில் மட்டுமே பொலி அன்சேசுரேட்டட் கொழுப்பு அமிலங்கள் உள்ளன. பசும் பாலில் இல்லாத இந்த அமிலங்கள் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. கர்ப்ப காலத்தில் பெண்களின் உடல் முழுவதும் தோலின் கீழாகச் சேர்த்து வைக்கப்படும் கொழுப்பு தாய்பாலூட்டலைசரிவரச் செய்தால் மட்டுமே பயன்படுத்தப்பட்டும் அப்படி நடந்தால் மட்டுமே தாய் தனது பழைய உடற்திணிவுச் சுட்டிகளின் தோற்றத்தையும் அழகையும் பேணமுடியும். எனவேதாய்ப்

(27 ஆம் பக்கம் பாரக்க)



## நல்லூர் கந்தன் மஹோற்சவம் 25
(தீர்த்தோற்சவம்)

### காண ஆயிரம் கண்ணும் போதாது

நல்லடியார் உள்ளத்தில் உறைந்து நல்லாட்சி புரிகின்ற
நல்லைக்கந்தனே வள்ளி மணாளனே
எத்தனை துன்பங்கள் எம்மைச்சூழினும்
எம் துணை நீரே உம்மை வாழ்த்தும் இந்த பாரே
வண்ணமயிலேறி வெற்றிவேல் தாங்கி
சேவல்கொடிஏந்தி தேரேறிபவனிவந்து தீர்த்தமாடும்
இன்பக்காட்சி காண ஆயிரம் கண்ணும் போதாது.
கந்தஞானமுத்து, கைதடிமேற்கு

### ஓங்கி மண்ணில் வாழ...

தீர்த்தமாடி வருக- முருக திருவருள் கோடி தருக
ஆர்க்கும் துன்பம் நீங்க - முருகா அருளை வாரித்தருக
பண்பு மண்ணில் பொங்க பாசம் நெஞ்சில் தங்க
தீர்த்த மாடி வருக- திசைத்தமிழ் ஓங்கி மண்ணில் வாழ...
திருமதி ஜெ.கந்தவேள், கொக்குவில் கிழக்கு

### தீர்த்தமாடி மகிழ்ந்தெம் துயர் களைவாய்

தீர்த்த விழா இன்று காணும் நல்லைக் கந்தா
தேச நலன் காக்க வேண்டும் நல்லைக் கந்தா
எண்ணமெல்லாம் உன் உருவே நல்லைக் கந்தா
இடர் களைந்து அருள் புரிவாய் நல்லைக் கந்தா
வள்ளி தெய்வ நாயகனேநல்லைக் கந்தா
வரம் தந்து காப்பாற்று நல்லைக் கந்தா
அலங்கார நாயகனே நல்லைக் கந்தா
அபயம் அளித்தருள் புரிவாய் நல்லைக் கந்தா
வேலெடுத்து வர வேண்டும் நல்லைக் கந்தா
வினைதீர்த்துக் காத்தருள்வாய் நல்லைக் கந்தா
தஞ்சமென அடைந்துவிட்டோம் நல்லைக் கந்தா
தமிழ் வாழத் துணைபுரிவாய் நல்லைக் கந்தா

### தீவினைகள் தீர்த்திடவே வருகின்றான்

பார்போற்றும் வேலவர்க்கு பாலால் தீர்த்தம்
பழமுதிரின் காவலர்க்கு பழத்தால் தீர்த்தம்
தேவசேனை பதியுமக்கு தேனால் தீர்த்தம்
நெற்றிக்கண்ணில் உதிர்த்தவர்க்கு நெய்யால் தீர்த்தம்
தீர்த்திடவே வேண்டுமைய்யா எம் வினைகள் யாவும்
தீர்ந்திடுமே நின்னருளால் தீமைகள் எல்லாமே
மகேந்திரலிங்கம் நிரோஷனா, கோப்பாய்

### இன்னல்களை மாய்க்கும் கந்தன்

நல்லைக் குமரேசன் நாமத்தை நாவினிக்கச்
சொல்வோர்க் குலகில் துயரேது-எல்லையற்ற
இன்னல்க ளெல்லாம் இடைஞ்சலாய்த் தோன்றிப்பின்
மின்னலென மாய்ந்து விடும்.

விரைந்துன் தலம்நாடி வீதிவலம் வந்து
கரந்தொழுவோர் ஏராளம் கந்தா- சிரந்தாழ்ந்து
கும்பிடுவோர் கூறும் குறைகளெல்லாம் நீ போக்கி
நம்பிக்கை வளர்ப்பீர் நயந்து.
சி.வெற்றிவேலு, வட்டுக்கோட்டை.

### திருவீதி உலா சிறக்கவே

பாரூன்றும் பாவஞ்சேர் வினைகளகல
பரந்துலக மாந்தரிடை நேசமிணைய
காரூன்ற மும்மாரி உலகளாவ
களிப்புறு வசந்த சோபனஞ்சேர
ஏரூன்றும் நிலமிசை வளங்களோங்க
உறுபசி பஞ்சநிலை இடும்பையகல
தேரேறி தேசுமிக திருவீதியுலா
சிறப்பாயே நல்லையெம் பெருமானே
அல்வாயூர் சி.சிவநேசன்.

### கடுவினை கடிதோடும்

இந்திரன் வானவர் அஞ்ச நடுக்குவான்
இந்திரத் தேரோனை ஈடளித்த எம்பிரான்
தந்தமரைக் காக்கும் நல்லூர் தம்பிரானைக்
கந்தம ரால் கைதொழக் கடுவினை கடிதோடும்.
சிவ.சண்முகவடிவேல், ஏழாலை.

### " நீ எளிதாக இருந்தும் நாமோ! "

நான் உன்னிடம் வர நீயோ என்னிடம் வருகிறாய் முருகா,
தேன் உன்னிடம் இருக்க நீயோ என்னிடம் வருகிறாய் முருகா,
வான் கருணையாய் நீயிருக்கவரமாய் வருகிறாய் முருகா,
ஏன் நீ எளிதாக இருந்தும் எவருமே எளிதாக வாழ முடிவதில்லையே!
கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்.

திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போர்:
சிறி சிவாஞ்சனா நகையகம்
இல. 149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 9227

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ST.JOHN'S COLLEGE, JAFFNA.
# CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.

## ADMISSION- 2012 FOR GRADE 1, GRADE 4 AND GRADE 6 & GRADE 10

## தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி -2012

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2011 முதல் 15.09.2011 வரை பெற்றுக் கொள்ளலாம்.
    ஆ. எக்காரணம் கொண்டும் 15.09.2011 இற்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
    இ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
    ஈ. விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 22.09.2011 வியாழக்கிழமை. அந்தத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
02. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
04. ஒரு படிவத்துக்கானதும், பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா.500.00
05. வயதெல்லைகள்:
    அ. தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2006 இற்கும்31.01.2007இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
    ஆ. தரம் 4 விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
    இ. தரம் 6 விண்ணப்பதாரி 01.02.2001 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
    ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.1997 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந் திருத்தல் வேண்டும்.
06. தரம் 12(A/L 2014 Batch)விண்ணப்பதாரி 01.02.1995 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
07. தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 11.10.2011 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப் பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
02. தரம்12 இற்கும் A/L 2014 Batch தமிழ்/ ஆங்கில மொழி மூலம் கற்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப் பரீட்சை 07.01.2012 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 11.01.2012 ஆரம்பமாகும். ஆங்கில மொழி மூலக் கற்கைநெறி விஞ்ஞான, கணித, வர்த்தகத் துறைகளுக்கு நடைபெறும்.
03. சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12(A/L)(தமிழ்/ஆங்கிய மொழி மூலம் 2014 Batch)விண்ணப்பதாரிகள் O/Lபரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

**அதிபர்கள்.**

---

தேசிய வியாபார முகாமை நிறுவனம் **NIBM**
BUILDING COMPETENCIES

# IT
# Management
# English
# Sinhala Courses

After A/L

SPECIAL OFFER!



Our Computer Lab

## HOTLINES 077 0716974
## 021 2220360

---



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் ஆறுமுகம் விநாசித்தம்பி

*(தளையசிங்கம் - இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர்)*



மண்ணில்: 03.11.1934
விண்ணில்: 20.08.2009

ஆண்டு இரண்டுகள் மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
எம்மை அன்பாய் அரவணைத்து
நல்வழி காட்டிய எங்கள் குடும்பத்தின்
ஒளி விளக்கே எங்கள் அப்பா!
ஆறாத் துயரத்தில் எங்களை ஆழ்த்திவிட்டு
மீளாத் துயிலில் எங்கே மறைந்தாய் அப்பா!
தங்கள் சுகம் தேடாது எங்களது நலனுக்காய்
வாழ்ந்தீர்களே அப்பா!
ஆண்டவனை மன்றாடினோம்
உம் உயிர் காக்க - ஆனால்
எங்களை ஏமாற்றி விட்டுச்
சென்று விட்டாயே வெகுவிரைவாக
பாசம் கொண்டாடி மகிழும் உங்கள்
முகம் காணவே துடிக்கின்றோம் - அப்பா
நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும்
நாம் வாழும் காலம்வரை
உங்கள் நினைவுகள்
எம் மனதைவிட்டு நீங்காது - அப்பா
ஈராண்டு ஆனால் என்ன
ஓராயிரம் வருடங்கள்
ஓடினால் என்ன - என்றும்
உங்கள் பிரிவில் துடிக்கின்றோம் அப்பா

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி.
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய பரந்தன் ஐந்தாம் வாய்க்காலில் ஏழு வீடுகளில் பணம், நகை கொள்ளை

கிளிநொச்சி,ஓக.28

கிளிநொச்சி பெரிய பரந்தன் ஐந்தாம் வாய்க்கால் பகுதியில் கொள்ளைச் சம்பவங்கள் நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி புதன்கிழமை இரவு ஏழு வீடுகளில் நகைகளும் பெருமளவு பணமும் கொள்ளையிடப் பட்டதாகவும் தெரிய வருகின்றது. கூரிய ஆயுதங்கள் சகிதம் வீடுகளுக்குள் புகுந்த கொள்ளையர்கள் கத்த வேண்டாமெனவும், கைத்தொலைபேசிகளை உபயோகிக்க வேண்டாமெனவும் அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி விட்டுக் கொள்ளையை நடத்தியுள்ளனர். மேலும் வீடுகளிலுள்ள பொருள்களை அங்குமிங்கும் தூக்கி வீசிவிட்டுத் தமக்குத் தேவையானவற்றைத் தேடியுள்ளனர்.

பெண்கள் காதுகளில் அணிந்திருந்த தோடுகளையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. அந்தப் பகுதியில் வசித்து வரும் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் மனோகரன் என்பவரது வீடு உட்பட ஏழு வீடுகளில் கொள்ளை நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

(க-426)

# இனந்தெரியாதோர் நடமாட்டத்தால் ஒன்றாகக் கழியும் இரவுப் பொழுது

யாழ்ப்பாணம், ஓக.28

பூநகரிப் பகுதியில் இனந்தெரியாதோர் நடமாட்டம் காரணமாக அப்பகுதி மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி இரவில் பொது இடங்களில் ஒன்று சேர்ந்து இரவுப் பொழுதைக் கழிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரியில் உள்ள கிராஞ்சி, தோராவில் பகுதி மக்களே இத்தகைய துன்பமான நிலைமைக்கு உள்ளாகியுள்ளார்கள்.

இரவு வேளையில் இனந்தெரியாதோர் வீட்டுக் கதவுகளைத் தட்டுதல், ரோச் லைற் அடித்துப் பார்த்தல், வீதிகளில் ஓடுதல் போன்ற சம்பவங்களினால் இங்குள்ள மக்கள் பயப் பீதியில் ஒரு பொது இடத்தில் ஒன்று சேர்ந்து உறங்கும் அவல நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதே வேளை இப்பகுதியில் பொது மக்கள் பொது இடத் தில் ஒன்றாக உறங்கினாலும் இரவில் ஆண்கள் மாறி மாறி நித்திரை முழித்துக் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றார்கள். (க-68)

**வீதிக்கு யோகம்...**



துரித நடவடிக்கை: வேரவில் - கிராஞ்சி வீதியின் புனரமைப்பு வேலைகள் கனரக வாகனங்களின் உதவியுடன் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

# பிறந்த நாள் நிகழ்வும் சங்கமம் நிகழ்வும் இன்று

கிளிநொச்சி, ஓக.28

கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறார் இல்லத்தில் பிள்ளைகள் பிறந்த நாள் நிகழ்வும்-சிறுவர் சங்கமம் நிகழ்வும் கிளிநொச்சி மகாதேவா மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வு சைவச் சிறுவர் இல்லத்தின் தலைவர் தி.இராநாயகம் தலைமையில் இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருமான சிவசுப்பிரமணியம் அச்சுதன் மற்றும் அவரது பாரியார் திருமதி ச. அச்சுதன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் மகாதேவா சைவச்சிறார் இல்லத்தின் மாணவர் நூலகத்துக்கு ஒன்பது லட்சம் ரூபா பெறுமதியான மூவாயிரம் புத்தகங்களை உள்ளூராட்சி ஆணையாளர் அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட அரச திணைக்கள அதிகாரிகளும் வைத்திய அதிகாரிகளும் சிறப்பு அதிதிகளாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-302)

# பஸ் தரிப்பிடத்தில் கீழே வீழ்ந்தவர் மரணம்

மன்னார்,ஓக.28

மன்னார் பஸ் நிலையத்தில் திடீரெனக் கீழே வீழ்ந்த நபரொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்ததாகக் கூறப்படுகின்றது.

மன்னார் அரச பஸ் நிலையத்தில் சின்னக்கரிசல் பேசாலை என்ற இடத்தைச் சேர்ந்த 58 வயதான இமானுவல் அன்ரன் ஜெகநாதன் என்னும் குடும்பஸ்தர் திடீரெனக் கீழே வீழ்ந்துள்ளார்.

இதன் போது இவரின் தலையின் பின்புறத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. இவர் உடனடியாக மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

ஆனால் சிகிச்சை பலனின்றி இவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து மன்னார் நீதிவான் திருமதி கே.ஜீவராணி வைத்தியசாலைக்குச் சென்று இறந்தவரின் உடலைப் பார்வையிட்டார்.

சடலப் பரிசோதனைகளின் பின்னர் உடலை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு வைத்திய அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். (க-601)

# ஐந்து நீர்ப்பாசனத் திட்டங்கள்

முல்லைத்தீவு,ஓக.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து நீர்ப்பாசனக் கட்டுமான வேலைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையில் வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அவசர காலக் கருத்திட்டத்தின் கீழ் இவை நிறை வேற்றப்படவுள்ளன. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் வழங்கவுள்ளது. இந்தத் தகவலை மேற்படி திட்டங்களின் பணிப்பாளர் எந்திரி க.சோ சிவபாதம் தெரிவித்தார்.

மடவாளசிங்கம் நீர்ப்பாசன அணைக்கட்டுப் புனரமைப்பு, மடவாளசிங்கம் நீர்ப்பாசன வாய்க்கால் புனரமைப்பு, விசுவமடு நீர்ப்பாசன அணைக்கட்டுப் புனரமைப்பு, விசுவமடு நீர்ப்பாசன வாய்க்கால் புனரமைப்பு, உடையார்கட்டு நீர்ப்பாசன அணைக்கட்டுப் புனரமைப்பு ஆகிய ஐந்து திட்டங்களே மேற்கொள்ளப்படவுள்ளன.

(க-122)

# இராணுவத்தினரின் பயன்பாட்டில் பரந்தன் எரிபொருள் நிலையம்

வவுனியா,ஓக.28

பரந்தனில் அமைந்துள்ள எரிபொருள் நிலையம் தொடர்ந்தும் இராணுவத்தினரின் பாவனையில் உள்ளதால் பொதுமக்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த எரிபொருள் நிலையம் கரைச்சி வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினருக்குச் சொந்தமானது. தற்போது இராணுவத்தினர் இதனைப் பயன்படுத்தி வருகின்றனர். பொதுமக்கள் இதன் சேவையைப் பெற முடியாத நிலையில் உள்ளனர். இதனால் புளியம்பொக்கணை, முரசுமோட்டை, கோரக்கன்கட்டு, பரந்தன் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தமது எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகக் கரடிப்போக்கில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்துக்குச் செல்ல வேண்டிய அவலநிலையிலுள்ளனர்.

எனவே இந்த எரிபொருள் நிலையத்தில் மக்களும் எரிபொருள்களைப் பெறும் விதத்தில் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர்.

(க-421)

# முன்னாள் கல்விப் பணிப்பாளரின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில்

வவுனியா,ஓக.28

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.கா.ஏ. ஒஸ்வோல்ட்டின் இறுதிக் கிரியைகள் நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

இவர் கடந்த செவ்வாயன்று வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் மரணம் அடைந்தார்.

நேற்றுக் காலை 9 மணியளவில் அவரின் பூதவுடல் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து பூதவுடலுக்கு இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் கிரியைகள் இடம்பெற்று நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இறம்பைக்குளம் சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது.

திருமதி ஒஸ்வோல்ட் 35 வருடங்கள் கல்விச் சேவையில் கடமையாற்றியவர். வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர் உதவி ஆசிரியராகத் தனது கல்விப்பணியை ஆரம்பித்து அதிபர், கோட்டக் கல்வி அதிகாரி எனப் பல பதவிகளை வகித்து இறுதியாக வவுனியா தெற்கு வலயத்தின் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிக் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றார்.

நோய்வாய்ப்பட்டிருந்த இவர் அனுராதபுரம், கொழும்பு ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-421)

# ஆங்கிலதினப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, ஓக. 28

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பளைக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டி நிகழ்வில் வெற்றி பெற்றவர்களது பெயர் விவரம் வருமாறு:

**உறுப்பமைய எழுதுதல்**

**தரம் - 9**

முதலாமிடம் - சி.மதுசா (இயக்கச்சி அ.த.க.பா.), இரண்டாமிடம் - பி.அஜேந்தினி (பளை மத்திய கல்லூரி), மூன்றாமிடம் - ஜே.அலக்சா (பளை றோ.க.த.க.பா.).

**தரம் - 10**

முதலாமிடம் - இ.பிரவீனா (பளை மத்திய கல்லூரி), இரண்டாமிடம் - கௌ.துர்க்கா (பளை மத்திய கல்லூரி).

**தரம் - 11**

முதலாமிடம் - த.கவிசாந் (பளை றோ.க.த.க.பா.), இரண்டாமிடம் - வி.சுஜாதா (பளை மத்திய கல்லூரி), மூன்றாமிடம் - தி.றனிசிகா (பளை றோ.க.த.க.பா.).

**தரம் - 12**

முதலாமிடம் - ஜெ.தர்சினி (பளை மத்திய கல்லூரி), இரண்டாமிடம் - இ.ஜிலானி (பளை மத்திய கல்லூரி).

**தரம் - 13**

முதலாமிடம் - த.கோபிதா (பளை மத்திய கல்லூரி), இரண்டாமிடம் - பா.தர்சிகா (பளை மத்திய கல்லூரி).

**கதை கூறல் தரம் - 6**

முதலாமிடம் - நி.றொனோஜன் (பளை மத்திய கல்லூரி), இரண்டாமிடம் - தெ.அனுசியா (பளை மத்திய கல்லூரி).

**தரம் - 7**

முதலாமிடம் - வை.தமிழினி (பளை மத்திய கல்லூரி), இரண்டாமிடம் - ஜீ.லஜீகா (பளை மத்திய கல்லூரி).

**தரம் - 8**

முதலாமிடம் - க.அபினயா (பளை மத்திய கல்லூரி), இரண்டாமிடம் - சி.அபினயா (பளை மத்திய கல்லூரி).

**நாடகம் கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம் - பளை மத்திய கல்லூரி

**குழுப்பாடல்**

**ஆரம்பப்பிரிவு தரம் 1,2**

முதலாமிடம் பளை மத்திய கல்லூரி

**ஆரம்பப்பிரிவு தரம் 3,4,5**

முதலாமிடம் - பளை மத்திய கல்லூரி, இரண்டாமிடம்- இயக்கச்சி அ.த.க.பா.

**கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம் - பளை மத்திய கல்லூரி

**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம் - பளை மத்திய கல்லூரி.

**அபிநயப் பாடல்**

**தரம் -6**

முதலாமிடம் - பளை மத்திய கல்லூரி.

**தரம் -8**

முதலாமிடம் - பளை மத்திய கல்லூரி

(முற்றும்) (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கும் விடுதிக்கு (Guest House) உதவியாளர் (Room Boy) தேவை.

மூன்று மொழிகளும் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முழு விவரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி: 220,HIGHLEVEL ROAD, COLOMBO - 06

E.mail:Powereal@isplanka.lk

## வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி, கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் ஆடியபாதம் வீதிக்கும் மிக அருகில் அமைதியான சூழலில் நான்கு பக்கமும் மதில் கட்டப்பட்ட இரண்டு பரப்புக் காணியுடன் இணைந்த குளியல் அறை தரைக்கு மாபிள் பதிக்கப்பட்டு 2005 இல் பூர்த்தி செய்யப்பட்ட அழகான குளிர்மையான பெரியமனை விற்பனைக்குள்ளது. தரகர் தேவையில்லை.

*தொடர்பு: 0778925249, 0757609976*

## காணி விற்பனைக்கு

தென்மராட்சி, கொடிகாமம், கச்சாய் றோட், கச்சாய் அரசினர் பாடசாலைக்கு அருகில் எதிர்கால முதலீட்டுத் திட்டத்துக்கு ஏற்ற வகையில் பெரிய நிலப்பரப்பாகவோ, சிறிய நிலப்பரப்பாகவோ விற்பனைக் குண்டு.

தொடர்புகொள்ள:-
0750476078, 0772021691, 0247911178.




## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1971 ஆம் ஆண்டு பிறந்த சதயம் 2 ம் பாதம் கும்பராசி மணமகளுக்கு வெளிநாட்டு, உள்நாட்டு மணமகனை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு கொள்வதற்கு:- 0771275312

## DONE WITH A/L ??
சீனாவில் கல்வி

Become an Engineer

- Telecommunication Eng
- Aeronautical Eng

4 Years in English

China Government,
UGC Approved University

ENROLL THIS SEPTEMBER

0777 813 450
077 514 99 65

Win Lanka World (PVT) LTD
No.30A, Ambuldeniya ,Nugegoda.
winlankaedu@yahoo.com

FLEX Graphic

# ST.PATRICK'S COLLEGE JAFFNA
# புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்

## புதிய அனுமதி 2012

புதிய அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை ஞாயிறு, பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் மு.ப. 9 மணியிலிருந்து மதியம் 12 மணிவரை கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பப்படிவம் (பரீட்சைக் கட்டணம் உட்பட) ரூபா 500/- ஆகும்**

* தரம் 01 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2006 இற்கும் 31.01.2007 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்
* தரம் 06 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2001 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

***புதிய அனுமதித்தேர்வு 08.10.2011 சனிக்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியில் ஆரம்பமாகும்.***

* முதலாம் வகுப்புக்கான விண்ணப்ப தொடர் இல.001-075 வரையானோர் நேர்முகத்தேர்வுக்குச் சமுகம் கொடுக்கவேண்டிய நேரம் காலை 8 மணி
* முதலாம் வகுப்புக்கான விண்ணப்ப தொடர் இல.076 - மேல் உள்ளோர் சமுகம் கொடுக்கவேண்டிய நேரம் காலை 9.30 மணி
* 6 ஆம் வகுப்புக்கான தேர்வு காலை 8.15 மணிக்கு ஆரம்பமாகும்

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை நேரில் வந்து அலுவலகத்தில் ஒப்படைக்கவும். அவை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் 26.09.2011. தபால் மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அதிபர்

## கொக்குவில் கிழக்கு, பொற்பதி
## அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்



மகோற்சவம் நாளை (29.08.2011)
திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 நாள்கள்
நடைபெறும்.

திருவிழாவில்

02.09.2011 - மஞ்சத் திருவிழா
03.09.2011 - முற்பகல் 11 மணிக்கு மாம்பழத் திருவிழா
05.09.2011 - கைலாச வாகனம்
08.09.2011 - தங்க ரதத் திருவிழா
09.09.2011 - வேட்டைத் திருவிழா
10.09.2011 - சப்பறத் திருவிழா
11.09.2011 - தேர்த்திருவிழா
12.09.2011 - தீர்த்தத் திருவிழா
13.. 09.2011 - பூங்காவனத் திருவிழாவுடன்



மகோற்சவம் நிறைவுபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.
அடியார்கள் அனைவரும் வந்து விநாயகர் அருள் பெறுக.

ஆலய சம்பந்தமான
மேலதிக தொடர்புகளுக்கு:
0771751456

ஆலய பிரதம குருவும் நிர்வாகஸ்தரும்
பரிபாலகரும் உரிமையாளரும்
சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள்,
நடராஜக் குருக்கள்.

## கூறு விலை கோரல்

NRC NORWEGIAN REFUGEE COUNCIL

நோர்வேஜியன் அகதிகள் பேரவை- NRC LOGISTICS JAFFNA

விடயம் - 3-7 மாத ஒப்பந்த அடிப்படையில் வாகனத்திற்கான கூறு விலை கோரல்

மனுக்களை சமர்ப்பிக்கும் முறை - உங்கள் விலை மனுக்களினை பின்வரும் ஏதேனும் முறைகளில் சமர்ப்பிக்கலாம்

1. தொலை நகல் மூலமாக – இல - 0212221559
2. நேரடியாக இல 834/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில்
3. மின்னஞ்சல் மூலமாக – vendors@nrc.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு (முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவத்தினை ஸ்கான் செய்து அனுப்பவும்)

உடனடி தேவையின் நிமித்தம் இம் மனுக் கோரலுக்கான முடிவுத் திகதி 02.09.2011 பி.ப 5 மணி வரை மட்டுமே. முடிவுத் திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தேவைகள்

எமது நிறுவனமானது பின்வரும் தேவைகளின் அடிப்படையில் தங்களிடமிருந்து விலை மனுக்களை கோரியுள்ளது

| இல | இடம் | வாகன வகை/ விபரக்குறிப்பு | காலம் | அளவு | மாதாந்த வாடகை | மொத்தம் | தற்போதைய கி.மீ அளவு/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 4x4 Van,A/C | நீண்ட காலம் | 1 | | | |
| 02 | யாழ்ப்பாணம் | 4x4 Mahindra Scorpio, A/C | நீண்ட காலம் | 1 | | | |
| 03 | யாழ்ப்பாணம் | 4x4 Tata sumo,A/C | நீண்ட காலம் | 1 | | | |
| 04 | யாழ்ப்பாணம் | Land cruiser,A/C | நீண்ட காலம் | 1 | | | |
| 05 | யாழ்ப்பாணம் | 4x4 Toyota Crew Cab,A/C | நீண்ட காலம் | 1 | | | |

மேற்கூறிய கோரிக்கையினை பூர்த்தி செய்ய எவ்வளவு நாள்கள் தேவைப்படும்? ..............................

விவரக்குறிப்பு

- வாகனம் 4x4 மற்றும் போதிய இட வசதி உள்ளதாகவும் இருக்க வேண்டும்
- வாகனம் ஏழு வருடங்களுக்கு முற்பட்டதாகவோ 100,000கி.மீ அளவுக்கு மேற்பட்ட பாவனைக்கு உள்ளானதாகவோ இருத்தல் கூடாது
- உங்கள் மனுக்களுடன் வாகனத்தின் பிரதி ஒன்றினையும் கையளிப்பதனை உறுதி செய்து கொள்ளுங்கள்
- முடியுமான பட்சத்தில் வாகனத்தின் நிழற்படம் ஒன்றினை இணைத்து கையளியுங்கள்

நிறுவனத்தின் பெயர் : .............................. முத்திரை..............................
முகவரி : ..............................
மனுதாரரின் பெயர் : ..............................
தொடர்பு இலக்கம் : ..............................
மின்னஞ்சல்/ தொலைநகல் : ..............................

குறிப்பு:

வழங்கப்படுகிற தகவல்களுக்கு இணங்கவே முடிவுகளும் ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும். ஆதலால் தங்களால் வழங்கப்படும் தகவல்கள் சரியானதும் துல்லியமானதுமாய் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பட்டியல்படுத்தப்பட்ட வழங்குநர்களுக்கு வாகனத்தை பார்வையிடுதலின் பொருட்டு அவ் வாகனத்தை கொண்டுவருவதற்கு அறிவிக்கப்படும், ஆதலால் தேவைப்படும் சகல ஆவணங்களும் குறுகிய கால அறிவித்தலுக்குள் கிடைக்க கூடியவாறு இருப்பதனை உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்

நோர்வேஜியன் அகதிகள் பேரவை


## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 18.06.1933 உதிர்வு: 20.08.1990

தோலகட்டி வசாவிளான்

# அமரர் வைத்திலிங்கம் நடராசா

(முன்னாள் பொறுப்பதிகாரி,
வலி.கிழக்குப் பிரதேச சபை, அச்சுவேலி)

*திதி: 28.08.2011*

பாசமுள்ள அப்பாவே!

ஆண்டுகள் இருபத்தொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் பாசங்கள்
நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது.
வருடம் தவறாமல் கந்தனின் தீர்த்தத்தில் உங்கள் காலடியில் நின்று
கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்தும்....

ந.சிவபாக்கியம், துஷா இல்லம்,
கற்பக்குளம், உடுவில், சுன்னாகம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தாமணியும் திருக்குறளும்

இலக்கியக் காட்சி – 101

தமிழ் அணங்கை அழகுபடுத்தும் அணிகலன்களாக, ஐம்பெரும் காப்பியங்களாக சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் நூல்கள் விளங்குகின்றன.

இந்தக் காப்பியங்களுக்கும், ஏனைய பல தமிழ் நூல்களுக்கும் முற்பட்டதாக கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் இயற்றப் பெற்று உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறள் இல்லறம், துறவறம், அரசியல், காதல், கற்பு, ஒழுக்கம் என்பவற்றுக்கும் இன்னும் மனிதவாழ்வுக்குத் தேவையான எல்லாவற்றுக்கும் இலக்கணம் கற்பிப்பதாய் விளங்குகின்றது.

சமண மதத்தவரான திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் எல்லா சமய்த்தவருக்கும் எல்லா உலகத்தாருக்கும் அவரவர் வழியில் நின்று அறநெறி கூறுவதாக அமைந்திருப்பதும் ஒரு சிறப்பாகும்.

சமண சமயக் கவிஞரான இளங்கோவடிகள், பௌத்த சமய சீத்தலைச்சாத்தனார், சைவசமய நாயன்மார்கள், வைணவ சமய ஆழ்வார்கள், கவிச் சக்கரவர்த்தி கம்பர், கிறிஸ்த்வ வீரமாமுனிவர், இஸ்லாமிய கவிஞர் உமறுப்புலவர் ஆகிய எல்லோரும் திருக்குறளை எடுத்தாண்டுள்ளமை திருக்குறளின் பெருமையைக் குறிக்கின்றது.

இந்த வகையில் கி.பி.10 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த திருத்தக்கதேவர் 'சிந்தாமணி' என்னும் காப்பியத்தை இயற்றியுள்ளார்.

சிலப்பதி காரத்துக்கும் மணிமேகலைக்கும் பிற்பட்ட காலத்தில் 3145 விருத்தப் பாக்களால் இயற்றப்பெற்ற சிந்தாமணி ஏனைய காப்பியங்கள் போல் மிகுந்த இலக்கிய நயம் உள்ள நூலாகத் திகழ்கின்றது.

இந்த நூலில் திருத்தக்கதேவர் திருக்குறளை மிகவும் அதிகமாகக் கையாண்டு தமது இலக்கியத்தை வளம்படுத்தியுள்ளார். இதனை எடுத்துக் காட்டுவதே எமது இந்தக் கட்டுரையின் நோக்க மாகும்.

அதற்காக சிந்தாமணிக் காப்பியத் தின் கதையைச் சுருக்கமாக அறிய வேண்டியது அவசியமாகிறது.

ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன் என்பவன் தனது பட்டத்து அரசி விசயமாதேவியை மணந்து அரசாண்ட போது (பழைய கால மன்னர் பலர் செய்தது போல) மேலும் பல பெண்களை மணஞ் செய்து இன்பமாக வாழத் தொடங்கினான். அதனால் அரச அலுவல்களைத் தனது அமைச்சனான கட்டியங்காரனிடம் ஒப்படைத்துவிட்டான். நய வஞ்சகனான அமைச்சன் சூழ்ச்சி செய்து அரசனைக் கொல்ல முயன்றான். இதனை அறிந்த அரசன் தனது பட்டத்து அரசியை வேறிடம் சென்று வாழுமாறு யோசனை கூறினான். அந்த நேரம் கர்ப்பவதியாக இருந்த விசயமாதேவி அவனைப் பிரிந்து போகப் பிரியமில்லாமல் அழுதாள். அவளுக்கு அரசன் தேற்றுதலாக:

*''சாதலும் பிறத்தல் தானும்*
*தன்வினைப் பயத்தினாகும்*
*ஆதலும் அழிவும் எல்லாம்*
*அவை பொருட்டு இயல்பு கண்டாய்*
*நோதலும் பரிவும் எல்லாம்*
*நுண்ணுணர்வு இன்மை அன்றோ?*
*பேதை நீ பெரிதும் பொல்லாய்*
*பெய்வளைத் தோளி!'' என்றான்.*

*பின்னும்*

*'' தொல்லை நம் பிறவி எண்ணின்*
*தொடு கடல் மணலும் ஆற்றா*
*எல்லைய; அவற்றுள் எல்லாம்*
*ஏதிலம்; பிறந்து நீங்கிச்*
*செல்லும் இக்கதிகள் தம்முள்*
*சேரலம், சேர்ந்து நின்ற*
*இல்லினுள் இரண்டு நாளைச்*
*சுற்றமே; இரங்கல் வேண்டா!''*

என்று விசயமாதேவியைத் தேற்றி மயிற்பொறியில் ஏற்றி (வலவன் ஏவும் வானவூர்தி) வெளியே அனுப்பி விட்டுக் கட்டியங் காரனோ போர் புரிந்து அரசன் மாண்டான். பகைவனான கட்டியங்காரனின் வெற்றி முரசு விசயமாதேவியின் காதில் விழுந்ததும் அவள் மயங்கிவிட்டாள். ஊர்தி காட்டுப்பகுதியில் விழுந்துவிட்டது.

அதிர்ச்சி உற்ற அரசியாருக்கு குழந்தை பிறந்தது. சுடுகாட்டில் தனது மகன் பிறந்த கவலையில் ''சிந்தாமணியே கிடத்தியால்!'' என்று பலவாறு கூறி அழுதாள். அப்பொழுது அங்கு தோன்றிய தேவதை குழந்தையை விட்டுவிட்டு மறைந்து நிற்கும்படி கூற, அவளும் அவ்வாறு செய்தாள்.

அப்போது தனது இறந்த மகனைப் புதைக்க வந்த இராசமாபுரத்து வணிகன் கந்துக்கடன் என்பவன் அந்தக் குழந்தையை (சீவகனை) எடுத்துச் சென்று வளர்த்தான்.

*''அருள், வலி, ஆண்மை,கல்வி*
*அழகு, அறிவு, இளமை, ஊக்கம்*
*திருமலி ஈகை, போகம்*
*திண்புகழ், நண்பு, சுற்றம்*
*ஒருவர் இவ் வுலகில் யாரே*
*சீவகன் ஒக்கும் நீரார்?*

என்ற வகையில் சீவகன் வளர்ந்து வந்தான் என்கிறார் திருத்தக்கதேவர்.

சீவகனின் தாய் அழுதபோது ''சிந்தாமணியே கிடத்தியால்'' என்று சொல்லியதால் திருத்தக்க தேவர் ''சிந்தாமணி'' என்ற பெயரோடு இந்தக் காப்பியத்தை இயற்றியுள்ளார் போலும். மற்றும் சீவகன் காப்பியத் தலைவனாக இருக்கின்றான் என்பதுவே இந்த இலக்கியம் கூறும் உண்மையாகும்.

பிற்காலத்தில் இதனைச் ''சீவகசிந்தாமணி'' என்றும் கற்றோர் அழைக்கலாயினர். இந்தச் சீவகன் பதுமை என்ற பெண்ணை மணஞ்செய்து இரண்டு மாதங் கடந்த நிலையில் அவளை விட்டு நீங்கி சித்திர கூடத் தவப்பள்ளியை அடைகிறான். அங்கே முனிவருடைய தொடர்பு கிடைக்கிறது.

**நா. நல்லதம்பி, மட்டுவில்.**

துறவுக் கோலத்தில் இருந்த தாயைக் கண்டு அவளுடைய ஆசியோடு, தனது தந்தையைக் கொன்ற கட்டியங்காரனைக் கொன்று இழந்த இராச்சியத்தை மீளப்பெறுகிறான். பதுமை முதல் காந்தருவதத்தை, குணமாலை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை எனப் பல பெண்களை மணஞ் செய்கிறான்.

தனது 45 ஆவது வயதில் தனது மூத்தமகனுக்கு பட்டம் சூட்டி விட்டு சீவகன் துறவுபூண்டு யாவர்க்கும் அறிவுரை கூறி வாழ்ந்து முத்தியடைகிறான். மனைவிமாரும் துறவு பூண்டு முத்தியடைகிறார்கள் என்பது கதை.

இனிமேல் நாம் ஆரம்பத்தில் கூறியது போல திருத்தக்க தேவர் திருக்குறளை இலக்கணமாகக் கொண்டு தமது சிந்தாமணி இலக்கியத்தை வளம் படுத்துகிறார் என்பதனை ஒரு சில எடுத்துக் காட்டுக்கள் மூலம் விளக்குவோம்.

(மற்றைய காட்சி அடுத்தவாரத்தில்)

# கன்னித் தாய்

சிறுகதை



**வ. கந்தசாமி, கொடிகாமம்.**

படிப்பறிவைப் பட்டறிவால் பகுப்பாய்வு செய்து கொண்டிருந்த குமுதா ஏதோ விடை கண்டவளாய் வெறித்தெழுந்து இராகவனின் கடிதத்துக்கு பதிலெழுதத் தொடங்கினாள்.

அன்புள்ள இராகவனுக்கு,

உங்கள் கடிதம் வாசித்தேன். ஒருமுறை சிரித்தேன். என்னை வாழ்க்கைத் துணைவியாக அடைய விரும்புவதாக எழுதியிருந்தீர்கள். என்னை அறியாமல் என்னில் ஆசைப்பட்டது குற்றமல்ல. ஆனால் அறியாமை, ஆராய்ச்சியின்மை, புத்தியற்ற செயல் என்று குறிப்புரை வழங்கினால் கோபப்படமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

செவ்வரத்தம் பூ சிவப்புதான். ஆனால் வாசம் இல்லை. நானும் அப்படித்தான். உண்மை வெற்றியளிக்கும் என்பார்கள். ஆனால் நான் கூறப்போகும் உண்மையால் ஒரு பெரிய அதிர்ஷ்டத்தை இழந்து தோல்வி காணப் போகிறேன். உண்மையைச் சொல்லட்டுமா?

இராகவன், நான் களங்கப்பட்டவள். இப்போ என்னை ஏற்றுக் கொள்வீர்களா? இல்லைதானே. நான் உங்களுக்கு எழுதுவது கடிதமாகவும் வாசகர்களுக்குக் கதையாகவும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு வாழ்க்கைக்கு வழிகாட்டும் கட்டுரையாகவும் அமைய வேண்டும் என்பதற்காக நான் எழுதும் இந்த விரிவான மடலைப் பத்திரிகை ஒன்றுக்குக் கதையாக அனுப்புங்கள். கிராம மட்டத்தில் பெண்கள் விழிப்புக் கருத்தரங்குகள் அரச ஊடகங்களால் நடத்தப்படும் இந்த வேளையில், உங்களுக்கு எழுதும் பதில் பத்திரிகைக்கு நல்ல படைப்பாகவும் வாசகர்களுக்கு நல்ல பயனாகவும் அமையும் என நம்புகிறேன். இது கடிதமா? கதையா? கட்டுரையா? நீங்கள் பொருத்தமானதை எடுத்துக் கொள்ளுங்கள். வாசகர்கள் பொருத்தமானதை எடுக்கட்டும். இளம் பெண்களும் அப்படித்தான். தொடருங்கள்:-

அப்போது எனக்கு வயது பதின்மூன்று. நான் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஒரே ஒரு பிள்ளை. மிகவும் பின்தங்கிய கிராமம். ஒரு சிறிய மண்குடிசை. இதுதான் எங்களது இருப்பிடம். அப்பா ஒவ்வொரு நாளும் குடிபோதையில் வருவார். அம்மாவுக்கு அடி, உதை அத்துடன் சமைக்கிற சட்டி, பானை எல்லாம் தூக்கி எடுக்க வேண்டும் என்ற அவசியமில்லை. பொறுக்கித்தான் எடுக்கவேண்டும். மண்ட லாபிஷேகம் நடந்து கொண்டிருக்கும்போது அம்மாவுக்கு அடிக்காதேங்கோ அப்பா... என்று சொல்லிக்கொண்டு நான் கிட்டப் போனால் பக்கத்தில் கிடக்கும் தடிகள் முறியும் வரை தூபம் போட்டு எனக்கும் ஓர் அர்ச்சினை செய்து முடிப்பார். இத்தனைக்கும் காரணம் சொல்வார். காரணம் சாப்பாடு சரியில்லை என்பார். கொடுத்த காசை குடிப்பதற்காக மீண்டும் கேட்பார். அம்மாவிடம் இருக்காது. இல்லையென்றால் இதே குடமுழுக்குத்தான். இது நாளுக்குநாள் வழமையாகிவிட்டது. நானும் அம்மாவும் இதே குடிசைக்குள் இருந்து அழுது கொண்டிருப்போம். பாவம் என்னுடைய அம்மா தன்னுடைய வேதனையைப் பொருட்படுத்தாமல் என்னை வருடிக் கொடுத்து அழாதே அம்மா என்று கண்ணீர் மல்க கூறுவாள். அந்தச் சின்ன வயதிலும் அம்மாவுக்காக எனது அழுகையை அடக்கி ஏனம்மா அப்பா இப்படி எல்லாம் நடந்து கொள்கிறார் இவர் திருந்தவே மாட்டாரா? எனக் கேட்பேன். இல்லை அம்மா அழாதே. அவர் திருந்துவார். கடவுள் அவரைத் திருத்தித் தருவார் என ஆறுதல் கூறுவார். ஆனால் அம்மா ஒன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைத்து விட்டது போலும்.

திங்கள் சில ஓடியது. அமங்கல ஒலி ஒன்று எங்கள் குடிசையில் கேட்கிறது. மதுக்கடை ஒன்றில் அப்பாவுக்கும் இன்னொருவருக்கும் ஏற்பட்ட தகராறில் மாற்றானின் கத்திக்கு இலக்காகி அப்பா அதேயிடத்தில் மண்டையைப் போட்டுவிட்டார். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற கோட்பாட்டுக்கு அம்மா மட்டும் விதிவிலக்காக இருக்க முடியுமா? விழுந்தாள், புரண்டாள், கதறினாள் என்னைக் கட்டியணைத்துத் தனித்துப் போனோமே அம்மா என்று கத்தினாள். போனவர் வருவாரா? முற்றுப் பெற்றது அப்பாவின் சரித்திரம். காலன் அப்பாவை அணைத்து விட்டான். காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. அம்மா நாள்கூலி வேலைக்குப் புறப்படத் தொடங்கிவிட்டாள். தனக்காக அல்ல எனக்காக!

இப்போது எனக்குப் பதினாறு வயது. நான் படிப்பை மட்டும் நிறுத்தவில்லை. அம்மாவுக்கும் அதே ஆசைதான். பிள்ளை எனக்கு இருக்கும் ஒரேயொரு சொத்து நீதான். மனம் கோணாமல்படி எனக் கூறுவாள். எங்களுக்கு வேறு பொருளாதாரம் இல்லை. நீதான் என்னுடைய முதலீடு என்பாள். நானும் விடாமுயற்சியோடு படித்துக் கொண்டிருந்தேன். சனி, ஞாயிறு மற்றும் பாடசாலை விடுமுறை நாள்களிலும் அம்மாவுடன் ஊர்க் கூலி வேலைக்குப் புறப்படுவேன். என்னதான் இருந்தாலும் பாடசாலைக்குள் செல்லும் போது ஏழ்மையும் வறுமையும் குடிகொண்டிருப்பதை எனது சட்டையில் இருக்கும் பொத்தல்கள் கோலம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கும். இந்தச் சூழ்நிலையில் இருந்த எங்கள் வாழ்க்கையில ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

அடுத்த வீட்டில் சுரேஸ் அண்ணா. அவருக்கு சுமார் இருபத்தைந்து வயதிருக்கும். அவருடைய உதவிக் கரம் எங்களுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. இறைவன் ஒரு கண்ணை மூடினாலும் இன்னொரு கண்ணைத் திறந்து விட்டிருக்கிறான் என்று நோக்கினோம். அவர் அடிக்கடி வீட்டுக்கு வருவார். எமக்கு வேண்டிய தேவைகளை எல்லாம் பாதிக்குப் பாதி அவரே பொறுப்பேற்று கொண்டவர் மாதிரி செய்யத் தொடங்கினார். எனது சட்டையில் கிழிசலைக் கண்டால் உடனே புதுச் சட்டை வாங்கி வருவார். இரவு நேரத்தில் எமக்குத் துணை வழிகாட்டியாக வந்து சிறிது நேரம் சல்லாபித்து விட்டுப் போவார். எனக்கும் அம்மாவுக்கும் இரவு வந்தால் எப்போ சுரேஸ் அண்ணா வருவார் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. சிலவேளைகளில் என்னைப் பாடசாலைக்குத் தன்னுடைய துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டே விடுவதும் அவருடைய கடமையாய் இருந்தது என்று சொல்வதை விட ஆசையாய் இருந்தது என்பதுதான் பொருத்தமானது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 28.08.2011 முதல் 04.09.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதோடு, உருப்படியான சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். முடியாத சில வேலைகளை நினைத்து கவலை கொள்வீர்கள். உத்தியோகம், தொழில்துறை, நிலம், பூமி தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். தடைப்பட்ட கட்டடப் பணிகளை முடுக்கி விடுவீர்கள். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். இழுபறியாக இருந்த சில வேலைகள் திடீரென முடிவுக்கு வரும்.போட்டி, எதிர்ப்புகள் விலகும். பிள்ளைகளின் தேவைகளைக் குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். உறவினர்கள் வீட்டு சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். கடன் மிகுதிகள் வந்து சேரும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். பணவரவுகளைப் பெறலாம்.

### இடபம்

தேவையற்ற அலைச்சல், திரிச்சல், தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம். மறதியால் அவதியுண்டு. உத்வேகம் அதிகரிக்கும். எந்தக் காரியத்தையும் சோம்பலின்றி, சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். பணவரவு உண்டு. பொறுப்புகள் அதிகரிக்கும். அதேநேரத்தில் வேலை செய்யும் அளவுக்கு பாராட்டோ, வெகுமதியோ கிடைக்காது. தொழில் செய்யும் இடத்தில் அல்லது பணிபுரியும் இடத்தில் அடிக்கடி பொறுமை இழந்து, சிலருடன் கோபம், வேகமாகப் பேசிக் கொள்வீர்கள். கடந்த காலத்தில் உங்களைப் பாராட்டியவர்கள் எல்லாம் இப்போது உங்களை விமர்சிப்பர். நல்லவர்கள் போல நடித்தவர்கள் எல்லாம் இப்போது தங்களின் சுயரூபத்தைக் காண்பிப்பர். விமர்சனப் பேச்சுக்களை முடிந்தவரை தவிர்ப்பது நல் லது. பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். ஆடை, ஆபரணங்கள் சேரும். சுபகாரியங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். குதர்க்கமான பேச்சுக்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பணவரவுகள் உண்டு.

### மிதுனம்

ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். தேவையற்ற பிரச்சினைகளை நினைத்து மனதைப் போட்டு குழப்பிக் கொள்வீர்கள். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் சிரமங்கள், வேலைப்பளு அதிகரிக்கும். முதலாளிகள், மேலதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். உடன் பிறப்புக்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளாலும் கோபம் அடையலாம். அவர்கள் வழியில் தண்டச் செலவுகள் நேரலாம். தேக ஆரோக்கியமும் திருப்தி தரும் வகையில் இருக்காது.பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் உண்டு. அரச காரியங்கள் அனுகூலமாக முடியும். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். பணவரவுகளைப் பெறலாம்.

### கடகம்

ஆறுதலான, மாறுதலான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் கூடும். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். வீண் செலவு நேரவும் வாய்ப்பு உண்டு. பணிபுரிவோர் தங்களின் வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். பிறர் செய்யும் தவறுக்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டிய நிலைமை உண்டாகலாம்.சகோதரர்கள், பங்காளிகள் வகையில் செலவுகள், தொல்லைகள் நேரும். தொழில் ரீதியான பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பெண்களால் சந்தோஷம் உண்டு. செலவு, வீண் அலைச்சல் உண்டாகும். மறதியால் அவதிப்படலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். சுகமான இனிய அனுபவங்களைப் பெறலாம். ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

### சிங்கம்

எதிர்பாராத சந்திப்பு நிகழும். திட்டமிட்ட சில வேலைகளை மாற்றி அமைப்பீர்கள். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். பக்தி நாட்டம் உண்டாகும். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக இழுத்தடித்த பணவரவுகள் வந்து சேரலாம். நல்ல செய்திகளைக் கேட்கலாம். சொந்தபந்தங்கள், நண்பர்கள் மற்றும் ஊரார் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். வருமானம் அதிகரித்து கையில் பணப்புழக்கம் கூடும். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். குடும்ப உறுப்பினர்களின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தெய்வ காரியப் பிரார்த்தனைகளை நிறைவேற்றவும், பிரபலமான கோயில்களுக்குச் செல்லவும் போட்ட திட்டம் நிறைவேறலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு.மற்றவர்கள் மத்தியில் பளிச்செனத் தோற்றம் அளிப்பதிலும், பகட்டான ஆடை, ஆபரணங்கள் வாங்குவதிலும், அணிவதிலும் நாட்டம் செல்லும். உறவினர்கள் வீட்டு சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

### கன்னி

எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். சபலங்களால், பேராசைகளால் தண்டச்செலவுகளுக்கு ஆள்படலாம். வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். பல நாள்களாகச் சந்திக்காத நண்பர்கள் சிலரைச் சந்திக் கலாம். மருத்துவச்செலவுகளை எதிர்கொள்ளலாம். அடிக்கடி ஊக்கம், உற்சாகம் குறை யும். வேலைப்பளு அதிகரிப்பதால், வெறுப்பு, சலிப்பு ஆள்கொள்ளும். கடந்த கால விடயங் களை நினைத்து அடிக்கடி சஞ்சலம் அடைவீர்கள். எந்த வேலையும் திட்டமிட்டபடி முடியா மல் இழுத்தடிக்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அலைக்கழிப்புகள் உண்டாகும். ஓய்வாக இருக்க முடியாத அளவுக்கு, ஒரு வேலை முடியும் முன்னரே, அடுத்தடுத்து வேலைகள் வரலாம்.மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் சில நல்ல யோசனைகளை உங்களுக்குச் சொல்லலாம். வெளிவட் டாரத் தொடர்பு விரிவடையும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். பெண்கள், தந்தை வழியில் செலவுகள் உண்டாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். பணவரவுகளைப் பெறலாம்.

### துலாம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். நீண்ட நாள்களாகப் பார்க்காத நண்பர்கள் சிலரைப் பார்க்கலாம். பணவரவு உண்டு. ஒன்றுக்கு இரு மடங்காகச் செலவுகளைச் சந்திக்கலாம். காத்திருப்புகள், அலைக்கழிப்புகளால் வெறுப்பு, விரக்தி உண்டாகும். மன அமைதியைப் பாதிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். இழுபறியாக இருந்த அரச காரியங்கள் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். தந்தை வழியில் எதிர்பாராத உதவி கிடைக்கலாம். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். புதன் சாதகமான நிலையில் உள்ளதால், மாமன், மைத்துனர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் வீட்டு சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த பத்திரப்பதிவுகள் நடக்கலாம்.

### விருச்சிகம்

பொறுப்பான வேலைகளால் அலைக்கழிப்புகள் கூடும். எதிர்பாராத வகையில் சில பணவரவுகளைப் பெறலாம். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நண்பர்களுடன் சேர்ந்து நல்ல காரியம் ஒன்றைச் செய்வீர்கள். உங்களுக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடுவது, பிறருக்கு பிணை கொடுப்பது, கடன் கொடுப்பது போன்றவற்றில் கவனம் அவசியம். வண்டி வாகனங்களில் செல்லும் போது அதிக வேகத்தைத் தவிர்க்க வேண்டும். நிலம், பூமி தொடர்பான விடயங்களும் அனுகூலமாக இருக்காது. தந்தை அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். ஓய்வின்றிப் பரபரப்பாகப் பல வேலைகளைச் செய்ய நேரிடலாம். மனைவி வழியில் தொழிலுக்கு சில உதவிகள் கிடைக்கலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம்.

### தனுசு

குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். நண்பர்கள் மூலம் உதவி பெறலாம்.குரு சாதகமான நிலையில் உள்ளதால், போட்டிகள், எதிர்ப்புகள் இல்லாமல் எந்த வேலையையும் சுலபமாக முடிப்பீர்கள். பெரிய மனிதர்கள் பக்க பலமாக இருப்பர். பிள்ளைகள் தொடர்பான வகையில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். தொழில் ரீதியான ஆதாயங்கள்அதிகரிக்கும். ஆன்மிக பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளிவட்டார தொடர்பு விரிவடையும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரிகள் மூலம் நன்மை அடையலாம். கணவன், மனைவி உறவில் சிறு சிறு சலசலப்புகள் உண்டாகலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

### மகரம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக உங்களின் சேமிப்புப் பணத்தைச் செலவிடலாம். உறவினர்கள் வகையில் அன்புத் தொல்லை உண்டு. சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களுக்கு ஆள்படலாம். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதம் ஏற்படலாம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவு நேரும்.அதிகமான அலைச்சல்கள் இருக்கும். அதற்கேற்ற பலன் கிடைக்காது. தாயின் உடல் நலன் தொடர்பான வகையிலும் செலவு உண்டாகலாம். நீண்ட தூரப் பயணங்களுக்காகப் பெரிய அளவிலான தொகையை செலவிட நேரிடலாம். சகோதரர்கள், பங்காளிகள், சகலைகள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் மூலம் சில காரியங்களைச் சாதிக்கலாம். அவர்களுக்காக எடுத்த முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. கடன் பிரச்சினைகளால் ஏற்பட்ட கலக்கம் தீரும். அதேநேரத்தில் ஒன்றுமில்லாத விடயங்களுக்காக அடிக்கடி கணவன், மனைவியர் சண்டை போட்டுக் கொள்ளலாம். பணவரவுகளைப் பெறலாம். முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.

### கும்பம்

மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். வாங்க நினைத்த பொருள் ஒன்றை சகாயவிலைக்கு வாங்கலாம். மற்றவர்களின் பேச்சைக்கேட்டு சில காரியங்களில் இறங்கிவிட்டு அவதிப்படுவீர்கள். உறவினர்கள் சிலர் தங்களின் வேலைகளை உங்களை நம்பி ஒப்படைக்கலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். உங்களின் முன்னேற்றத்தில் தடைகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். எந்த வேலையையும் நினைத்த வேகத்துக்கு செய்ய முடியாது. பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் கெடுபிடிகளால் மிகுந்த அதிருப்திக்கு ஆளாகலாம். பிள்ளைகள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். எந்த விடயத்திலும் தீர்க்கமான முடிவுக்கு வரமுடியாமல் தவிக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்துகொள்ள வேண்டும். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் உண்டு.

### மீனம்

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். மற்றவர்கள் பாராட்டும் வகையிலான சில காரியங்களைச் செய்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சிறிது, சிறிதாகச் சேமித்த பணம் ஒன்றை, முக்கிய விடயங்களுக்காகச் செலவு செய்யலாம். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். கேட்ட இடத்தில் கடனுதவி கிடைக்கும். மனைவியின் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். உறவுப் பெண்கள் வழியில் திடீர் செலவு உண்டாகலாம்.பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி பாசம் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். வழக்கத்துக்கு மாறான வேலைப்பளுவால் வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். மற்றவர்களின் விமர்சனங்களைச் சந்திக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விளையாட்டுக்கள் பற்றிய தகவல்கள்

* முதன் முறையாக உதைபந்தாட்டம் எந்த நாடடில் எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?
  இங்கிலாந்தில்,. டேர்பி, கி.பி. 217
* கூடைப்பந்தாட்டத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
  கலாநிதி ஜேம்ஸ் நாய்ஸ்மித்,கனடா
* கிரிக்கெட்டை முதலில் ஆரம்பித்து வைத்த கழகம் எது?
  ஹம்பில்டன் கழகம்
* எந்த நாடு ஒலிம்பிக் கூடைப்பந்தாட்டச் சம்பியன்?
  அமெரிக்கா
* பூம்பந்தாட்டம் எங்கு ஆரம்பமானது?
  இந்தியாவில்
* மேசைப்பந்து ஆரம்பமான ஆண்டு எது?
  1900
* கரப்பந்தாட்டத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
  டபிள்யூ.ஈ.மோர்க்கன்




ப.கோபிநாத்
யாழ். இந்துக்கல்லூரிதரம்-6 'ஏ'



தி.சதுர்சன், தரம்7சி,
யா/இந்துக் கல்லூரி.



தி.அபிராமி, தரம்4சி,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.



கி.சோபிதா, தரம்8ஏ,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

# முதல் தந்திச் சேவை

* 1844 ஆண்டில்தான் உலகிலேயே முதலில் தந்தி மூலம் செய்தி அனுப்பப்பட்டது. தந்தி முறையைக் கண்டுபிடித்த சாமுவேல் மோர்ஸ் அவர்களே முதல் தந்தியை அனுப்பினார்.
* அவர் வோஷிங்டனில் இருந்து பால்டி மோர் நகருக்கு அனுப்பிய தந்தியின் வாசகம் இதுதான் "WHAT HATH GOD WROGHT"
* ஆனால் இன்று SMS மூலமே செய்திகள் அதிகளவில் அனுப்பப்படுகின்றன.

எம்.கஜேந்திரன்
காரைநகர்.

# சூரியன்



பறவைகளின் சங்கீதத்துடன்
மெல்ல மெல்லக் கதிர்களை விரித்து
பிரகாசத்துடன் எழுந்து வருகிறாய்!
உன்னை கண்டதுடன் பூக்கள்
வாசனைகளைப் பரப்பி மகிழ்ச்சியில் ஆடுகின்றன
பூக்களில் இருந்த பனித்துளிகள்
உன் பிரகாசத்தைக் கண்டவுடன் மினு மினுக்குகின்றன
உன்னை கண்டவுடன் மாணவர்கள்
பாடசாலைக்குச் செல்கிறார்கள்.
நீ மெல்ல மெல்ல கதிர்களை விரித்து உச்சியில்
பிரகாசத்துடன் எழுந்து வருகிறாய்,
நீ பிரகாசங்களை குறைத்து
மெல்ல மெல்ல மறையைத் தொடக்குகிறாய்

ப.குருப்பிரியன்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

# டென்மார்க்கில் எனது பாடசாலை நாள்கள்











டென்மார்க்கில் ஒல்போக் நகரில் Skipper Climentinter National பாடசாலையில் நான் கல்வி கற்றேன்.

அங்கே இருக்கும் ஆசிரியர்கள் மிகவும் அன்பாக நடந்து கொள்வார்கள். அடித்து தண்டனை தர மாட்டார்கள். அன்பால் எல்லாவற்றையும் திருத்துவார்கள். அங்கு வகுப்பறைகள் மிகவும் சுத்தமாகவும், மிக அழகாகவும் இருக்கும். அங்கேயே நூலகமும் இருக்கும். கணினியின் மூலம் ஆசிரியர் பாடங்களை விளங்கப்படுத்துவார்.

அந்தப் பாடங்கள் மிக இலகுவாகவும் விளங்கக் கூடியவாறும் இருக்கும். அங்கு இருக்கும் இருக்கைகளுக்கு சில்லுகள் பொருத்தப்பட்டிருக்கும். அதைத் தேவையான இடத்துக்கு அசைத்துக் கொண்டு செல்லலாம். காலை 8 மணிக்கு பாடசாலை ஆரம்பித்து ஒரு மணிக்கு நிறைவடையும். அதன்பின் மாலை நேர வகுப்புக்கள் மதியம் ஒரு மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறும். அந்த வகுப்புகளில் பாடங்கள் ஒன்றும் நடைபெறா. முழுவதும் விளையாட்டு மட்டும்தான். இங்கு சப்பாத்தில் சில்லுப் பொருத்தி விளையாடலாம். பனிக்கட்டியில் சறுக்கி விளையாடலாம். கடதாசிகளில் கப்பல் செய்து விளையாடலாம். மாலைநேர வகுப்புக்களில் தொலைக் காட்சியில் சிறுவர்களுக்கான படங்களையும் கண்டு ரசிக்கலாம். தொலைக் காட்சியில் சிறுவர்களுக்கான விளையாட்டுக்களும் விளையாடலாம். மாலை நேர வகுப்புக்களில் உணவைப் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். அங்கு விளையாட்டு இயந்திர உபகரணங்களில் வெள்ளிக் கிழமையன்று விளையாட அனுமதிப்பார்கள். பனிகாலம் வந்தவுடன் அனைவரும் பனியில் சறுக்கும் உபகரணங்களுடன் வருவார்கள். மாலை நேர வகுப்பாசிரியர்கள் எங்களது பாடசாலைக்குச் சற்றுப்பின் உள்ள மலையில் எங்களைச் சறுக்கி விளையாடவிடுவார்கள். நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்போம்.

தே. அபிராம், தரம்4 ஈ, யா/இந்து ஆரம்பப் பாடசாலை.

## விடை தெரியுமா? 122

### உங்களுக்கும் பரிசில்கள்

1. இனிப்பின் சுவையை அறியமுடியாத பிராணி எது?
2. கூடுகட்டி வாழும் பாம்பு எது?
3. இலத்தீன் மொழியில் உள்ள எழுத்துக்கள் எத்தனை?
4. டைனமோவைக் கண்டுபிடித்தவரின் நாடு எது?
5. மிகப்பெரிய ஈ எது?

### விடைகள் 120

1. இலங்கை நிர்வாகசேவையின் சிரேஷ்ட அதிகாரி சிவசுப்பிரமணியம் அச்சுதன்
2. நிருபமா ராஷ்
3. கங்கேஸ்கழி முகம்
4. விவியா ஒனேற்றா
5. பின்லாந்து

### வெற்றி பெற்றோர் விவரம்

★ சா.பபிதா, தரம்-8ஏ, யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.
★ கு.புவித்தா, தரம்-9,டி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
★ க.கபிலன், தரம்-8, உடுவில்/மான்ஸ் மகாவித்தியாலயம்.
★ சி.நிறோஜன், தரம்-6பி, யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
★ சி.லதாங்கி, தரம்-2, யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 03.09.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

# குள்ள நரி



நரி இனத்தின் ஒரு வகையே குள்ளநரி. இது நரியை விடச் சற்றுக் குள்ளமாக இருப்பதால் குள்ள நரி என்று அழைக்கப்படுகிறது. இவை பாலூட்டி வகையைச் சேர்ந்த ஒரு காட்டு விலங்கினம். இவை ஊனுண்ணி வகையைச் சேர்ந்த விலங்குகள். பிற விலங்குகள் உண்ணாமல் விட்டுச் சென்ற எச்சங்களை இவை உண்ணும். இவற்றின் நீளம் சுமார் 60 முதல் 75 சென்ரிமீற்றர் இருக்கும். உயரம் 36 செ.மீ உயரமுடையவை.

சி.குணபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்!!"

"போடுவோம் போடுவோம் ஆட்டத்தைப் போடுவோம்
பூதத்தின் பேராலே புரளியைக் கிளப்புவோம்!
தேடுவோம் தேடுவோம் பாவத்தைத் தேடுவோம்
தேகத்தில் நெய்பூசி தேசத்தைச் சீண்டுவோம்!
கூடுவோம் கூடுவோம் கயவர்கள் கூடுவோம்
குத்தாட்டம் ஆடியே கூட்டத்தை கூட்டுவோம்!
ஆடுவோம் ஆடுவோம் அலுப்பின்றி ஆடுவோம்
ஆருமெம்மைப் பிடிக்கிறார், ஆகையால் ஆடுவோம்!!
(தத்தரிகிட.........)


இரத்தத்தில் நீராடி இரணமாகிப் போனார்
இராத்திரி பகலெலாம் இவர்பிணமானார்
யுத்தத்தின் முத்தத்தில் மூச்சினை விட்டார்
யுகங்களே காணாப் பேரிடர் பட்டார்
சித்தத்தில் வேறென்ன சோகமே சேர்த்தார்
சிரிப்பினை மறந்துமே சிலையென ஆர்த்தார்
இத்தனை கண்டபின் இனியிவர் ஒய்வதா?
இன்னுமே குழப்பணும், எழுகவென் (பே/சே) ய்களே!!
(தத்தரிகிட.........)

மூட்டிடும் தீயினில் நாடே பொசுங்கணும்
மூக்கினை காதினை மூர்க்கமாய் வெட்டணும்
ஏட்டினில் பெண்மையை ஏற்றியே போற்றணும்
எதிரினில் வந்தக்கால் இம்சைகள் செய்யணும்
பூட்டிய மனதினுள் பதுங்கிய பிணியெலாம்
பூதமாய் ஆனபின் பிதுங்கியே பாயணும்
காட்டினை யொத்ததோர் இராச்சியம் நடத்தணும்
கள்ளினை மோந்துமே கத்தியைத் தீட்டணும்!
(தத்தரிகிட.........)

முன்பகை உண்டெனில் முடித்துமே ஓயணும்
மூச்சினில் பாவத்தின் வாசனை வீசணும்
உண்பதும் கழிப்பதும் உறங்கிப் பின் விழித்ததும்
ஊரினுள் இரத்தத்தின் வாடையை முகர்வதும்
பண்பதைத் தொலைப்பதும் பழியினை வளர்ப்பதும்
பாரினில் எங்களின் பணியெனக் கொள்ளணும்
துன்பமே செய்யணும் தொடர்ந்ததை செய்யணும்
தோற்பது குற்றமா நீதியா பார்க்கணும்?!"
(தத்தரிகிட.........)

இப்படிக்கு,
"கிறீஸ் பூதம்"
- தேவா







# ஆத்மா

உங்களால் முடிந்ததெல்லாம்
ஏமாளிகளை ஏமாற்றுவதே
பாவம் அவர்கள்
இனியாவது விட்டுவிடுங்கள்!

உலகிலுள்ள சில பைத்தியங்கள்
வர்ணிக்கப்பட்ட
உங்களது அழகிய பொய்களை
நம்பிக்கிடக்கின்றன
"கோயபல்ஸ்" தோற்றுவிட்டான்
உங்கள் முன்னால்!

ஒருவனை
எத்தனை தடவை
கொல்வீர்கள்
எத்தனை காலமாய்
கொல்வீர்கள்
சாம்பலில் இருந்து
உயிர்ப்பதற்கு
அவன் ஒன்றும்
"பீனிக்ஸ்" அல்ல!
மூன்று நாளின் பின்
உயிர்ப்பதற்கு
அவன் கிறிஸ்த்துவுமல்ல
அவன் ஒரு இனத்தின் "ஆத்மா!"

வல்லரசல்ல
எந்த அரசாலும்
அவனை நெருங்க முடியாது!
ஆண்டவனாலும் அழிக்க முடியாது!

வே.தருமகாரொனிட்,
மட்டக்களப்பு.



# காதல்

இனிப்பும்
புளிப்புமாய்
இரவும்
பகலுமாய்
மாறி மாறி வரும்
மாய உலகம்


து.திலக்,
யாழ்ப்பாணம்.

# ஆதங்கம்



"கருவறையில்
துடிப்போடு இருக்கும்
குழந்தை
பத்து மாதங்களில்
பிரசவமாகின்றது....
எம்
மனவறையில்
கருகட்டிய காதல்
திருமணக்
குழந்தையாய்
மணவறையில்
பிரசவம்
காண்பது எப்போ??

# புறாக்கள் விடும் தூது...!



அந்த நாள்களில்
மாமன்னர் எல்லோரும்
எம்மைக் கொண்டு
தூது அனுப்பினார்களாம்
சரித்திரத்தில் சொல்கிறார்கள்
பெருமையாக
அதன் பின்னர் நாம்
சமாதானத் தூதர்களாக
அடையாளம் குத்தப்பட்டோம்
ஒரு சில அரசியல்வாதிகளால்
இன்னும் சிலர் எம்மை
காதல் தூதுவர்களாக வர்ணித்தும்
களங்கப் படுத்துகிறார்கள்
தயவு செய்து இனிமேல் எம்மினத்தை
எந்தவொரு செயலுக்காகவும்



வம்பிற்கிழுக்காதீர்கள்
செய்யாத குற்றத்துக்காக
சிறையில் வாடும்
சில அப்பாவிகளுக்காகவும்
யுத்த அரக்கனால்
முகவரி தொலைந்து
சிதறிப்போன
சில உறவுகளுக்காகவும்
நாம் இனிமேல்
அமைதியாக
மௌனம் காக்க விரும்புகின்றோம்.

புதுக்கவி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தின் நிழலில் ஒரு சர்வாதிகாரம்

ஞாயிறு காரம்

இலங்கையில் கடந்த 30 வருடங்களுக்கு மேல் மாதாமாதம் புதுப்பிக்கப்பட்டு நடைமுறையில் இருந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார். இதனையடுத்து மக்கள் வெடிகொழுத்திக் கொண்டாடியோ, தேசியக் கொடிகளைக் கையில் ஏந்தி வீதிகளில் இறங்கி ஆரவாரம் செய்தோ இந்தத் தீர்மானத்துக்கு எவ்வித ஆதரவையும் தெரிவித்துள்ளதாகத் தெரியவில்லை. குறிப்பாக இந்தச் சட்டத்தின் மூலம் கொடூரமான முறையில் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்கள் கூடத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கவில்லை.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும், பயங்கரவாதத்தடைச் சட்டம் இன்னும் அமுலில் உள்ள நிலையில் அதற்கு மேலும் சில விதிகள் சேர்க்கப்பட்டு மேலும் மோசமான அடக்குமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற அச்சமே மேலோங்கியுள்ளது. இதற்கு நிறையவே காரணங்கள் உண்டு.

அவசரகாலச் சட்டத்தை நீக்கும் அறிவித்தலை வெளியிட்டு, நாடாளுமன்றில் நிகழ்த்திய உரையில் ஜனாதிபதி எங்கும் பரந்து காணப்படும் இராணுவக் காவலரண்கள் அகற்றப்படும் என்றோ, வீதிச் சோதனைகளும் இராணுவ ரோந்துகளும் நிறுத்தப்படும் என்றோ, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்படு வார்கள் என்றோ உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற் றப்பட்டு மக்கள் தமது சொந்த நிலங்களில் குடியேற் றப்படுவர் என்றோ, வடக்கு, கிழக்கின் சிவில் நிர்வாகத் தில்மேற்கொள்ளப்படும் இராணுவத் தலையீடு நிறுத்தப்படும் என்றோ எவ்வித வாக்குறுதிகளும் வழங்கப்படவில்லை.

### பொய்யுரை

அதேவேளையில் அந்த உரையில் உண்மைக்குப் புறம்பான உண்மையை மூடிமறைக்கும் விடயங்கள் கூறப்பட்டுள்ளமையை அவதானிக்கமுடியும்.

குறிப்பாக போர் முடிந்து இரு வருடங்களுக்கு மேலாகியும் ஒரு பயங்கரவாதச் சம்பவமும் இடம்பெறவில்லையெனவும், அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்தபோதும் ஊடகத் தணிக்கை கொண்டுவரப்படவில்லையெனவும் ஜனாதிபதியின் உரையில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

போர் முடிந்த பின்பு மக்களாலோ விடுதலை அமைப்புகளாலோ எவ்வித வன்முறையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் அரச தரப்பாலும் அரச தரப்புக் குண்டர்களாலும் அரச பயங்கரவாதம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டதை எவரும் மறந்துவிட முடியாது. விலைவாசி உயர்வுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் நடத்தப்பட்ட போராட்டம், பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் என்பன மீது பொலிஸாரும் குண்டர்களும் தாக்குதல்கள் நடத்தினர். தனியார் துறை ஊழியர் களின் ஓய்வூதியத்துக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸாரும் குண்டர்களும் நடத்திய தாக்குதல் காரணமாகவும், துப்பாக்கிச் சூடு காரணமாகவும் ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்தனர்.

### தொடரும் வன்முறை

இதேபோன்று வடக்குக் கிழக்கில் வெள்ளைவான் கடத்தல்கள், கொலைகள், கொள்ளைகள், கப்பம்கோரி ஆள்களைக் கடத்துதல் என்பன தங்குதடையின்றி இடம்பெற்றன. எந்த நேரத்தில் எது நடக்குமோ என்றளவுக்கு மக்கள் அச்சத்துடன் நாள்களைக் கழிக்க வேண்டியுள்ளது. ஆனால் பொலிஸாரோ, இராணுவத்தினரோ இவற்றைத் தடுத்து நிறுத்தவோ, இவற்றைச் செய்பவர்களை சட்டத்தின் முன் கொண்டுவரவோ இல்லை. மாறாக வீதிச் சோதனைகள், இராணுவக் கெடுபிடிகள் என்பன அதிகரிக்கப்பட்டு மக்கள் மேலும் நெருக்கடிக்கு உட்படுத்தப்பட்டனர். தற்சமயம் மர்ம மனிதர்கள் எனக் கூறப்படுபவர்களால் பெண்கள் கொலை செய்யப்படுவதுடன் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உட்படுத்தபடுகின்றனர். மலையகம், கிழக்கு, வடக்கு, மாகாணங்கள் எனத் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளுக்கு இப்படியான பயங்கரங்கள் விரிவுபடுத்தப்பட்டன. இந்த நிலையில் மக்கள் இவர்களைப் பிடிக்கவும், பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கவும் முயற்சி செய்த போதெல்லாம் முறுகல் நிலைமை தோன்றியது. இந்தப் பிரச்சினைகளினால் பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்கும் அடித்து நொருக்கப்பட்டு படுகாயத்துக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஆனால், இந்த மர்மமனிதர்களைப் பொதுமக்கள் பிடிக்க முயற்சிக்கும்போதெல்லாம் அவர்கள் பொலிஸ் நிலையங்களுக்குள்ளோ, இராணுவக் காவலரண்களுக்குள்ளோ ஓடி மறைந்து விடுகின்றனர். இதுவரை எந்த ஒரு மர்மமனிதனும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

### கோத்தபாயவின் மிரட்டல்

இந்த மர்ம மனிதர்கள் தொடர்பாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரமுகர்கள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் ஒரு கலந்துரையாடலை நடத்தினர். இது தொடர்பாக அம்பாறை மாவட்ட உலாமா சபைகளின் தலைவர் கருத்து வெளியிடும் போது மர்ம மனிதர்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக எதுவும் அலசப்படவில்லை எனவும், அதுபற்றி தம்மைப்பேசவே அனுமதிக்கவில்லை எனவும் பொதுமக்கள் கட்டுப்பாடாக நடந்துகொள்ள வேண்டும் எனவும், அதை மீறி ஏதாவது செய்தால் பயங்கரவாத நடவடிக்கையாகக் கருதப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாதுகாப்புச் செயலர் தம்மை மிரட்டினார் எனவும் தெரிவித்திருந்தார்.



### உண்மை வேறு

இதிலிருந்தே வடக்கு, கிழக்கில் இயங்கி கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் போன்றவற்றில் ஈடுபடும் இனம்புரியாதவர்களைப் போன்றே இந்த மர்ம மனிதர்களுக்கும் ஒரு வலுவான பின்னணி உண்டு என்பதையும் அந்தப் பின்னணி எது என்பதையும் மக்களால் புரிந்து கொள்ளமுடியும். இவற்றிலிருந்து இந்த நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்ற ஜனாதிபதியின் கூற்று எவ்வளவு உண்மைக்குப் புறம்பானது என்பதைப் நாம் புரிந்துகொள்ளமுடியும். அதேவேளையில் அரச பயங்கரவாதம் ஒரு சில மக்கள் விரோத சக்தியின் துணையுடன் செயற்படுத்தப்படுகிறது என்பது மட்டும் தெட்டத்தெளிவான உண்மையாகும். போர் நடந்த காலத்திலும், அதன் பின்பும் தன்னால் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். போர் நடந்தபோதும் போரின் இறுதி நாள்களிலும் ஒரு சில அரச சார்பு ஊடகங்கள் தவிர வேறு எந்த ஒரு ஊடவியலாரும் போர்ப் பிரதேசங்களுக்குள் அனுமதிக்கப்படவில்லை.

**சந்திரசேகர ஆசாத்**

### ஊடக சுதந்திரம் இல்லை

அதுமட்டுமன்றி இலங்கையில் ஊடக சுதந்திரம் பேணப்பட்டவிதம் மிகப் பயங்கரமானது. ஊடகவியலாளர்கள் தாமாகவே ஒரு சுய தணிக்கைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதற்குக் கட்டுப்பட மறுத்த பலர் கொல்லப்பட்டனர். பலர் கடத்தப்பட்டுக் காணாமல் போயினர். பலர் சிறை செய்யப்பட்டனர். சிலர் உயிர் பாதுகாப்புக் கருதி நாட்டைவிட்டு ஓடினர். ஊடக நிறுவனங்கள் தாக்குதலுக்கு உட்படுத்தப் பட்டு பெரும்சேதத்துக்கு உள்ளாகின. இறுதியாக உதயன் செய்தி ஆசிரியர் குகநாதன் மீது நடத்தப்பட்ட கொலை முயற்சியில் அவர் படுகாயமடைந்து மயிரிழையில் உயிர்தப்பினார்.

**அனைத்துலக ரீதியில் எழும் அழுத்தங்களைச் சமாளிக்கவே அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. ஆனால் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்பவற்றின் மூலம் கெடுபிடிகள் மேலும் அதிகரிக்கப்படும் சாத்தியங்களே அதிகம் தென்படுகின்றன.**

இப்படியாக ஊடகங்கள் மேலும் ஊடகவியலாளர் மேலும் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரங்கள் தொடர்பாக இதுவரை எவருமே தண்டிக்கப் படவில்லை. இதுதான் இந்த நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி வழங்கிய ஊடக சுதந்திரம்.

உலகின் மிகக் கொடுமையான பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டதாகத் தம்பட்டமடிக்கும் ஜனாதிபதியால் ஏன் அரச பயங்கரவாதத்தை ஒழிக்க முடியவில்லை எனத் தனது உரையில் ஏன் விளக்க முடியவில்லை என்பதை மக்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கடந்த கால நடவடிக்கைகளிலிருந்தும் சரி, ஜனாதிபதியின் உரையின் போதும் சரி அவர்கள், தங்கள் மக்கள் விரோதப் போக்கை மறைத்துப் புத்தர்களாகவே காட்சியளிக்க முயல்கின்றனர் என்பது தெளிவாகிறது. தங்கள் தவறுகளை ஏற்றுக் கொள்ளாத எவருமே தங்கள் தவறுகளிலிருந்து வெளிவந்து விடமுடியாது.

### சர்வாதிகாரம் தொடரும்

இன்று இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் கொடுக்கும் அழுத்தங்களைத் தவிர்க்கவும், செப்ரெம்பரில் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் எழும் பிரச்சினைகளையும் சமாளிக்கவுமே தற்சமயம் இந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது. ஆனால் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்பவற்றின் மூலம் கெடுபிடிகள் மேலும் அதிகரிக்கப்படும் சாத்தியங்களே அதிகம் தென்படுகின்றன. அதாவது ஜனநாயகத்தின் பேரால் ஒரு சர்வாதிகார ஆட்சி வழமை போலவே தொடரும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CMO ஆசிய விருதுகளில் சிறந்த கூட்டாண்மை பொறுப்புக்காக 'செலிங்கோ லைப்' தெரிவானது

செலிங்கோ லைப் நிறுவனத்துக்கு அதன் சமூகப் பொறுப்புக்கான சர்வதேச அங்கீகாரம் மீண்டும் ஒரு தடவை கிடைத்துள்ளது. வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப்படுத்தல் ஆற்றல்களுக்காக CMO வின் இரண்டாவது ஆசிய விருது வழங்கும் விழாவில் மிகச் சிறந்த கூட்டாண்மை சமூகப் பொறுப்பு செயற்பாடுகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் ஜூலை 22 இல் இடம்பெற்ற இந்த வைபவத்தில் விருது வென்ற ஒரேயொரு இலங்கையின் காப்புறுதி நிறுவனம் செலிங்கோ லைப் ஆகும்.

"சமூகக் கூட்டாண்மைபொறுப்புக்கான எமது அர்ப்பணம், நன்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக அது எமது கூட்டாண்மை விழுமியங்களோடு பின்னிப்பிணைந்துள்ளது'' என்று கூறினார் செலிங்கோ லைப்பின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆர். ரெங்கநாதன். ''விருதுகளை வெல்லுவது எமது நோக்கமல்ல. ஆனால், ஆசியாவின் தலைசிறந்த கூட்டாண்மை சமூகப் பொறுப்புச் செயற்பாடுகளை நாம் கொண்டுள்ளோம் என்பது எமக்கு உற்சாகமளிக்கிறது'' என்று அவர் மேலும் கூறினார்.

ஆசியாவின் மிகச் சிறந்த வர்த்தக முத்திரை விருதுகள் Global Research Cell இன் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரியால் (CMO) மதிப்பீடு செய்யப்படுகின்றது. சந்தை ஆதிக்கம், வர்த்தக முத்திரையின் வாழ்காலம், கீர்த்தி, வாடிக்கையாளர் விசுவாசம் மற்றும் சந்தை அங்கீகாரம் என்பவற்றின் அடிப்படையில் அந்தத் தெரிவு இடம் பெற்றுள்ளது.

சமூகக் கூட்டாண்மைப் பொறுப்புக்காக செலிங்கோ லைப் வென்றுள்ள மூன்றாவது பெருமைக்குரிய சர்வதேச விருது இதுவாகும். 2005 செப்ரெம்பரில் ஆசியாவுக்கான முதலாவது கூட்டாண்மை சமூக பொறுப்பு விருதை வென்று வரலாறு படைத்தது. காப்புறுதித் துறைக்கான ஒன்பதாவது ஆசிய விருது வழங்கும் விழாவிலேயே இந்த விருது வெல்லப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் உலக முத்திரை காங்கிரஸால் சமூக சந்தைப்படுத்தல் பிரிவில் உலகளாவிய வர்த்தக முத்திரை சிறப்பு விருது செலிங்கோ லைப்புக்கு வழங்கப்பட்டது.

செலிங்கோ லைப்பின் தனிச்சிறப்பு மிக்க கூட்டாண்மை சமூகப் பொறுப்புத் திட்டம் ''ஆரோக்கியமான ஒரு தேசம்'' என்ற தொனிப் பொருளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. சுகாதாரத்தோடு தொடர்புடைய பல சேவைகள் இதன்மூலம் முன்னெடுக்கப்படுகின்றன. கம்பனி 8 வருடங்களாகத் தொடர்ந்து இந்தச் சேவையை வழங்கி வருகின்றது. ''வைத்திய ஹமுவ'' என்ற இலவச மருத்துவ முகாம் திட்டத்தோடு இணைந்ததாக மேற்கொள்ளப்படும் இந்த சமூகத் திட்டத்தின் மூலம் வைத்தியர்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று சேவைகளை வழங்கி வருகின்றனர். இதன் மூலம் கிராமப்புற சமூகங்களைச் சேர்ந்த 1,00,000 இற்கும் அதிகமான மக்கள் நன்மையடைந்துள்ளனர்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ''செனஹசக உதானய'' என்ற தொனிப்பொருளின் கீழான தொடர் கல்விக் கருத்தரங்குகள், தேசிய இரத்த மாற்ற சேவை நிலையத்துடன் இணைந்து நாடு முழுவதும் வருடாந்தம் நடத்தப்படும் இரத்த தானம், தலசீமியா நோய் பற்றிய சமூக விழிப்புணர்வுத் திட்டம் என்பனவும் இவற்றில் அடங்கும்.

சுகாதாரத் துறையோடு தொடர்புடைய கூட்டாண்மை சமூகப்பொறுப்புத் திட்டங்களுக்கு மேலதிகமாக செலிங்கோ லைப் கிராமப்புறங்களைச் சேர்ந்த வசதிகுறைந்த மாணவர்களின் கல்வி உட்கட்டமைப்புக்கு ஆதரவு வழங்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றது. பாடசாலைகளுக்கு வகுப்பறைகளை கட்டிக்கொடுத்தல், தேவையான இடங்களுக்கு நீர் விநியோகத்தை வழங்கள் என்பன இதில் அடங்கும். 2010 நிதியாண்டில் மட்டும் கஹட்டகஸ்திகிலிய, யாழ்ப்பாணம், மொனராகலை மற்றும் எம்பிலிபிட்டிய ஆகிய இடங்களின் பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலைகளின் மீள்கட்டமைப்புக்கும் வகுப்புக்களைக் கட்டிக் கொடுப்பதற்கும் 4.1 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 2010 இல் இலங்கை இராணுவத்தின் சேவா வனிதா பிரிவோடு இணைந்து ஊனமுற்ற படைவீரர்களுக்காக நான்கு வீடுகளும் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

# வளர்ந்து வரும் கல்விச் சமுதாயத்தில் வியாபார முகாமை நிறுவனத்தின் பங்களிப்பு



தேசிய வியாபார முகாமை நிறுவனம் (NIBM) 1968ஆம் ஆண்டு கைத்தொழில் மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது. இந்த நிறுவனம் கடந்த 43 வருடங்களாகத் தனது அளப்பரிய சேவையை ஆற்றி வருவதுடன் இளைஞர் அலுவல்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் சட்ட ஆளுமை உடைய ஓர் அமைப்புமாகும். கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட இந்த நிறுவனம் தனது பிராந்தியக் கிளைகளைக் கண்டி, காலி, குருநாகல் ஆகிய பிரதேசங்களில் விரிவாக்கியுள்ளதுடன் தற்போது யாழ்ப்பாணத்திலும் தனது சேவையை விஸ்தரித்துள்ளது. இலங்கையின் முன்னணி வியாபார கல்வி நிறுவனமாகிய NIBM இற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (University Grant Commission), No 16 of 1978 Universities Act இன் கீழ் பட்டப் படிப்பை வழங்கும் ஒரு நிறுவனமாக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட தமது அனைத்துக் கற்கைநெறிகளும் மாறிவரும் நவீன உலகத்துக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. NIBM ஆனது கற்கைநெறிகளைச் சொந்தமாகவும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் கூட்டாக இணைந்தும் வழங்கிவருகின்றது. இந்தக் கற்கை நெறிகள் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

* Degree programmes
* Diploma programmes
* Certificate courses
* Foundation courses
* Workshops and seminars

மேலும் NIBM ஆனது விஞ்ஞான மாணிப் பட்டப்படிப்பை University College Dublin, Ireland உடன் இணைந்து பன்வரும் துறைகளில் வழங்கிவருகின்றது.

* வியாபார முகாமைத்துவத்தில் விஞ்ஞான மாணிப் பட்டப்படிப்பு

(BSc in Business Management)

* மனிதவள முகாமைத்துவத்தும்
* கைத்தொழில் முகாமைத்துவத்துவம்
* விநியோக, திட்ட முகாமைத்துவம்

* முகாமைத்துவ தகவல் தொழில்நுட்ப முறைமையில் விஞ்ஞானமாணிப் பட்டப்படிப்பு (BSc in Managmenet Information System அத்துடன் முகாமைத்துவப் பயிற்சி, அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு ஆலோசனை சேவைகள், பாடசாலையிலிருந்து விலகிய மற்றும் வேலை தேடுவோருக்கான பயிற்சி போன்றனவற்றை வழங்கிவருகின்றது. உங்கள் எதிர்காலத்தையும், உயர் கல்வியைத் தொடர்வதற்கும் NIBM யை ஏன் தெரிவு செய்ய வேண்டும் என்பதற்கான சில காரணங்கள்:

**NIBM இன் வளங்கள்**

கல்வி, தொழில் தகைமையில் அனுபவமுள்ள உள்ளக மற்றும் வெளியக விரிவுரையாளர்களின் கற்பித்தல் மற்றும் வழிகாட்டல்கள். புதிய வெளியீட்டு (Latest Edition) புத்தகங்களுடன் கூடிய வசதியுள்ள நூலகம் மற்றும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் வசதிகள் உடைய கட்டடம். நவீன மயப்படுத்தப்பட்ட விரிவுரை மண்டபம், கணினி ஆய்வு கூடம் ஆகியவற்றை NIBM கொண்டுள்ளது.

**NIBM இன் கலந்துரையாடல்களும் பயிற்சிப்பட்டறைகளும்**

பெரும்பாலான அரச, தனியார் நிறுவனங்களுடைய தொழிலாளர்களுக்கு NIBM பயிற்சிப்பட்டறைகளை நவீன யுகத்துக்கேற்ப வழங்கிவருகின்றது. மேலும் வேலைத் தேடுவோருக்கும் வேலையில் ஸ்திரப்படுத்துவோருக்கும் NIBM பயிற்சிப் பட்டறைகளை வழங்கி வருகின்றது.

**NIBM இலங்கையில் அதி சிறந்த வியாபார நிறுவனங்கள் பட்டியலில் உள்ளது**

LMD Magazine ஆல் 2011 ஆம் ஆண்டில் இலங்கையின் அதி சிறந்த 20 வியாபார நிறுவனங்கள் பட்டியலில் NIBM உள்ளடக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பிரபல்ய நிறுவனமாகிய NIBM தற்போது யாழ். மண்ணில் கல்விச் சேவையைப் பெரிய அளவில் நிலைநிறுத்துவதற்காகக் காலடி எடுத்து வைத்துள்ளது. ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை எழுதிய யாழ் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண மாணவர்களுக்கு இது சிறந்த நவீன முறைமையிலான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு பெரிய சாதனமாகும். (த)



வங்கியின் கொடிகாமம் விரிவாக்கற் கிளை திறப்பு விழாவின் போது பிரதேச முகாமையாளர் மாணிக்கசிங்கி மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி சுமணஸ்ரீ கிளை முகாமையாளர் வீ.கே. தங்கராசா ஆகியோர் உள்ளனர். (ம-207)

# டிமோ நிறுவனம் அறிமுகப்படுத்தும் நவீன ஒளியூட்டல்

டீமோ நிறுவனம் அண்மையில் உயர்மட்ட கட்டடக்கலை நிபுணர்கள், ஆலோசகர்கள், பொறியியலாளர்கள் ஆகியோருக்கு உலகம் முழுவதிலும் ஒளியூட்டலில் இடம்பெற்றுவரும் அபிவிருத்தி பற்றி சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் எடுத்து விளக்கியது. டீமோ தன்னுடைய ஒளியூட்டலுக்கான தீர்வை டீமோ லைட்டிங் என்ற நாமத்தின் கீழ் அறிமுகப்படுத்துகின்றது. உலகின் மிகத் தரம் வாய்ந்த பண்டக் குறிகளான, Osram, Siteco, Vossloh Schwabe போன்றவை டீமோவுடன் ஏற்க னவே இணைந்துள்ள வேளையில் புதிதாக ஜேர்மனித் தயாரிப்பான Rudolf Zim mermann, Bamberg GmbH யும் இணைந்துள்ளது.

**டீமோ ஒளியூட்டல்**

எதிர்காலத்தில் ஒளியூட்டல் (Dimo Lighting - Lighting the future) எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் RZB, Vossloh Schwabe, Siemens நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகளின் சிறப்புரைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் உரையாற்றிய க்கட்டடக்கலை நிபுணர் அனுரா ரட்ணவிபூஷண, உலகப் புகழ்பெற்ற ஜேர்மன் ஒளியூட்டல் தயாரிப்புக்களைச் சேர்ந்த நிபுணர்கள் வழங்கிய தகவல்கள் எனக்கு நவீன ஒளியூட்டல் பற்றித் தெளிவான விளக்கம் கிடைக்க உதவின'' எனத் தெரிவித்தார்.

முதலாவது உரையை RZB சர்வதேச விற்பனைப் பணிப்பாளரான பஸ்கல் றிங்கின்பேர் கரும், பீட்டர் ஹோல்சிங்கரும் - (RZB ஆசிய பசுபிக் ஆஸ்திரேலிய பிராந்திய விற்பனைத் தலைவர்) வழங்கினர். இவர்கள் தமது உரையில் RZB ஒளியூட்டல் சாதனங்கள் பற்றி விரிவாகக் கூறியதுடன், மனிதர்களின் உணர்வுகளும் மனநிலைகளும் மின்விளக்கொளியில் எவ்விதம் மாற்றமடைய முடியும் என்பது பற்றியும் அவர்களின் செயற்றிறனை சரியான ஒளியூட்டல் மூலம் எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பது பற்றியும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரலிசை வித்தகர் இசைவேந்தன் பிலிப் ஜோன்கபாஸ்

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம் 8



இசைநாடகம் என்னும் அரிய கலைவடிவத்தின் ஊடாகவே ஈழத்தில் செந்நெறி இசைக் கலையானது அறிமுகமாகி இன்று பெருவளர்ச்சி கண்டுள்ளது. நவீன வசதிகள் அற்ற அந்தக் காலத்தில் பொதுமக்களின் செவிக்கும் விழிக்கும் விருந்தாக அமைந்த இந்த அரங்கானது இசையின் அனைத்துவிதமான நுட்பங்களும் கையாளப்பட்டு முழுமையாக இசையால் அழகுசெய்யப்பட்டதால் இசைநாடகம் எனப் பெயர் பெற்றது. இசை மேதைகளால் வளர்க்கப்பட்ட இத்துறையின் முக்கிய துணையிசைக் கருவியாக நாற்காலியில் அமர்ந்தவாறு வாசிக்கப்படும் ஹார்மோனியமே பயன்படுத்தப்பட்டது. முழுமையான இசையறிவு கொண்ட ஹார்மோனியக் கலைஞர்களே இந்தத் துறையில் ஈடுபட்டு இன்றுவரை நிலைத்த பெயர் பெற்று வருகின்றனர். கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளாக இந்தக் கருவியிசையில் துறைதோய்ந்த கலைஞராகப் பணியாற்றித் தற்கால இசைநாடகத் துறையின் முதுகலைஞராக வாழ்ந்து வருபவர் பிலிப் ஜோன்கபாஸ்.

அமரர் அந்தோனிப்பிள்ளை பிலிப் - திருமதி திரேசம்மா தம்பதியரின் மகனாக 26.03.1951 இல் வளலாய் என்னும் ஊரில் இவர் பிறந்தார். இவர் தனது தொடக்க காலக் கல்வியை இடைக்காடு மகா வித்தியாலயத்தில் கற்றுக் கொண்டார். கல்வியைவிடக் கலைத்துறையில் மிகுதியான ஆர்வம் இருந்தமையால் இசைத்துறையிலேயே முழுமையாக ஈடுபட்டு, அந்தக் காலத்தில் இசைநாடகத்துக்குரிய ஒப்பற்ற ஹார்மோனியக் கலைஞராக விளங்கினார். தனது தந்தையிடமே இந்தக் கருவியின் விரல் நுட்பங்களைத் தெளிவாகக் கற்றுக் கொண்டதுடன் இசைநாடகங்களுக்குத் தாளம் போடும் சிறுவனாகவும் பல நூற்றுக்கணக்கான மேடைகளில் பங்குகொண்டார்.

சங்கீதபூஷணம் ஊரிக்காடு நடராசா என்பவரிடம் செந்நெறி இசையைக் கற்றுக்கொண்ட இவர் ஹார்மோனியத்திலும் இந்த இசையை இசைக்கும் முயற்சியை மேற்கொண்டார். 'கமகம்' எனப்படும் இசை நுட்பத்தை இந்தக் கருவியில் இசைக்க முடியாது எனும் கருத்தியலைத் தகர்த்து விஸ்தாரமான இராக ஆலாபனை, நுட்பமான கணக்குவழக்குகள், இராகம், தாளம் பல்லவி போன்ற நுட்பமான இசைப்பகுதிகளை இந்தக் கருவியில் தந்தையுடன் இணைந்து வாசித்து இசைக்கச்சேரிகளை நடத்திவந்ததுடன் இசைநாடகங்களுக்கான துணைக் கருவியாளராகவும் தனது பணியைச் சிறுவயதிலேயே ஆரம்பித்தார்.

குரலிசையிலும் விரலிசையிலும் சிறந்து விளங்கிய இவர் நடிகமணி வி.வி.வைரமுத்துவின் அரிச்சந்திரா மயானகாண்டத்தில் லோகிதாசனாக நடித்து வந்தார். இவ்வாறு இசைநாடக அனுபவத்தை நிறைவாகப் பெற்றுத் தனது பதினைந்தாவது வயதில் நடிகமணியின் நாடகங்களுக்கு ஹார்மோனியம் வாசிக்கத் தொடங்கினார். அத்துடன் அந்தக் காலத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த சின்னமேளம், ஆட்டக் காவடி, வில்லிசை, இசைச்சொற்பொழிவு, பஜனை போன்ற நிகழ்வுகளிலும் துணையிசை வழங்கிவந்தபோதும் இசைநாடகத் துறையிலேயே அதிகமாக ஈடுபட்டு வந்தார்.

இசைஞானமும் நடிப்புத்திறனும் அரங்க ஆளுமையும் தமிழ் அறிவும் கொண்ட நடிகர்கள் ஈழத்தின் இசைநாடக நடிகர்களாக இருந்த காலத்தில் இசைநாடக மேடையானது இசை, தமிழ், நடிப்பு என்பனவற்றில் போட்டி நடைபெறும் களமாகவே இருந்தது. இந்தப் போட்டிகளுக்கு ஈடுகொடுத்து அரங்கைச் சிறப்புறச் செய்ய வேண்டிய பொறுப்பு துணையிசைக் கருவியாளருக்கே இருந்தது. வி.வி.வைரமுத்து, வி.என். செல்வராசா, உருத்திராபதி, வசாவிளான் மார்க்கண்டு, கரவெட்டி கே.வி.நற்குணம், அரியாலை க.இரத்தினம், மாதனை கணபதிப்பிள்ளை சின்னமணி, சுன்னாகம் ம.தைரியநாதன், அரியாலை வ.செல்வரத்தினம் வி.ரி.செல்வராசா போன்ற இசைநாடக மேதைகள் மரபுவழி தவறாமல் இந்தக் கலையின் புனிதம் கெடாமல் ஈழத்தின் பகுதிகள் எங்கும் நாடகங்களை மேடையேற்றிய காலத்தில் ஒவ்வொரு நடிகரின் திறன்களையும் நன்கு புரிந்து அவர்களுக்குப் பக்கபலமாகப் பல ஆண்டுகளாக ஹார்மோனியம் வாசித்துப் பெறுதற்கரிய அனுபவங்களைப் பெற்றுக் கொண்டவராக இவர் காணப்படுகின்றார்.

பைரவி, சிந்துபைரவி, அடானா, காம்போதி, கரஹரப்பிரியா, பிலஹரி, மாண்டு, மோகனம், காபி, தேஸ் போன்ற இராகங்களை நவரச பாவங்களுக்கு ஏற்ப எமது இசைநாடக முன்னோடிகள் எவ்வாறு மேடைகளில் பயன்படுத்தினர் என்பதைத் தற்கால இளம் நடிகர்களுக்குப் பாடி. நடித்துக்காட்டவல்ல ஒருவராகவும் ஈழத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற இசைநாடகங்களின் பாடல்கள், வசனங்கள் அனைத்தும் மனப்பாடம் கொண்டவராகவும் காட்சியமைப்புக்கள், மேடையமைப்புக்கள் எவ்வாறு அமையவேண்டும் என்னும் விதிமுறைகளை நன்கு அறிந்த மூத்த கலைஞராகவும் இவர் விளங்குகின்றார்.

மரபு வழி தவறாத இசைக் கச்சேரியை ஹார்மோனியத்தில் வழங்கக் கூடிய ஒருவராகத் திகழும் இவரது இசைத் திறனை ஆவணப்படுத்தும் முகமாக 23.05.2007 அன்று நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் 'இசைபடு நினைவுகள்' என்னும் பெயரில் மாபெரும் இசை நிகழ்வானது நடத்தப்பட்டபோது இவரது விரலின் வேகத்தையும் இராகம், கீர்த்தனை, கற்பனாஸ்வரம் வாசிக்கும் நுட்பங்களையும் கணக்கு வழக்குகளில் காட்டிய வினோதங்களையும் கண்டு அனைவரும் மனதாரப் பாராட்டி ஹார்மோனியம் மொட்டை வாத்தியம் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டனர். எந்தவொரு கருவியிலும் கமகம் தானாக ஒலிப்பதில்லை, வாசிப்பவரின் முயற்சியிலும் ஆற்றலிலுமே அது தங்கியுள்ளது என்பதற்கு இவரது ஹார்மோனிய இசை சிறந்த உதாரணமாகும்.

நடிகமணி.வி.வி.வைரமுத்துவின் காலம் ஈழத்து இசைநாடக வரலாற்றில் பொற்காலம் என்றே கூறலாம். அவரால் மேடையேற்றப்பட்ட இசைநாடகங்களில் நடித்த அனைவரும் சிறந்த இசைஞானமுள்ளவர்களாகவே இருந்தனர். ஆகையால் ஆவலோடு சென்று ஹார்மோனியத்தை வாசித்து வந்தோம். மாலையில் தொடங்கும் நாடகம் மறுநாள் காலையில் தான் முடிவடையும். நேரம் போவது தெரியாமல் நாடகம் நடைபெறும். ஆனால் தற்காலத்தில் இசைநாடகத் துறையில் ஈடுபடுவதற்குரிய அடிப்படைத் தகைமைகள் எதுவுமற்றவர்களால் இந்தக் கலையானது சீரழிக்கப்பட்டு வருகின்றது. மெல்லிசை நிகழ்வுகளில் வாசிப்பது போன்று ஹார்மோனியத்தையும் தபேலாவையும் வாசித்து சுருதி, லய சுத்தமில்லாமல் பாடுவோரால் இசைநாடகத்துக்குரிய பண்புகள் கவனிக்கப்படாமல் இசைநாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. சங்கரதாஸ் ஸ்வாமிகளின் இசைநாடகங்கள் இசைநுட்பம் நிறைந்தவையாகக் காணப்படுவதால் இந்தத் துறையில் ஈடுபட விரும்புவோர் செவ்விசையைக் கற்றுக்கொள்ள முன்வரவேண்டும் என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார். ✱

வசாவிளான் தவமைந்தன்

# வாத நோயாளிக்கு உகந்த ¿சண்டியிலை

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

### குப்பைமேனி

வேறுபெயர்: பூனைவணங்கி,மேனி
தாவரவியற்பெயர்: Acalypha indica
(அக்கலியா இண்டிக்கா)
குடும்பம்: Euphorpiaceae (யூபோவியேசியா)
சிங்களப் பெயர்: முகத்தவாரி, ஹரீதமஞ்சரி
ஆங்கிலப்பெயர்: Cat's straggle

இது சிறு பூண்டு. இலைகள் தண்டைச் சுற்றி சித்திர வடிவில் அமைந்திருக்கும். இலைக்காம்பு சற்று நீண்டது, சிறிய பூக்கள்.

இதன் இலையைக் குடிநீரிட்டு 1-2 தேக்கரண்டி வீதம் பருகிவர வயிறு நன்கு கழியும். குடற்புழுக்களும் வெளியாகும். குப்பை மேனி இலையை அரைத்து புண்களுக்குப் போட புண்கள் மாறும்.



இதன் இலைச்சாற்றை சம அளவு தேங்காய் எண்ணெய், சிறிது மஞ்சள் பொடி என்பன சேர்த்துக் காய்ச்சிச் சொறி, சிரங்கு, புண்களுக்குப் பூசிவர மாறும்.

### அவுரி

வேறு பெயர்-நீலி
தாவரவியற்பெயர்- (Indigofera tinctoria)
இண்டிகோபெரா ரிங்ரோறியா
குடும்பம் -Papilionaceae பப்பிலியோனேசியோ
சிங்களப் பெயர் -நில் அவரிய
சமஸ்கிருதப் பெயர்-நீலி, நீலினி
ஆங்கிலப் பெயர்-Indigoplant

இது ஒரு சிறு செடி வகையைச் சேர்ந்தது. கூட்டிலைகள் சிற்றிலைகள் முட்டை வடிவானவை. பூக்கள் இளஞ்சிவப்பு நிறம். காய்கள் கொத்துக் கொத்தாகக் காணப்படும். இதன் இலையைத் தேசிப்புளிச் சாறு விட்டரைத்து நாள்பட்ட புண்கள், கரப்பான், காளாஞ்சகப் படை என்பவற்றுக்குப் பூசிவர அவை மாறும்.

இலைச்சாற்றைத் தேங்காயெண்ணெய் அல்லது நல்லெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி அந்த எண்ணெயைச் சொறி, சிரங்கு கரப்பன், காளாஞ்சகப் படை போன்றவற்றுக்குப் பூசிவரக் குணமேற்படும். இதன் வேரைப் பாலில் அரைத்து நெல்லிக்காய்ப் பிரமாணம் சிறுவிஷ ஜந்துக் கடிகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

### சண்டியிலை மரம்

வேறுபெயர்-சண்டிக்கீரை, இலஜ்ஜை கெட்டமரம்
தாவரவியற்பெயர்- Pisonia grandis
(பிசோனியா கிராண்டிஸ்)
குடும்பம்-Nyctaginaceae (நிக்ரஜினேசியே)
ஆங்கிலப் பெயர்-Lady love/ Ever green

இதன் இலை கறிசமைக்க உதவுவதால் சண்டிக்கீரை என்று அழைக்கப்படுகிறது. எனினும் இது சிறு மரவகுப்புக்குரியது. தென்னிந்தியாவிலும் இலங்கையில் சில இடங்களிலும் இதனை இலஜ்ஜை கெட்டமரம் அல்லது இலச்சை கெட்டமரம் என அழைக்கிறார்கள். அதாவது வெட்கங் கெட்டமரம் என்பது இதன் கருத்து. சண்டியில் ஆண், பெண்மர பேதமுண்டு. பெண்மரம் சற்றே மஞ்சள் நிற இலைகள் உடையது. ஆண்மர இலை கரும்பச்சைநிறம், தனி இலைகள் அகலமானவை, இலைநுனி கூராக இருக்கும். மரப்பட்டை வெண்மை நிறமானதாக இருக்கும்.

இதன் இலையை வறையாக வறுத்து உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டுவர மலச்சிக்கல் நீங்கும். வாத நோயாளிகளுக்கு இது அ[illegible]லமாகும். எனினும் இது உஷ்ண குணத்தை ஏற்படுத்தும் என்பதால் மழைக் காலத்தில் இதனை உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

இலைக்கஞ்சியிலும் சண்டியிலையைச் சேர்த்துக் கொள்ளலாம்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 177

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| | ■ | | ■ | 12 | | | ■ |
| ■ | 13 | | 14 | | ■ | 15 | 16 |
| 17 | | | | ■ | 18 | | |
| 19 | | | ■ | 20 | | ■ | |
| 21 | | ■ | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1.நடிப்பு
4. தகைமை உடைய தன்மை
7.பெருக்கல் அடையாளம்
8. சீனி போன்றது
9.இவன் ஒரு மகாகவி
11. கயிறு
12. கூடாத அல்ல
13. கால்நடையாகச் செல்பவன்
15. நவக்கிரங்களில் ஒன்று
17. விவகாரம்
18. ஒட்டுவதற்குப் பயன்படும்
19. வேள்வி
20. யான்
21. சாப்பிடு
22. தாமரை

### மேலிருந்து கீழ்

1. சாதகம் அல்ல.
2. இருப்பிலும் கட்டுவர், கட்டட வேலைகளிலும் கட்டுவர்.
3. இராமன் தம்பியாக வரித்துக் கொண்டவர்களுள் ஒருவன்.
4. செய்தி/ துப்பு
5.பஞ்ச காவியங்களுள் ஒன்று
6. திடீரென
10. போட்டிக்குக் கட்டுவது
12. குள்ளத் தன்மைக்குப் பெயர் போன பிராணி
13. பாடல் இசைப்பவன்.
14. ஓர் ஏவுகணை ரகம்
16. துக்கம் தருவது
17. நோய்
18. பின்னர் என்பதைக் குறிப்பது
20. பால் கூறா உயர்திணைத் தன்மை

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்ட சாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக் கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 177**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 07.09.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட் டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.177 இற்கான விடைகள் 11-09-2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 175 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) விகடகவி. (5) பகு (7)பலி (8) ரதபவனி (9)சோகம் (10) தகரம். (12)அம்பு (14) புடம் (15) ஆணி (16) போகம் (18) அதி (19) திரிதல். (21) நகர (22)சில் (23) கபிலர்

### மேலிருந்து கீழ்

(1) விபரீத புத்தி (2)கலி. (3)கரகம். (4) விதம் (5) பவளம். (6) குனி (9) சோரம் போதல் (11) கட (12) அணி (13) புத்திரர் (15) ஆம் (17) கல் (18) அகல (20) ரிசி (21) நபி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 175 இற்கான சரியன விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **P.T.ராஜபதி,** மு/ துணுக்காய் அ.த.க.பாடசாலை, துணுக்காய்.

2 ஆம் பரிசு — **ச. துவாரகா,** அளவெட்டி தெற்கு (மதவடி), அளவெட்டி.

3 ஆம் பரிசு — **தே.கலைமகள்,** விநாயகர் வீதி, அல்வாய் தெற்கு, அல்வாய்.

4 ஆம் பரிசு — **சிறி - நூட் விநோதன்,** கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம்.

5 ஆம் பரிசு — **எஸ். சுதாகர்,** இல. 17/A தவசிக்குளம், கண்டி வீதி, வவுனியா.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

**ப.தர்சிகன்,**
சி.சி.த.க.பாடசாலை, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

**J.மரியதர்ஷினி,**
சென்.தோமஸ் ஒழுங்கை, பருத்தித்துறை.

**பா. யசோதா,**
இல. 360/ 1 D அளுத்மாவத்தை ரோட், கொழும்பு- 15

# கன்னி...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து சிலவேளை - என்பது மாறி பலவேளையாகிப் பின் வழமையாகிவிட்டது.

இப்போது ஓர் இரகசியத்தைச் சொல்கிறேன். நான் சைக்கிளின் முன்பாரில் இருப்பேன். சுரேஸ் அண்ணா என்னைத் தொட்டு உணர்வைத் தூண்டி பங்கீடு செய்து கொள்வார். அந்நேரம் அது எனக்கும் சரியாகப்பட்டது. சரியாகப்பட்டது மாத்திரமல்ல எனக்கும் அப்படி ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. சொல்லப்போனால் அது ஒரு ஒத்திகைதான். அன்று அம்மன் கோயில் திருவிழா. இரவு ஏழு மணி இருக்கும். சுரேஸ் அண்ணா என்னை வரும்படி தூண்டினார். அம்மாவும் மறுப்பில்லாமல் வழியனுப்பி வைத்தார். திருவிழா முடியவில்லை இரவு பன்னிரண்டு மணியளவில் வீட்டுக்குப் போவோம் என்றார். வரும் வழியில் ஒரு பாழடைந்த மண்டபம் உள்ளே வரும்படி அழைத்தார். வழமையான ஒத்திகைதானே என நினைத்தேன். ஆனால் நடந்ததோ முழுமையான அரங்கேற்றம். இதில் நீங்கள் சிந்திப்பதை உணர்ந்து பதிலளிக்கின்றேன். எனது ஒத்துழைப்பு, சம்மதம், அங்கீகாரம் இருந்ததா? இதைத்தானே சிந்திக்கிறீர்கள். உண்மையிலேயே சுருக்கமான பதில் எனக்கே புரியவில்லை. ஆனால் நடந்தது வல்லுறவல்ல. நான் வீட்டுக்கு வந்துவிட்டேன்.

படுக்கையில் இருந்து அதிகாலை எழுந்தேன். இமாலயத் தவறு செய்த ஏக்கம் என்னை ஆட்கொண்டது. அன்றில் இருந்து என்னில் வழமையான கலகலப்பு இல்லை. இதை அவதானித்த அம்மா என்ன பிள்ளை ஒரு மாதிரி இருக்கிறாய். ஏதாவது காய்ச்சல், தலையிடியோ எனத் துழாவினார். ஒன்றுமில்லையென மழுப்பினேன். மாதமொன்றோடியது. எனக்குரிய வழமையான இயற்கைக் கடன் காலாவதியாகிவிட்டது. நான் கர்ப்பமானேன். இதில் நான் கற்றுக்கொண்ட பாடம் ''மாற்றானை உறவென்று நம்பாதே'' பாவத்தின் சந்தர்ப்பமே இறைவனின் சோதனையாகும். இந்த இடத்தில் இளந் தலைமுறைக்கு அறிவுறுத்தல் ஒன்றை அறிவிக்க விரும்புகிறேன். அதாவது புனிதமான காதலென்பது சங்ககாலத்துடன் முடிவடைந்த ஒரு சுகபோக வாழ்வு. இன்று அதை யாரும் எதிர்பார்க்காதீர்கள். சங்க காலத்தில் மிருகங்களுக்குக்கூட அப்படியொரு காதல் இருந்ததாக சங்ககால இலக்கியத்தில் ஒரு பாடல் வருகிறது.

*''இன் நிழல் இன்மையால் வருந்திய*
*மடப்பிணைக்குத் தன் நிழலைக்*
*கொடுத்தளிக்கும் கலை'' [பாலைக்கலியில்]*

கடும் வெயிலில் வருந்திய பெண்மானை கீழே படுக்க வைத்து நிழலாக நின்றதாம் ஆண்மான். இதை இன்றைய ஒவ்வொரு ஆண் மகனும் உணர வேண்டும். அடுத்து இன்றைய இளம் பெண் பிள்ளைகள் பாடசாலைக்கும் தனியார் கல்லூரிக்கும் கைத்தொலைபேசியுடன் போகிறார்கள் என்றால் அவர்கள் தவறான பாதைக்குச் செல்வதற்கு நுழைவுச்சீட்டு எடுத்துக் கொண்டு போகிறார்கள் என்றுதான் அர்த்தம். இன்று யாழ்.குடாநாட்டில் ஐநூறுக்கும் அதிகமான இளம் பெண்கள் பாலியல் வழியில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் பெற்றோரின் கவனக்குறைவும் பிள்ளைகளின் புத்திக் குறைவுமே என்பதுதான் நான் கண்ட அனுபவ உண்மையாகும். எனவே தான் அன்பான இளம் தமிழ்ச் செல்வங்களே எனது பட்டறிவால் நானே உங்களுக்கு வழிகாட்டும் பாடப்புத்தகமாகவும் உரை கல்லாகவும் இருக்கிறேன். என்னையே பார்த்துத் திருந்துங்கள் என்று கூறிக் கொண்டு எனது சொந்தவிடயத்துக்கு வருகிறேன்.

காலை விடிகிறது எனக்கு விடிவு கிட்டுமா? அம்மாவுக்கு, எனக்குத் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையை அந்தக் கசப்பான உண்மையை ஆதியில் இருந்து அந்தம் வரை ஒன்றும் விடாமல் ஓதிவிட்டேன். சில வினாடிகள் அதிர்ந்து போனாள் என் தாய். அந்த நேரத்திலும் என்னைச் சிறிதும் கடிந்து கொள்ளவில்லை. ''ஏனம்மா என்ரை கற்பனை எல்லாம் போட்டுடைச்சுப் போட்டியே!'' என் தாய் இதயம் வெதும்பக் கண்ணீர் விடுவதைக் கவனித்தேன். மறுகணம் தன்னை ஒருவாறு ஆசுவாசப்படுத்திக் கொண்டு அயல் வீடான சுரேஸின் வீட்டுக்குப் போய்விட்டாள். அங்கே சுரேஸின் தாயார் அன்னம்மாவுக்கு என் வயிற்றில் இடி விழுந்த செய்தியைச் சொல்லியிருக்க வேணும். சிங்கத்தின் கர்ச்சனையாக அன்னம்மாவின் குரல் ஒலிக்கிறது. அன்னம்மா போட்ட சத்தத்தில் அடுத்த அடுத்த வீட்டுச் சனங்களும் கூடி விட்டார்கள். இஞ்சை பாருங்கோ இவள் என்ன சொல்கிறாள் என்று கேளுங்கோ. அதேசமயம் சுரேஸும் வந்துவிட்டான். வாடா இஞ்சை கேளடா இவளின்ர கதையை. ''[illegible] நான் பாவத்துக்கு இரங்கி உதவி செய்யப் போய் [illegible] வேண்டியதாக வந்துட்டுது'' எனப் பதிலளித்தான் சுரேஸ். ''ஓ.... நீ பாவம் பார்த்தாய் அவளவை சுகமாய் மாப்பிளை பிடிக்க பார்க்கிறாளவை. என்னடி மரத்தில ஏறினவன் தான் கொப்பால இறங்கினவனோ? ஏனடி சந்தியிலை சீலை விரிச்சுப்போட்டு இருங்கோவன். ஒரு நாளைக்கு எத்தனை நாய்கள் உங்க வந்து கடிபடுதுகள் என்று எங்களுக்குத் தெரியாதே'' என இல்லாத பொல்லாத வார்த்தைகளைக் கூறி வசை பாடினாள்.

அம்மா அழுதுகொண்டு மௌனராகத்தோடு வீட்டுக்கு வந்தாள். என்னைத் திட்டித் தீர்ப்பாள் என்று நினைத்தேன். ஆனால் மாறாக என்னை அணைத்துக் கொண்டு பயப்படாதே என்று கூறினாள். காலம் ஓடியது. நான் கன்னித்தாயானேன். என் குழந்தை சிசு பராமரிப்பு நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. விடயத்தைச் சுருக்கமாகக் கூறுகிறேன். மூன்று மாதம் பாடசாலைக்குச் செல்லாத நான் மீண்டும் தொடர்ந்து படித்து பல்கலைக்கழகம் சென்று பட்டதாரி ஆனேன். மறுவருடமே அரச நிறைவேற்று அதிகாரியாகப் பதவியேற்று எனது அம்மாவையும் கூட்டிக் கொண்டு பட்டணத்துக்கு வந்து தனியார் வீடொன்றில் வாடகைக்கு அமர்ந்து கொண்டு உத்தியோகத்துக்குப் போகத் தொடங்கினேன். இன்று என் காரியாலயத்துக்கு முன்னால் நீண்ட வரிசை. வலுவிழந்தோர், விதவைகள், பிள்ளைகளை இழந்தோருக்கான வாழ்வாதாரத்துக்கு நிவாரண காசோலை வழங்கப்படுகிறது. குறிப்பாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். கணவனையும் மகனையும் இழந்த அன்னம்மாவும் என்னிடமிருந்து நிவாரணத்துக்கான காசோலையை இரண்டு கைகளாலும் பெற்றுக் கொள்கிறாள்.

இராகவன், கதை முடிகிறது. பத்திரிகைக்கு அனுப்பத் தவறவேண்டாம். நன்றி.


இப்படிக்கு
அன்புள்ள குமுதா

கடிதம் இராகவன் கையில் கிடைத்த மறுநாளே தாயாருடன் குமுதாவின் வீட்டுக்கு வந்தவன் உண்மை வெற்றியளிக்கும் என்றான். தாய்மார் இருவரும் ஒருவருக்கொருவர் கரம்பற்றி சம்பந்திகளானார்கள். இராகவன் குமுதாவின் இடது கரத்தை இறுகப் பற்றிக் கொண்டான். குமுதாவின் கண்கள் ஆனந்தத்தில் பனித்தன. கைமாறிய குழந்தையை கையேற்போம் என்று உறுதி அளித்தான் இராகவன். குமுதா வாழ்வில் குதூகலம் பற்றிக் கொண்டது. ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 33

# மழை நீரை குடி தண்ணீராக்கிப் பயன்பெறுவோம்




மழை தந்த மிகத் தூய்மையரன குடிதண்ணீர் ஆனது நாம் பயன்படுத்தும் நிலக்கீழ் நீராக மாறுமுன் எவ்வளவு தூரம் மாசாக்கத்துக்கு உள்ளாக்கப்படு கின்றது என்பதை நாம் தெளிவாக இங்கே நோக்க வேண்டும்.

முக்கியமாக எமது மண்ணின் இயல்புக்கு அமையவும் நிலக்கீழ் பாறைகளின் தன்மைக்கு ஏற்பவும் அதிகளவு $Ca^{2+}$, $Mg^{2+}$ போன்ற உலோக அயன்களைக் கரைத்து வன்தன்மையைக் கொள்கின்றது. சாதாரணமாக குடிதண்ணீரில் காணப்படவேண்டிய வன்தன்மையின் அளவு 250 mg/l இலும் குறைவாக இருக்க வேண்டிய போதிலும் எம் குடாநாட்டின் சகல இடங்களிலும் கிடைக்கும் நீரின் வன்தன்மை அண்ணளவாக 350 mg/l ஆகவே உள்ளது. மழை நீரானது மண்ணின் ஊடாக செல்லமுன் பயன்படுத்தப்படுமாயின் அதில் வன்தன்மை சேர சந்தர்ப்பங்கள் இல்லை. இதன்மூலம் எம் மக்கள் அனுபவிக்கும் சிறுநீரகம் சம்பந்தமான நோய்களில் இருந்து அவர்கள் பாதுகாக்கப்படுவதுடன் எமது சமையல் பாத்திரங்கள், சலவை இயந்திரங்கள், குளியலறை கொதிநீர் கொள்கலன்கள், கல்சியம், காபனேற் படிவுகளில் இருந்தும் பாதுகாக்கப்பட முடியும்.

இதனைவிட மழை நீரானது எம் மண்ணின் மேற்பரப்பை கழுவிய வண்ணமே நிலத்தின் கீழ் போய் சேர்கின்றது. இதனால் எம்மால் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் பல அபாயகரமான இரசாயனப் பொருள்கள் எம் நிலநீரை தொட்டடையச் செய்கிறது. அத்துடன் விவசாயிகளால் பயன்படுத்தப்படும் மேலதிக நீரும் மேலதிக விவசாயப் பொருள்களை கழுவிய வண்ணம் மீண்டும் மண்ணின் ஊடாகச் சென்று நிலக்கீழ் நீரைச் சென்றடைகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே நிலக்கீழ் நீரில் விவசாய இரசாயனப் பொருள்களின் அளவு அதிகரித்துச் செல்கின்றது. அதாவது அனைவரும் கூறுவது போல் எம் குடிதண்ணீரில் நைத்திரேற்றின் அளவு அதிகமாகக் காணப்படுகின்றது. உலக சுகாதார ஸ்தாபனமானது (WHO) குடிதண்ணீரில் அதிகபட்சமாக அனுமதிக்கக் கூடிய நைத்திரேற்றின் அளவை 10 mg/l ஆக நிர்ணயித்துள்ளது.

ஆயினும் இது Methanoglobinemia (Blue Baby Syndrome) எனும் நோயை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட ஒரு வரையறையாகும். குடாநாட்டைப் பொறுத்தவரை நீலக்குழந்தைகள் பெரிதாக அடையாளம் காணப்படவில்லை. ஆயினும் உணவுக் கால்வாய் தொடர்பான புற்றுநோய் மிக அதிகளவில் காணப்படுகின்றது. நைத்திரேற் ஆனது புற்றுநோய் தூண்டியாக (Carcinogens) இருப்பதுடன் குடாநாட்டு நீரில் சராசரியாக 5mg/l இற்கு அதிகமாகக் காணப்படுகின்றது. நைத்திரேற் தொற்று குடிதண்ணீரில் அடையாளம் காணப்படும் இடத்து அங்கு அதனைவிட அபாயகரமான நச்சு இரசாயனப் பொருள்கள் (Pesti side, Weedi side, Fungi side, etc) காணப்பட சாத்தியங்கள் அதிகளவில் உள்ளன. இங்கும் நிலத்தடி நீரில் இந்தத் தொற்று வரக்காரணமாக இருப்பது மழைநீர் மண்ணுடன் தொடுகையுறுவதே.

இதனைவிட குடாநாட்டின் நிலக்கீழ் நீர் எதிர்கொள்ளும் அடுத்த முக்கிய பிரச்சினை மலசலகூடத்தினூடான தொற்றுகளாகும். எங்கும் முறையான மலசல கூட குழிக் கட்டமைப்புக்கள் இன்மையே இதற்கு முக்கியமான காரணமாக உள்ளது. புதிய குழிகள் அமைக்கப்படும் போது உள்ளூராட்சி சபைகள் குடாநாட்டின் நிலத்தன்மைக்கு ஏற்ற Septic tank எனும் மலக்குழிகளை கட்ட வேண்டும் என்ற நடைமுறையை இறுக்கமாகக் கடைப்பிடிக்கின்ற போதும் 80% இற்கும் அதிகமானவை பழைய மலக்குழிகளே. நிலநீரானது இதன் மூலம் அதிகளவான தொற்றலுக்கு உள்ளாகிய வண்ணமே உள்ளது.

அத்துடன் குடாநாட்டின் தீவுகள், தீவு சார்ந்த பகுதிகள், கரையோரப் பகுதிகள், கடல்நீர் ஏரிகளை அண்டிய பகுதிகள் எனக் குடாநாட்டின் பெரும் பகுதியானது கடல் நீரின் தொற்றுக்கு உள்ளாகி உவர் நிலக்கீழ் நீரைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இந்தப் பகுதி மக்கள் மிகக் குறுகிய நேரம் வழங்கப்படும் நீர் விநியோகத்தை நம்பி இருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இவ் வாறு வழங்கப் படும் குடிதண் ணீரும் போது மானதாகவும் தரம் வாய்ந்ததாகவும் இருப்பதில்லை.

எம்மால் விளக்கப்பட்டது போன்று எம் நிலக்கீழ் நீர்வளமானது தொடர்ச்சியான தொற்றலுக்கு உள்ளாகி வருகின்றமையும் அது எமது எதிர்காலத் தேவையை பூர்த்தி செய்யப் போதுமான்தாக இருக்கப் போவதில்லை என்பதையும் கருத்தில் கொண்டே அரசும் அது சார்ந்த அமைப்புகளும் பல பெரிய திட்டங்களை முன்னெடுத்துள்ளன.

சு.சரவணன்
இரசாயனவியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை.

இரணைமடுவிலிருந்தான நீர் விநியோகம், நன்னீர் ஏரித்திட்டம், மழை நீர் சேகரிப்பு போன்றனவாகும். முதற்கூறிய இரு திட்டங்களும் குடாநாட்டின் குடிதண்ணீர் பிரச்சினையை பெரியளவில் தீர்க்கக் கூடியவையே. நன்னீர் திட்டமானது மிக நீண்டகால அடிப்படையிலேயே நன்மை தரவல்ல ஒன்று. மேற்பரப்பு நீர் விநியோகத்திட்டம் முழுமையாக எம்மக்களுக்குக் கிடைக்க இன்னும் குறைந்தது 05 வருடங்களாவது எடுக்கும்.

குடாநாட்டு நீர் வளம் மாசடையும் வேகத்தை நோக்கும் இடத்து உடனடியாக ஒரு தீர்வு எம்மக்களுக்கு தேவைப்படுகின்றது. இதற்கு சிறந்த வழி நாமே எம் வீடுகளில் மழை நீரை சேமித்து அதிகபட்சம் குடிதண்ணீராகவாவது பயன்படுத்துவதே. அடுத்து வரும் வாரங்களில் எவ்வாறு மழை நீரை எம் வீடுகளில் சேகரிக்கலாம் என்பதையும் அதன் தூய்மை பற்றிய ஐயப்பாடுகளையும் தெளிவாகப் பார்ப்போம். (தொடரும்)

உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப் பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

# உங்கள் உடல் எடை குறைய சில ஆலோசனைகள்

இன்றைய சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளுள் உடல் எடைப்பிரச்சினை முக்கியமாக உள்ளது. உடல் பருமன் என்பது இப்போது ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஒரே இடத்தில் அமர்ந்து உடல் உழைப்பின்றி பணிபுரிதல், சமச்சீரற்ற உணவுப்பழக்கம், மனஅழுத்தம், ஒழுங்கற்ற மாதவிடாய், ஓமோன் குறைபாடு, மது, புகைப்பழக்கம் போன்றவை உடல்பருமனுக்கு காரணமாகலாம். உடல் பருமன் இதயநோய், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், மன அழுத்தம் போன்றவற்றுக்குக் காரணமாகிறது.

**உடல் எடை குறைய சாதாரண வழிமுறைகள்**

* வீடோ, அலுவலகமோ மாடியில் உள்ளதா, LIFT ஐ மறந்து விட்டு படிக்கட்டுக்களையே உபயோகியுங்கள்.
* அலுவலகம், கோயில் போன்றவை வீட்டுக்கு அருகில் இருந்தால் நடந்தே செல்லுங்கள்.
* நொறுக்குத் தீனிகள், Fast foods சாப்பிடுவதைத் தவிருங்கள். நடந்து கொண்டும் T.V. பார்த்துக் கொண்டும் சாப்பிடுவதைத் தவிருங்கள். காரணம் எங்களை அறியாமல் அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டுவிடுவீர்கள்.
* பொறுமையாக உட்கார்ந்து மென்று சாப்பிடுங்கள். நொறுங்கத் தின்றால் நூறு வயசு என்று சொல்வார்கள்.
* காலை உணவை போதியளவு, சத்துள்ளதாக எடுங்கள். நாள் முழுக்க சுறுசுறுப்பாக இயங்குவதற்கு இது அவசியம். இரவு உணவை இயன்றளவு அரைவயிறு உணவு, கால்வயிறு தண்ணீர், கால் வயிறு காற்று என்று விட்டு விடுங்கள். உடல் உழைப்பு எதுவும் இல்லாததால் இயன்றளவு குறையுங்கள்.
* தினமும் நிறைய நீர் அருந்துங்கள் கோடைகாலங்களில், உடற்பயிற்சி நேரங்களில் கூடியளவு நீர் அருந்துங்கள்.
* காய்கறிகள், பழங்கள், நிறைய அடிக்கடி உணவில் சேருங்கள்.
* புரதச்சத்து நிறைந்த சிறிய மீன் வகைகளை உணவில் சேருங்கள்.
* எண்ணெயில் பொரித்த உணவுகளைத் தவிருங்கள். ஆவியில் வேகவைத்த உணவுகளுக்கு முக்கியம் கொடுங்கள்.
* நார்ச்சத்து நிறைந்த பழங்கள், இலைக் கறிவகைகள் கூடுதலாக உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
* உப்பு அதிகமாகச் சேர்ப்பதைத் தவிருங்கள்.
* மதுபானம், மென்பானம் இரண்டையும் தவிருங்கள்.

**மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி உங்கள் உடல் எடையைக் குறைத்துக் கொள்ளுங்கள்.**

செ.தவச்செல்வம்,
தாதிய உத்தியோகத்தர், நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# மழை நீரை குடிதண்ணீராகப் பாவிப்பதால் ஏற்படும் நன்மைகள்

* தொற்றுநோய்களான வாந்திபேதி, வயிற்றுளைவு, நெருப்புக் காய்ச்சல் போன்றவற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.
* பல சிறுநீரக நோய்களான சிறுநீரகப் பழுது, சிறுநீரக் கற்கள் தோன்றுதல், சிறுநீர் அடைப்பு போன்றவற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.
* புற்றுநோய் தோன்றும் வீதத்தைப் பெருமளவு குறைத்துக் கொள்ளலாம்.
* தீய இரசாயனப் பதார்த்தங்கள் உடலில் சேர்ந்து உடல் நோய்வாய்ப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.
* நீரிலுள்ள மேலதிக கல்சியம் இரத்தக் குழாய்களில் படிவதால் மாரடைப்பு, பாரிசவாதம் என்பன ஏற்படும் வீதம் அதிகமாகும். நீரைக் கொதிக்க வைப்பதன் மூலம் அதிலுள்ள கல்சியத்தைப் பூரணமாக அகற்ற முடியாது. மழைநீரில் கல்சியம் இல்லை. எனவே மழைநீரைப் பாவிப்பதன் மூலம் மேலதிக கல்சியத்தை உட்கொள்வதால் ஏற்படும் ஆபத்துகளிலிருந்து தப்பிக்கொள்ளலாம்.
* நிலத்தடி நீர் பாதுகாக்கப்படும்.
* நன்னீர் உப்பாவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.
* தூயநீரை அருந்துகின்றோம் என்ற மனநிறைவு ஏற்படும்.

எனவே வரவிருக்கும் மழைக்காலத்தில் மழை நீரைச் சேகரிப்பதற்கு எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வோம்.

சி.சிவஸ்கந்தஸ்ரீ,
வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகர் சாமியின் குதிரை



விமர்சனம்

**தேனி** மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்துக்கு அழகர்தான் பொது தெய்வம். அந்த அழகருக்குத் திருவிழா எடுப்பது மூன்றாண்டுகளாக ஏதோவொரு காரணத்தால் தடைப்பட , இந்த ஆண்டு எப்படியும் நடத்திவிட வேண்டும் என ஊரார் முடிவெடுக்கிறார்கள். அழகர் சாமியின் மரக் குதிரை காணாமல் போகிறது. காண்மாமல்போன குதிரை கிடைக்காவிடில் இந்த ஊருக்கு கெடுதல் நிகழும் என நம்பும் கிராமத்தவர், அது கிடைக்காமல் திருவிழா நடத்த முடியாமல் திகைத்தனர். வாக்குக் கேட்டபோது 3 நாள்களுள் குதிரைவரும் என்கிறார் பூசாரி. அந்த நேரம் அந்த ஊருக்கு வந்து சேர்கிறது அழகிய வெள்ளை நிறக்குதிரை. உயிருடன் வந்த குதிரை அழகர் சாமியின் குதிரைதான் என சந்தோஷப்படும் ஊரார் திருவிழாவை முன்னெடுத்து நடத்துகிறார்கள்.

குதிரைக்குச் சொந்தக்காரனோ அழகர்சாமி. அவனுக்கு நிச்சயித்த பெண்ணுடன் திருமணம் நடக்க அவன் குதிரையுடன் ஊர் செல்ல வேண்டும் என்ற கட்டாயம். ஆனால் திருவிழா முடியாமல் குதிரையைத் தர மறுக்கும் ஊர் கூட்டம். இருதரப்புக்கும் இடையில் தீர்வு என்ன என்பதே 'கிளைமாக்ஸ்' என்னவாகிறது என்பதே பாஸ்கர் சக்தி எழுதிய சிறுகதைக்கு சுசீந்திரன் திரைக்கதை எழுதி இயக்கி வெளிவந்திருக்கிறது அழகர் சாமியின் குதிரை.

மலையாளத்தில், வங்காளத்தில், ஈரானில் சாத்தியப்படும் சினிமாக்கள் நம் தமிழில் சாத்தியக்குறைவு எனவும் அது போன்ற முயற்சிகள் இங்கே வெற்றிபெறாது, காரணம் வெகுஜனங்களின் பார்வையில் ரசனையும் அவற்றை விரும்புவதே இல்லை எனவும் இந்த பழைய சொல்லாடல்களை எல்லாமும் திரும்பிப் பெற்றுக் கொள்ள வைத்திருக்கும் கதை சொல்லல் அழகர் சாமியின் குதிரை. மேலோட்டமான நகைச்சுவை, எளிமையான கதை சொல்லல், திருப்பங்களற்ற கதைப்போக்கு, நட்சத்திர பலமின்மை என இடர்களை தமது பலமாக மாற்றி இருக்கிறார் இயக்குநர் சுசீந்திரன். என்ன நடக்குமென்பது கதை படித்தவர்களைப் போலவே படிக்காமல் படமாகப் பார்க்க வந்தவர்களுக்கும் சமமாக புரியக்கூடிய அளவுக்கு வெகு நேரான கதை. இதைப் பார்க்க வைப்பது கதை சொன்ன விதமும் உறுத்தாத நடிகர்களின் பங்களிப்பும்தான். வெளிநாட்டு சி.டிக்களைத் தேடுவதற்கு மாற்றாக தமிழ் இலக்கியத்தின் முகடுகளில் ஒளிந்திருக்கும் சிறுகதைகளை, நாவல்களை நாடினால் போதும் என்பதும் இந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது நமக்குத் தோன்றுகின்றது.

இளையராஜாவின் இசை தனியாவர்த்தனம். உலகக் கோப்பையை வென்ற டோனி அதை சச்சினுக்கு கொடுத்தாற்போல் இந்தக் குதிரையை இளைய ராஜாவுக்குக் கொடுத்து இருக்கிறார் இயக்குநர். அவரும் பின்னணி இசையில் தனி அத்தியாயத்தை எழுதி இருக்கிறார். மூடு பனி, மௌனராகம், ஜானி, மெட்டி பாடல்களுக்கு அடுத்து அழகர்சாமியின் குதிரை படத்தின் இசையைச் சொல்லலாம். அவரது நத்திங் பட் விண்ட் ஆல்பத்தில் சில குறிப்புகளில் இளையராஜா காட்டிய அதே எள்ளலிசை இந்தப் படத்தின் இடைக் காட்சிகளில் வருவதும் குறிப்பிடத்தகுந்தது. பாடல்கள் இளையராஜாவின் பாடல்களாகவே இதிலும் உள்ளன. அவை இயல்போடு ஒத்திசைவதும் ராஜாவின் பங்களிப்பைப் பறை சாற்றுகின்றன. பாஸ்கர் சக்தியின் வசனம், கதையின் நகர்வுக்கேற்றாற்போல் வளர்வதும் சுருங்க வேண்டிய இடங்களில் சுருங்கிக் கொள்வதுமாக செதுக்கினாற் போலிருக்கிறது. கலை இயக்குநர் சந்தானம் நேர்த்தி.

தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவில் மிகையற்ற குளுமையான அனுபவத்தைக் களிப்பாக்கித் தருவதென்பது ஒரு கலை. அது எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. இந்தப் படத்தில் ஆரம்பக் காட்சி தொடங்கி இறுதிவரை இயல்பாக ஏதோ நாமே நம் கண்களால் தொடர்வது போன்றதோர் உணர்வை ஏற்படுத்தி இருக்கிறார். நினைவில் அழியாத புகைப்படங்களாக இந்தப் படத்தின் காட்சிகள் உள்ளன. இந்தப் படத்தின் குதிரை நன்றாக நடித்திருக்கிறது. மூட நம்பிக்கைகளை நகையாடுகிறார் இயக்குநர். பகுத்தறிவுச் சட்டத்தை இணைக்கோடாகக் காட்டிக் கொண்டு வரும் இயக்குநர் அந்த வட்டத்தை பொய்மையும் வாய்மையிடத்து புரை தீர்த்த நன்மை பயக்கும் தருணமொன்றில் பக்த வேசம் போட வைப்பது ஏற்றுக்கொள்ள முடிகிறது. கல்வெட்டுக் காலங்களைக் கடக்கும் படமாகவும் அழகர் சாமியின் குதிரை வென்றெடுக்கும் மனதை.

படத்தின் கதை நிகழும் காலம் 1982 என்பது படத்தின் பின்புலத்தில் தொடர்ந்து தெரிகிறது. ஆனாலும், எல்லோருக்கும் புரியுமா என்றால் புரிவது கடினமே. எம்.ஜி.ஆர். அவர் விளம்பரம், ஏழுரொட்டி, மூன்று முட்டைப் பொரியல் 19 ரூபா விலை எனப் பழைய காலம் தெரிகிறது. அப்புக்குட்டி, சரண்யா மோகனில் தொடங்கி அருள்தாஸ், சூரி, கிருஷ்ண மூர்த்தி, மைனர் - செல்வசேகர், பன்னீர்ச் செல்வம், பிரபாகரன், கீர்த்தி, அழகன் தமிழ்மணி, தவசி எனப் பலர் நடித்திருக்கிறார்கள். மிகச் சிறப்பான ஒருபடம். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள எத்தனிக்கும் திரைப்பட இயக்குநர்களை நாம் குறைசொல்ல முடியாது. என்றாலும் கூட முதல் படத்தில் தன்னை நிரூபித்து இரண்டாவதாக ஒரு சூப்பர் ஹிட் படத்தை இளைய நடிகர் ஒருவர் கூட்டணியில் கொடுத்துவிட்டு அதற்கடுத்த படத்தை ஒருமாபெரும் நட்சத்திரப் பட்டியலுடன் செய்திருக்க வேண்டிய ஓர் இ[illegible] வண்ணம் படம் எடுத்திருக்கிறார் என்பது வெற்றி.

- குமார்.

# மனச்சுமையை இறக்கி வையுங்கள்

எம்முடைய எண்ணங்களின் அடிப்படையிலேயே மன அழுத்தத்தின் அளவு மாறுபடுகிறது. இதுவே உடலுக்கும் மனதுக்கும் பல்வேறு நன்மை, தீமைகளை ஏற்படுத்துகிறது. மனதில் இறுக்கத்தையும், துன்பத்தையும் ஏற்படுத்துகிறது.

**''நல்லதை நினைப்போம், நல்லதைப் பேசுவோம்**
**நல்லது தானாக நடக்கும்''**

எம்முடைய உணர்வுகளை (Sensation) மன எழுச்சிகளை (Emotions) எவ்வாறு கையாளுகிறோம் அல்லது வெளிப்படுத்துகிறோம் என்பதும் முக்கியம். உணர்வுகள் என்பது காட்சியை கருத்தைப் புரிய வைத்தல், புரிந்துகொள்ளுதல் என்ற அடிப்படையில் அமைகிறது. மன எழுச்சி என்பது யாதெனில் கோபம், அச்சம், கூச்சம், பொறாமை, அன்பு, மகிழ்ச்சி இவற்றைச் சார்ந்தது. மனிதனுடைய வெற்றிகளுக்கு மன எழுச்சி அடிப்படையாக இருக்கிறது.

வாழ்வில் பலவிதமான சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. அதைச் சமாளிப்பதும் வெற்றி கொள்வதும் வீரச்செயல்கள். தோல்வி என்பது வேதனைகளையும், வெட்கத்தையும் தரக்கூடியதுதான். ஆனால் தோல்வியின் மூலம் படிப்பினையையும், வழிகாட்டுதலையும் நிச்சய மாகப் பெறமுடியும். தோல்வியின் மூலம் பெறப்பட்ட அனுபவமே பல வித நுட்பங்களை அள்ளித்தரும். தோல்வியைச் சந்திப்பவர்கள் மட்டுமே வெற்றிபெற முடியும். ஏனென்றால் முயற்சி செய்பவர்கள் மட்டுமே வெற்றியடைந்திருக்கின்றனர்.

தோல்விக்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். சரியானபடி திட்டமிடுதல் மிகவும் முக்கியம். திட்டமிடுதல் காலத்தின் அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டும். ஒன்று குறுகிய காலத்திட்டம், இரண்டு நீண்ட காலத்திட்டம், திட்டமிடுதல குறிக்கோளை சரியானபடி அடைவதற்காகத் தீட்டப்பட வேண்டும். தகுதிக்கும், திறமைக்கும் மீறி ஆசைகளையும், குறிக்கோள்களையும் வைக்கும்போது தேல்விதான் கிட்டும். கல்வி, திறமைகள், அனுபவம், வயது, பொருளாதார வசதி, உடல்நலன், சுற்றுப் புறச் சூழல்கள், மக்களின் தேவை இவற்றின் அடிப்படையில் நம் குறிக் கோள்கள் அமைக்கப்படும்போது அது வெற்றிப் பாதையாகவே இருக்கும்.

**''கொட்டும் மழைக்காலம் உப்பு விற்கப்போனேன்**
**காற்றடிக்கும் நேரம் மாவு விற்கப்போனேன்...''**

என்று புலம்பும்படி நம் திட்டங்கள் இருக்கக்கூடாது. பயம், அச்சம், கவலை போன்ற மன எழுச்சிகள் தோல்வியின் போது ஏற்படுவது இயல்பு. காரணம் அறிந்தபின் களையும் முயற்சியில் இறங்கிய பின் தானாகவே நம்பிக்கையும், புத்துணர்ச்சியும் எம்மை ஆட்கொள்ளும். சிறு தோல்விக்கும் துவண்டு போனவர்கள் உண்டு. காரணம் ஒன்றுமே இல்லாதிருந்தும் தற்கொலைக்கு முயன்றவர்களும் உண்டு.நாம் நம்பிக்கையோடு செயற்படும் போதுதான் மற்றவர்களுக்கும் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ முடியும். தோல்வியின் போது எமது முயற்சி மட்டுமே தோற்றுவிடுகிறது. நிச்சயமாக நாம் தோற்பதேயில்லை.

மனம் கனமா இருக்கிறது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. சோம்பல், களைப்பு, மனச்சோர்வு மாறிமாறி வருகிறது. உணர்வற்ற நிலையில் நாம் இருக்கலாமா? மன அழுத்தத்தின் போது மனதில் துன்பம், கவலை, எரிச்சல், வெறுமை உணர்வு உண்டாவதாக உளவியல் ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. மனித உணர்வுகள் உன்னதமானவை. ''புரிதல், புரிய வைத்தல்'' இவ்விரண்டையும் பேச்சின் மூலமாகவும், உடல் அசைவுகளின் மூலமாகவும் நாம் வெளிப்படுத்த முடியும்.

குடும்பத்தினர், உறவினர், உடன் பணிபுரிவோர், அருகில் வசிப்போர் இவர்களுடன் சமூகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும்போது உணர்வுகளை எவ்வாறு புரிந்து கொள்கிறோம். புரிய வைக்கிறோம் என்பதன் மூலமே அன்பும், மகிழ்ச்சியும், வெறுப்பும், கோபமும் மாறிமாறி எம்மை ஆட்கொள்ளும். எதையும் சரியாகப் புரிந்துகொள்ளும்போது அங்கு அன்பும், அர வணைப்பும், மகிழ்ச்சியும், கூட்டுறவும் பெருகும். உணர்தல் என்பது உணர்வுகளின் அடிப்படையில் செயல்படுகிறது.

**''உரிமையை இழந்தோம் உடமையை இழந்தோம்**
**உணர்வை இழக்கலாமா...?''**

என்ற புரட்சிகரமான வரியில் உணர்வின் தன்மையை நன்றாக உணர முடியும்.

**நி.தர்ஷனோதயன்**
வைத்திய அதிகாரி,
மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை, மன்னார்.

# உலகில் அசிங்கமான கட்டடம் இதுதானாம்!

உலகில் அழகான கட்டடங்கள் பல உள்ளன. அவற்றில் அசிங்கமான கட்டடம் எது என்று கேட்டால் வட கொரியாவில் உள்ள ரியூக்யாங்க் விடுதியைக் காட்டுகின்றன அந்த ஊர்ப் பத்திரிகைகள். வடகொரியாயிவின் பியாங்யாங் நகரில் 105 மாடிகளை கொண்ட ரியூக்யாங்க் விடுதி அமைந்துள்ளது . ஏறத்தாழ 20 வருடங்களாக கட்டி முடிக்கப்படாமல் நிற்கும் இந்தக் கட்டடம்தான் உலகின் அசிங்கமான கட்டடம் எனக் கருதப்படுகிறது. 1987ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த விடுதியின் கட்டுமானப் பணிகள் கடந்த 1992 ஆம் ஆண்டு திடீரென நிறுத்தப்பட்டன.



இதில் கட்டப்பட்டுள்ள 3 ஆயிரம் அறைகள் ஏதோ தேவதை கதைகளில் வரும் ஆச்சரிய குகைகள்போல காட்சியளிக்கின்றன. பல வருடங்களாகப் பூசப்படாமல் சுவர்கள் இற்றுப்போய் பார்க்கவே பயமுறுத்தும் வகையில் தற்போது இது காட்சியளிக்கின்றது. இந்த ராட்சத கட்டடத்தை இரவில் பார்க்கத்தான் துணிச்சல் அதிகம் வேண்டும். இந்தக் கட்டடம் எப்போதாவது பூர்த்தியாகுமா என்றால் அதற்கு வாய்ப்பே இல்லை என்று தான் கூறப்படுகிறது. வட கொரியாவில் நிலவும் பொருளாதார மந்த நிலையும் சுற்றுலாப் பயணிகள் மருந்துக்கு கூட எட்டிப் பார்க்க வாய்ப்பில்லாத பகுதி பியாங்யாங் என்பதாலும் மாற்றம் வர வாய்ப்பே இல்லை என்கிறார்கள். முதலீடாகப் போடப்பட்ட கோடிக்கணக்கான பணம் வெறும் வெற்றுக் கட்டடமாக நிற்பது மிகக் கொடுமையான விடயம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் மன உணர்வுகள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்...!



-சோபியா,
மானிப்பாய்.

பெண்கள் வாழ்நாளில் எத்தனையோ அவதாரங்களை எடுக்கின்றனர். இந்த ஒவ்வொரு அவதாரத்திலும் அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளும், சவால்களும் எண்ணில் அடங்காதவைகளாகவே இருக் கின்றன.

இதன்போது அவர்களின் மன உணர்வு கள் எப்படி யெல்லாம் மாற்றம் பெறுகின்றன என்பதை நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

மகளாக, தாயாக, பாட்டியாக என ஒவ் வொரு கட்டத்தி லும் அவளுடைய உணர் வுகள் எந்தளவுக்குப் புரிந்து கொள்ளப் படுகின்றன என்று எம்மால் கூறமுடியாது.

இதனை அந்தந்த நிலையில் இருக்கும் பெண்களினால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

ஏனெனில் அவர்கள் அனுபவித்தவர்கள். அவற்றை வெளிப்படுத்தும் தகுதியும் அவர் களுக்குத்தான் உள்ளது.

இவ்வாறான பெண்களின் மன உணர் வுகள் எந்தளவுக்கு மதிக்கப்படுகின்றன. பழைய சம்பிரதாய முறைகளில் ஊறிப்போன வர்களுக்குப் பெண்களின் மனதைப் புரிந்து கொள்ள வாய்ப்புக் கிடையாது.


இத்தகையவர்கள் பெண்கள் தொடர் பான கட்டுக் கதைகள் பரப்புவதை விடுத்து, அவர்களின் மனதைப் புரிந்துகொண்டு அவர்களின் தேவைகளை நிறைவேற்ற சுதந் திரமாக விடும்போது அவர்கள் மனம் குதூக லிப்பார்கள். புதிய சிந்தனை ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்வார்கள்.

சமுதாயத்தில் முக்கியமான பொறுப்புக்களில் இருக்கும் பெண்கள், தமது பிரதிபலிப்பை எந்தளவுக்கு செயற்படுத்த முடியுமோ அந்தளவுக்குத் துணிவுடன் செயற்படுத்துவார்கள்.

எனவே தமது திறன்களை வெளிப்படுத்த முடியரமல் ஒதுங்கி வாழும் பெண்கள் முன்னிலைப் படுத்தப்பட வேண்டும்.

இதன்மூலம் துணிவுடன் கூடிய சாதனைப் பெண்கள் பலரை எமது சமுதாயத்திலும் காணமுடியும்.

# பெண்ணாய்ப் பிறந்துவிட்டால்...



பெண் ஒருத்தி ஊழ்வசத்தால்
ஊனம் பெற்று விட்டால்
வேண்டாத பெண் என்று
வேதனைப்படுத்திடுவர்
பெண் அதிகம் படித்துவிட்டால்
திமிரேறி விட்டதென்பர்
படிக்காமல் இருந்து விட்டால்
பட்டிக்காடு இவள் என்பர்
துடுக்காகப் பெண் கொஞ்சம்
துணிவோடு கதைத்து விட்டால்
வாயாடிப் பெண் என்ற பெயர்
வந்திடுமே அவளுக்கு
கல்யாணம் நடந்தேற
காலம் சென்று விட்டால்
மாங்கல்யம் அற்றவள்
என்றிடுவர் ஊர்மக்கள்
கணவன் ஒருவனைக்
காதலித்துக் கைபிடித்தால்
கட்டாக்காலி என்று
கண்கெட்டுக் கதைத்திடுவர்
மணமாலை சூட்டியவன்
மரணத்தைத் தழுவி விட்டால்
பாவைதான் பாவி என்று
விதவை ஆக்கிடுவர்
பெண்ணொருத்தி பலநாளாய்
தாய்மை வரம் பெறாவிட்டால்
மலடி என்ற பெயரிட்டு
மனதார ஒதுக்கிடுவர்
பெண்ணாய் பிறந்தால் பெறும்
பட்டங்கள் பலகோடி...
ஏனிந்த நிலை என்று
இன்னும் அவள் அறியவில்லை...
பேதமைகள் மறைந்தாலும்
புதுமைகள் பிறந்தாலும்
பெண்ணிவளின் இந்த நிலை
என்றுதான் மாறிடுமோ?...

-சி.பினுஷா,
மிருசுவில்.

# பெண்ணே! உனக்காக...



-வதனா,
கரவெட்டி.

பெண் என்பவள் மான், அணில், சிட்டுக் குருவி போன்ற விழிப்பான ஜீவன்தான். எந்தநேரமும் தாம் பிடிக் கப்பட்டு விடுவோம் என்று இந்த உயிரினங்கள் தவித்தபடி நிற்பது போன்றதுதான் பெண்ணின் மனதும். தான் உணர்ச்சிவசப்பட்டுக் கவிழ்ந்து விடக்கூடாது, உணர்ச்சிவசப்பட்டுப் புத்தியை இழப்பதன்மூலம் தன் கௌர வத்தை இழந்துவிட்டால் தன் நிலை மரணத்தைவிட மோசமானது என்று அவள் தொடர்ந்து சிந்திக்கி றாள்.

சில பெண்கள் சிலவிதமாய் வளர்ந்து விடுகின்றனர். அவர்களின் வளர்ப் பில் ஒரு பலமான உலுக்கல் ஏற் பட்டு விடுகின்றது. அது அவர் களை மிக மோசமான மனோநிலைக்கு அழைத்துப் போகின்றது.

ஆண்களால் வஞ்சிக்கப்பட்டுத் தானே தன் வாழ்க்கையை நகர்த்தி யாக வேண்டிய நிலையில் உள்ள பெண்கள், சரியான அரவணைப்பு இல்லாத பெண்கள் வெகு எளிதாய் வார்த்தைகளை விஷம் போலக் கக்கு வார்கள். தன்னிலும் எளியோர் கிடைக் கும்போது மிக மோசமாகத் துன்பப் படுத்துவார்கள். இதற்குக் காரணம் அவர்களது துன் பப்பட்ட மனங்களே. இது அவர்களை நோயாளிகளாக மாற் றியும் விடுகிறது. இந்தநிலை பெண் களுக்கு ஏற்படக்கூடாது.

பெண் என்பவள் உறவு வேலி யால் சூழப்பட்ட ஒரு மரக்கன்று போன்றவள். வேலியைப் பிரிக்காது மரக்கன்றைப் பேணவேண்டும். வேலி யைப் பிரித்தால் மரக்கன்று அடிபட் டுப்போய்விடும்.

அவ்வாறே ஒவ்வொருத் தரும் பெண்களின் மனங்களை நோகடிக் காது வாழப் பழகவேண்டும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# பெண்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கு ஆண்களே காரணம்



பெண்கள் தங்க ளுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை உரிய நேரத்தில் வெளிப்ப டுத்தத் தயங்கிவிடு கின்றனர். அவர்களது இந்த மன நிலைக்குக் காரணம், பெண்களை வெளிப்படையாகப் பேசுவதற்கு அனும திக் காத ஆணாதிக்க சமூகம் தான் என்று கூறுவது தவறாகாது.

திருமணம், குடும்ப உறவு, அரசியல், இலக்கியம், நட்பு ஆகிய விடயங்களில் பெண்கள் தங்களின் சொந்தக் கருத்துக்களை, விருப்பு வெறுப்புக்களை சொல்வதைவிட அந்தச் சூழலுக்கு என்ன கூறினால் தன்னை மற்றவர்கள் தவறாகக் கருதமாட்டார்கள் என்று கருதுகிறார்களோ அவற்றையே கூறப்பழகி விட்டார்கள். அல்லது எந்தவிடயம் பிரச்சினைகளற்றதோ அதையே கூறுவது என ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் தமது கருத்துக்களை வெளிப்படுத்து கின்றனர். இப்படியாகப் பெண்களை வெளிப்படையாகப்பேச அனு மதிக்க மறுப்பது ஏற்கனவே அவர்கள் ஆணாதிக்கத்தால் அடக்கப் பட்டதன் விளைவே. அதன்பின் பெண்களைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை என்று புலம்புவது ஆணாதிக்க கோமாளித் தனங் களில் ஒன்று. சில வேளைகளில் பெண்கள் தங்களை எதிர்த்து, மறுத் துப் பேசுவதை ஆண்கள் விரும்புகிறார்கள். அந்த எதிர்ப்பும் மறுப் பும் சாதகமாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே ஆண்கள் அதனை விரும்புகின்றனர். ஆண்களே பெண்களை மறுமணம் செய்து கொள்ளச் சொன்னாலும் மறைமுகமாகப் பெண்கள் அதை மறுக்க வேண்டும் என்றே விரும்புகின்றார்கள். மாறாகப் பெண் உங்கள் விருப்பப்படியே மறுமணம் செய்து கொள்கிறேன் என்பதைப் பணி வோடும் அழகோடும் கூறினால் கூட நோய் வாய்ப்பட்டிருக்கும் கணவன் கூட அந்த நிமிடமே அதிர்ச்சியில் இறந்துவிடுவான்.

கணவன் தன் திருமணத்துக்கு முன்னைய அனுபவங்களை சொல் வதைக்கேட்டு மனைவியும் தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டால் அன்பான கணவனும் ஆயுதம் தாங்கிய கணவ னாக மாறிவிடுவான். பெண்கள் வெளிப்படையாகப் பேசுவதை ஆண்கள் விரும்புவதில்லை என்பதை விடவும் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அவர்களுக்கு இல்லை என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Home Builders

உங்கள் விருப்பத்திற் கேற்ப வாஸ்த்து முறைப்படி
தரமான மனைகளை அமைப்பதற்கு
இப்போதே எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்



நீங்கள் தொடர்பு கொள்ளவிரும்பினால்:
பியங்கனி : 0779253305
மார்க் : 0789595380

**இலவச சலுகைகள்:**

- உங்கள் கனவு இல்லங்களின் மாதிரி வடிவங்களை இலவசமாக பெற்றுத்தருவோம்
- உங்கள் கனவு இல்லத்திற்கான அனைத்து துறைகளின் அனுமதிகளை பெற்றுத்தருவோம்.

உங்கள் இடத்திற்கே வந்து அவசியமான விபரங்களைப் பெற்றுத்தருவோம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாங்குளம் மகா
வித்தியாலயத்தின் பிரதி
அதிபராகக் கடமையாற்றிய
கந்தசாமி சக்திதரன்
அவர்கள் துணுக்காய் கல்வி
வலய உதவிக் கல்விப் பணிப்
பாளராக பதவியுயர்வு பெற்றுள்
ளார். அவர் தொடர்ந்தும் மேன்
மேலும் பதவியுயர்வினைப் பெற
வேண்டும் என்று இறைவனை
வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தின்
பல்கலைக்கழக மாணவர்கள்.

## Spoken English & Grammar

(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்)
By: Mr.B.Ruban (A/L Eng.Teacher &BBA)
More Details: 0779785749

## காணி விற்பனைக்கு

சிவன் புதுவீதி, நல்லூரில் 07
பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0775743885

## SPOKEN ENGLISH

வெளிநாட்டு UNIVERSITY இல் பணிபுரிந்து இளைப்பாறிய ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து மாணவர்களுக்கும், வளர்ந்தவர்களுக்கும் ஆங்கிலம் எளிதில் பேச இலக்கணத்துடன் கற்றுக்கொடுக்கப்படும்.
TEL: 0779229573

## வீடு வாடகைக்கு

யாழ்/ கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 4 படுக்கை அறைகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீட்டின் மாடிப்பகுதி வாடகைக்கு உண்டு. வாகனத்தரிப்பிட வசதி கொண்டது. தனியார், அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. அத்துடன் 3 அறைகளுடன் கூடிய வீடும் வாடகைக்கு உண்டு.


தொடர்பு - 021 321 9743




## அமெரிக்க வீஸா லொத்தர்

(இன்ரநெற்/ ஆங்கிலம் தெரியாதவர்களுக் கான சேவை) எம் மூலம் விண்ணப்பிக்க ரூ.15/- முத்திரை ஒன்று, பெயர், விலாசம், மணமான வரா இல்லையா விவரத்துடன் எழுதவும்.
**BBS Netting,**
**3/14, Pinwatta Road, Dehiwala.**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 12.06.1987
உதிர்வு: 30.08.2008

திதி: அமாவாசை

### அமரர் கோபிநாத் யுகவர்ணன்


(பழைய மாணவன் -
சென்.ஜோன்ஸ் கல்லூரி A/L 2006)

தலை மகனாய் பிறந்தாய்
பண்பின் திருவுருவாய்
பாசத்தின் ஊற்றாய்
அறிவின் ஒளியாய்
அனைவரும் அறிவு பெற
ஆர்வமாய் இருந்தாய்
மூன்றாண்டுகள் மறைந்தாலும்
அகல்விளக்காய் உள்ளாய்
எம் நினைவுகளில்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பி,
தங்கை, உறவுகள்

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 30 ★ 12 ★ 1942 |  | 29 ★ 07 ★ 2011 |

### அமரர் பெரியதம்பி தங்கநாதன்

பெயரிலும் தங்கம்
குணத்திலும் தங்கம்
செய்கையிலும் தங்கம்
எங்கள் எல்லோரின் தங்கமே
எங்கு சென்றாய் எமை விட்டு
தங்கத்திலும் இறைவனுக்கும்
ஆசை வந்ததோ?
அதுதான் உன்னை அழைத்தானோ?

கடந்த 29.07.2011 வெள்ளிக்கிழமை சிவபத மடைந்த எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கும் சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் பகல் 11 மணிக்கும் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

செட்டித் தெரு,
பருத்தித்துறை.
திருமதி ஈஸ்வரி தங்கநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் சந்தியிலிருந்து 100 m தூரத்தில் இணுவில் வீதியில் 2 பரப்பு 10.5 குளி காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0777299994, 0778446055

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அத்தியடி, அம்பலவாணர் வீதியில் அமைந்துள்ள 2,4 பரப்புக் காணிகள் பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779239334

## ஆனைக்கோட்டை வீதி அகலிப்பு

நவாலி, ஒக.28

வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாடு 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன் ஆனைக்கோட்டை சம்பந்தப்பிள்ளையார் வீதி அகலிப்பு செய்யப்பட்டு கருங்கற்கள் பரவும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-100)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த U.K.பிரஜா உரிமை உடைய 8ஆம் இடத்தில் சூரி, செவ்வாய் ஒன்றாக அமைந்த 60 கிரகபாவம் உடைய குறுகிய காலத்தில் விவாகரத்து பெற்ற 36 வயதுடைய நற்குணமுள்ள மணமகனுக்கு பெற்றோர் நற்குணமுள்ள படித்த அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றார்கள். முழு விவரங்களுடனும் படத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

e-mail jenagan99@yahoo.com


# SPONSORSHIP

Tourist-Visit-Students VISAS 65000/= only

UK-USA-CANADA-AUSTRALIA-EUROPE

HOLIDAY VISA CENTER

Wellawatte (opposite HNB Bank)

Tel: 0114 594 104 - 0772 953 963


## மணமகள் தேவை

அமெரிக்கா U.S.A குடியுரிமையுடைய யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1979 உத்திரட்டாதி முதலாம் கால்.65 ¼ கிரகபாவம் 5'9" உயரம் CIMA Qualified முகாமையாளர், கணக்காளராக பணிபுரிபவருக்கு படித்த அழகான மணமகள் தேவை. விபரங்களுக்கு.

சிவலயா சர்வதேச திருமணநிலையம்,
கெனடி லேன், ராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P. 0750741451,0215681126


Study in GEORGIA (Europe)

குறைந்த தகைமைகள் G.C.E. (O/L)

Hotel Management Rs. 350,000/-
(Duration 1 year) Course Fee

No IELTS No Interview No Bank Balance

flex Institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk



# UK- NO NEED IELTS



BEng Civil Engineering
BA Business Management
Bsc/Msc Biotechnology
Msc Financial Management
Msc Bioinformatics
MA English Language Teaching
LLM General
Msc Information Technology
Bsc Computing
Bsc Multimedia

O/L ONLY
ENGLISH COURSE
STUDENT VISITOR

STUDY IN EUROPE



INTERNATIONAL CITY COLLEGE
No-07,2nd floor, W,A,Silva Mawatta,wellawatha, Colombo-06
Tel: 0114 594104 - Fax:-0112 582722 Hot:- 0771250789 - 0772953963
E-mail: citycollegelanka@gmail.com Web: citycollegelanka.com


## ஈராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 10 . 03 . 1943



ஆண்டவன் அடியில் 28 . 08 . 2009

### அமரர் தம்பியப்பா தெட்சணாமூர்த்தி

(இளைப்பாறிய உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், வேலணை)

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
சரவணை மேற்கு, வேலணை.

தற்காலிக முகவரி:
19/2, பெருமாள் கோயில் தெற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.

(7326)

## வேலையாள் தேவை

கோழிப்பண்ணை ஒன்றுக்குத் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஒருவர் உடன் தேவை. வயதெல்லை 35-50.

தொடர்பு: 0771341795

## கோழிக் குஞ்சு விநியோகம்

ஒரு நாள் பைரைா No.1புறொயிலர் குஞ்சு 2.9.2011 இல் விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்யவும். விவரங்களுக்கு:

S.கிருஷ்ணகுமார்.
விதானை வளவு,
மானிப்பாய். T.P.0772338084


# STUDY MBBS

UKRAINE EAST EUROPE



Sep-Oct-Nov Intakes, STARTS NOW

Recognized By Sri Lanka Medical Council

INTERNATIONAL CITY COLLEGE
No-07,2nd floor, W,A,Silva Mawatta,Wellawatha , Colombo-06.
Tel: 0114 594 104 Fax: 0112 582722, 077 12 50 789
E-mail: citycollegelanka@gmail.com WEB: CITYCOLLEGELANKA.COM


## பசு விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கறவைப்பசு, பசுக்கன்றுடன் விற்பனைக்குண்டு. 10 போத்தல் கறக்கக் கூடியது. இரண்டாம் ஈத்து

தொடர்பு: 0772269967


Rent/Lease JAFFNA

Commercial Premises for rent/ lease available for companies of banks

2 units each with floor area of 650 square feet location in the heart of Jaffna next to the main bus stand and teaching hospital at power house road

same space available for rent upstairs

Contact: 077 9572293 or 077 4697357


## பெண் விற்பனையாளர்கள் தேவை

சங்கானையில் அமைந்துள்ள புடைவை நிலையம் ஒன்றுக்கு, பெண் விற்பனையாளர்களும், விற்பனைப் பயிற்சியாளராகப் பழக விரும்புவோரும் தேவைப்படுகின்றனர். சங்கானைக்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத் தக்கது.சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:0213219132
உரிமையாளர்.

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

வண்ணை சிவம் வீதி, தாவடி மேற்கு, முதலாம் ஒழுங்கையில் அமைந்துள்ள "ஆலங்கட்டையடியில்" 2 1/2 பரப்புக் காணியும் கல்வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:0212226294,0213211997

## மணமகன் தேவை

நோர்வேயில் குடியுரிமையுடைய யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1981 பூராடம் தனுசுராசி. 5' அடி மாநிறம் 15 கிரகபாவம்.விவாகரத்தானவர். 3 வயதில் பெண் பிள்ளை உண்டு. தகுந்த மணமகன் தேவை. அணுகவும்.

S.K.சிவகரன் (அமைப்பாளர்),
சிவலயா திருமணசேவை,
T.P. 0750741451,0215681126

## தொழில் வாய்ப்புகள்

CIC Group Guard (Pvt)Ltd விவசாயத் துறையில் முன்னிலை வகிக்கும் நிறுவனமாகும். மற்றும் நாட்டில் பெயர் பெற்ற விவசாயத்துறையில் பாரிய நிறுவனமான CIC Holdings PLC இன் துணை நிறுவனமுமாகும்.

உத்வேகம், உற்சாகம் மற்றும் தொடர்பாடல் திறமையும் கொண்ட இளைஞர்களை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலிருந்து பின்வரும் பதவிக்கு எமது நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

### பதவி : விற்பனை முன்னேற்ற அலுவலர்கள்

தெரிவாகும் விண்ணப்பதாரி பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்கவேண்டும்.

* விவசாயத்தில் டிப்ளோமா அல்லது அதற்கு இணையான தகுதி
* வயது 30 இற்கும் கீழ்
* இம் மாதிரியான ஒரு பதவியில் முன் அனுபவம் மேலதிக தகுதியாகும்
* செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
* சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்
* தெரிவாகும் விண்ணப்பதாரிக்கு கம்பனிக் கட்டமைப்பு பயிற்சி உட்பட தொழில் முன்னேற்றத்துக்கான வாய்ப்புகள் உண்டு.

மேற்படி தகுதிகள் உடையவர்கள் உறவினர்கள் அல்லாத இருவர்களின் தொடர்பு விபரங்களுடன் கீழ்க் காணும் முகவரிக்கு இவ்விளம்பர தினத்தில் இருந்து ஏழு (07) நாள்களுக்குள் விண்ணப்பிக்குக. விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

Senior Manager - Human Resource Management
*CIC Holdings PLC,* CIC House
199, Kew Road, Colombo - 02
Fax: 0112331771, Email: hrd@cic.lk

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

வடமராட்சி, புலோலிதெற்கு சின்னத்தாய் கோயிலடி என்னும் இடத்தில் 12½பரப்புக் காணியுடன் வீடு ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0779801057

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு முன்பாக 3½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0213001684

## வீடு விற்பனைக்கு

மாவடிச் சந்தி, வட்டு தெற்கு, வட்டுக் கோட்டையில் 5 பரப்புடன் கூடிய வீடு உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0771040881,0779218633

## கோழிக் குஞ்சு விற்பனைக்கு

உயர்தர கலப்பின ஒரு நாள் ஊர்க் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு விலை ரூபா 75/= முற்பதிவுக்கு அழையுங்கள்

தொடர்பு: 0217200616 , 0771341795

## காணி விற்பனை

கொழும்புத்துறை பிரதான வீதியிலிருந்து 100 யாருக்குள் 12 பரப்பு நல்ல தண்ணீர் காணி விற்பனைக்கு உண்டு.

Tel: 0212 58202, 0776156364


# மலேசியா

தமிழ் பேசும் பெண்களுக்கு
ஓர் அரிய வாய்ப்பு



மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 850 |
| இலங்கைப் பெறுமதிக்கு | ரூபா. 28,000 |

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் - முற்றும் இலவசம்

Labour Licence No. 2516
GOODLINE MANPOWER SERVICES
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

நோயாளிகளை வீட்டில் சென்று பராமரிப்பதற்கு பயிற்றப்பட்ட/பயிற்றப்படாத பெண் தாதியர்கள், அற்றென்டன் (Attendant) தேவை. சம்பளம் 15,000/= மேல், தங்குமிடம் இலவசம், வயது 20-45, தகமை : க.பொ.சாதாரண தரம்.

**Visicare Home Nursing**
No. 22/4, Nelson Place, Wellawatta, Colombo - 06.
Tel - 0714405303/0755930708

## வீடு விற்பனை

கட்டுடை, மானிப்பாயில், சகல வசதிகளுடன் 5 பரப்பு காணியில் 6 அறை கொண்ட வீடு உடனடி விற்பனைக்கு.

**TEL : 0772929468**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1978, அனுஷம் நட்சத்திரம், கிரகபாவம் 37½ Jenior Network Systems, Engineer ஆக மாத வருமானம் ரூ.100,000 இற்கு மேலதிகமாக கொழும்பில் உயர் பதவி வகிக்கும் அழகான மணமகனுக்கு ஏற்ற அழகான படித்த, நற்பண்புமிக்க மணமகள் தேவை.
தொடர்பு:0777117030, 0771985233, 0773450932

## விற்பனைக்கு

ஜப்பான் சுசுக்கி சுவிப்ற் ரக கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 075 9664202

## அறை வாடகைக்குண்டு

சுண்டுக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகில் கொழும்புத்துறை வீதியில் பெண்களுக்கான தங்குமிட வசதி, உணவுடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு:0774621440

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில
By. ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, பிளாக்வீதி, சங்கானை, சண்டிலிப்பாய்வீதி, சண்டிலிப்பாய்.
தொ.பே: 077 6751649

## வீடு விற்பனை

சங்கானை, தேவாலய வீதியில் (Church Road)ல் சகல வசதிகளுடன் 6 பரப்பு காணியில் 6 அறை கொண்ட வீடு உடனடி விற்பனைக்கு.

**TEL : 0775988413**

## உயிரூட்டுகின்றோம்

பழுதான தொழில்சார் மின்சார உபகரணங்களைத் திருத்திக்கொள்ளவும், புதிய உபகரணங்களையும் உதிரிப்பாகங்களையும் கொள்வனவு செய்யவும், எங்களது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

**உத்தரவாதங்கள் எங்களது நிலையத்திலேயே, உடனே செய்து கொடுக்கப்படும்.**
**(கொம்பனிக்கு அனுப்பி செய்வதில்லை)**

செயின்சோ, ஜெனறேட்டர், மரவேலை இயந்திரம், மின் உபகரணங்கள், வோசிங் மெசின்,மின்சார கேத்தல்கள், றயிஸ் குக்கர் போன்றவற்றின் உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**GREEN HOUSE TRADING COMPANY (PVT) LTD.**
இல. 05, கருவப்புலம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு. (திருநெல்வேலி). 021 2226459.
(நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில்)

## வீடு, காணி விற்பனைக்கு

சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கு முன்பாக டிஸ்பென்சரி ஒழுங்கையில் 6 பரப்புக் காணியும் அதில் 6 அறைகளுடன் சகல வசதியும் கொண்ட வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0776218505,0212224691

## வீடு விற்பனை

பொன்னையா லேன், ஆனைக்கோட்டையில் இரண்டு பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவை இல்லை.
தொடர்புக்கு - 0718451438

## Wanted

Medical & sales Representative for Jaffna District. Apex pharmaceuticals, Mt.Lavania.
apexpharma@sltnet.lk
Interview on Appointment: 0777 906430


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பலாலி றோட்டில் 1-3/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு
0112 737770
071 8746047

## வீடு விற்பனை

131/C பீச் றோட் Old park road க்கு அருகில் யாழ்ப்பாணத்தில் 1-1/2 பரப்புடன் வீடு விற்பனைக்குள்ளது.
தொடர்பு
077 4146280, 2360970

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் கிருஸ்ணபிள்ளை

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கிருஸ்ணபிள்ளை 26.08.2011 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பிற்பகல் 1 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி, கந்தரோடை,
சுன்னாகம். (7332)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி சங்கரப்பிள்ளை இராசேஸ்வரி
(ஆத்தைப்பிள்ளை)



சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சங்கரப்பிள்ளை இராசேஸ்வரி 24.08.2011 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை (சிவக்கொழுந்தர்)- சொர்ணம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான லோகநாயகி இராமலிங்கத்தின் அன்புச் சகோதரியும், ஐங்கரன், முரளிதரன், ஞானகரன், தயாகரன், கரன் சாரதா தேவி ஆகியோரின் பாசமுள்ள சிறிய தாயும் க.ஸ்ரீமுகுந்தனின் (வவா) வளர்ப்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி காளையன்புல இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு. (7334)

தகவல்:
குடும்பத்தினர்,
உறவினர்.

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
11.11.1939

உதிர்வு
28.08.1998

### அமரர் பொன்னையா தியாகராசா
(சாலைப் பரிசோதகர் C.T.B. கிளிநொச்சி, பருத்தித்துறை சாலைகள்)

அன்பு அப்பாவே!
அன்பு மொழி பேசி எமை வளர்த்த அன்புத் தெய்வமே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் பதின்மூன்றாகி விட்டது-ஆனால்
உங்கள் நினைவுகள் எம்முடன் இன்று போல் இருக்கின்றது
அப்பாவே! அம்மாவை துணைக்கா கூப்பிட்டீர்கள்
இன்று எமக்கு அப்பாவும் இல்லை அம்மாவும் இல்லை
இன்று நாம் தனிமரமாகத் தவிக்கின்றோம்
மீண்டும் ஒரு ஜென்மம் எடுத்தால்
எமக்கு அப்பாவாகவும் அம்மாவாகவும் நீங்கள் இருவரும் வரவேண்டும்
என்று இறைவனிடம் மன்றாடி உங்கள் இருவரதும்
ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுகின்றோம்

47, பெந்தகோஸ் லேன்,
யாழ்ப்பாணம் (7327)

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## தேவை

சிரேஷ்ட உதவி ஆசிரியர்கள்
(3 வருட அனுபவம்)

கணினி வரைகலைஞர்
Graphic Designer

கணினி தட்டெழுத்தாளர்
Typesetter

அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
uvacancies@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவில் 42 வருட கால கடாபி ஆட்சிக்கு முடிவு

**லிபியத் தலைநகரின் பெரும்பகுதி பெரும்பாலும் கிளர்ச்சியாளர்கள் வசம் வந்துவிட்டது . இறுதி வரை போராடு வேன் என்ற கடாபியை இப்போது காணவில்லை. இவர் ஜனாதிபதி மஹிந்தவின் நெருங்கிய நண்பர்.**

## ஒளித்துவிட்ட தலைவரை கிளர்ச்சிபடை தேடுகிறது



தீப்பற்றி எரியும் கடாபியின் தனிப்பட்ட வளாகத்துக்கு முன்பாக வோக்கி டோக்கியில் பேசியபடி செல்லும் கிளர்ச்சியாளர் ஒருவர்

லிபியாவின் நீண்ட கால ஆட்சியாளர் 69 வயதான மவும்மர் கடாபி இப்பொழுது எங்குள்ளார் என்பது எவருக்குமே தெரியாது. அரபு நாடுகளில் நீண்ட காலமாக ஆட்சியில் இருந்தவர் இவர் என்றும் கூடக் கூறப்படுகின்றது. 42 வருட காலம் அவரது ஆட்சி நடைபெற்றுள்ளது.

அரபு நாடுகள் பலவற்றில் புரட்சி வெடித்ததையடுத்து லிபியாவிலும் மக்கள் போராட்டம் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஆரம்பமாயிற்று. கடாபி அசைந்து கொடுக்காமல் பதவியைப் பற்றிக் கொண்டார். தன்னை எதிர்த்தவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கையில் இறங்கினார். மடிந்தாலும் வீரனாகவே மடிவேன் என்று சூளுரைத்தார்.

கடந்த 23 ஆம் திகதி லிபியாவின் தலைநகருக்குள் கிளர்ச்சிப்படைகள் புகுந்து விட்டதாக செய்திகள் பரவின. கடாபி தப்பிஓடிவிட்டதாகவும் கூடச் செய்திகள் வந்தன. கடாபியின் மகன்மார் இருவரை கிளர்ச்சியாளர்கள் பிடித்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மகன் மாரில் ஒருவரான சாயிப் அல்- இஸ்லாம் கடாபி தமது தந்தையின் மாளிகையில் பத்திரிகையாளர்களின் முன்னால் தோன்றி தம்மையாரும் பிடிக்கவில்லையென்று அறிவித்தார்.

எதிர்ப்பாளர் தலைநகருக்குள் பெரும் எடுப்பில் குவிந்தவண்ணம் இருந்த அதேவேளை கடாபியின் மகன்களில் ஒருவர் பத்திரிகையாளர் முன் தோன்றி'' திரிபோலியில் எல்லாம் அப்படியே இருக்கிறது. நாமே கட்டுப்பாட்டில் இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்க'' என்று அறிவித்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

### 27 வயதில் பதவிக்கு வந்தார்

1969 ஆம் ஆண்டு அப்போது ஆட்சியில் இருந்த மன்னனை வீழ்த்திவிட்டு பதவிக்கு வந்த போது கடாபிக்கு 27 வயது. 1976 இல் கடாபி வெளியிட்ட பசுமை நூலில் முதலாளித்துவத்தையும் மார்க்ஸிய வாதத்தையும் நிராகரித்து தமது சொந்த ஆட்சிமுறை கோட்பாடு ஒன்றை அறிவித்தார். அதன்படியே ஆட்சி புரிந்து வந்தார்.

''கடாபி முடிந்தார் இனி நாம் சுதந்திரப் புருஷர்கள்'' என்று கிளர்ச்சித் தலைவர்களில் ஒருவர் அறிவித்துள்ளார். ஆனால் கேணல் கடாபி மறைவிடத்திலிருந்து வெளியிட்டுள்ள ஒரு குறும் செய்தியில் தனது மக்களை திரிபோலியில் கூடி கிளர்ச்சியாளர்களை எதிர்த்து போர் புரியும்படியும் இறுதி வரை தாம் போராடப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

லிபியாவின் முக்கிய நகரான பென்காஸி ஏற்கனவே கிளர்ச்சிப் படைகளிடம் வீழ்ந்துவிட்ட நிலையில் இப்போது புரட்சியாளர்கள் தலைநகர் திரிபோலிக்குள்ளும் புகுந்து பல பகுதிகளை தம்



நெருங்கிய நண்பரான மஹிந்தவுடன் நெருக்கமாக

பிடிக்குள் கொண்டுவந்துவிட்டார்கள் என்று கூறப்படுகின்றது.

ஆங்காங்கே கடாபியின் ஆதரவு படைகள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த போதிலும் விரைவில் இந்த எதிர்ப்பும் தகர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவாக நேட்டோபடைகள் அவ்வப்போது விமானத் தாக்குதல்களை நடத்திவருகின்றன. ஐ.நா.படைப்பிரிவுகளும் சிலபகுதிகளில் நிலை கொண்டுள்ளன.

கடாபியின் மகன்கள் இருவரும் போர்க் குற்றங்கள் புரிந்துள்ளதாக ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதற்கிடையில் தலைமறைவாகியுள்ள கடாபி தலைநகரைவிட்டு வெளியேறிவிட்டாரா? அல்லது அங்கேயே சுரங்க வீடொன்றில் பதுங்கியுள்ளாரா? என்பதைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

### பிடித்துத் தந்தால் பணம் கிடைக்கும்

கடாபியை உயிருடன் அல்லது பிணமாகக் கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு 1.7 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படுவதுடன் பொது மன்னிப்பும் வழங்கப்படும் என்று புரட்சிபடையினர் அறிவித்துள்ளனர்.

பொதுவில் பார்த்தால் கடாபி உயிருடனோ பிணமாகவோ பிடிபட வேண்டும் அல்லது அவர் வெளிநா டொன்றுக்கு தப்பியோட விட்டதாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் ,அதுவும் இல்லையெனில் தாம் பதவியிலிருந்து விலகிவிட்டதாக அவர் அறிவிக்க வேண்டும். அதன் பிறகேலிபியா கடாபியின் ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டதாக முழுமை யாக அறிவிக்கப்பட முடியும். இதில் ஏதாகிலும் ஒன்று மிக விரைவில் நடைபெறலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

கிளர்ச்சியாளர்கள் திரிபோலி நகரை ஊடுருவியதையடுத்து கடாபியின் பாப் அல்- அஸ்ஸியா வளாகத்தை எதிர்ப்பாளர்கள் கைப்பற்றினார்கள். மூலோபாய தந்திரமாக அதைச் செய்வதாக அறிவித்திருந்தார். ஆனால் அந்த வளாகத்தில் மட்டுமல்ல ஏனைய இடங்களிலும் கிளர்ச்சியாளர்கள் அவரைத் தேடி வருவ்தாகக் கூறப்படுகின்றது.

### அங்கே சிறுசிறு மோதல்கள்


திரிபோலியின் முக்கிய இடங்கள் கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ச்சியுற்றிருக்கும் அதே வேளை ஆங்காங்கே கடாபி ஆதரவாளர்களின் எதிர்ப்புக் காணப்படுகின்றது. ஸ்னிப்பர், ஹொக் கெட் அற்றும் கனரக ஆயுத வெடிச்சத்தங்கள் கேட்டபடி இருந்தன.

ஆறு மாதங்களுக்கு முன் ஆரம்பமான கடாபிக்கு எதிரான எழுச்சியானது வெற்றிபெற்றதாக அறிவிப்பதற்கு கிளர்ச்சியாளர்கள் இப்போது தீவிரமாக அவரைத் தேடிக்கண்டு பிடிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள்.

பொது மக்கள் பெரும்பாலும் வீடுகளுக்குள்ளேயே இருந்து வருவதாக செய்திகள் கூறுகின்றன. போர் விரைவில் முடிந்துவிடும், மோசமாகியுள்ள உணவு, தண்ணீர் மற்றும் மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நீங்கிவிடும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கடாபியின் ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்துவிடும் என்பது உறுதியாகிவிட்டமையால் கிளர்சியாளர்கள் லிபியாவின் எதிர் காலம் பற்றித் தீர்மானிப்பதற்காக துருக் கியில் தமது மேற்கிந்திய ஆதரவாளர்களைச் சந்திப்பதற்கு ஆயத்தமாக வருவதாக செய்திகள் கூறின. இடைக் கால அரசு ஒன்றை நிறுவவும், அதற்கான நிதிகளைப் பெற்றுக் கொள்ளவும் அவர்கள் முயல்வார்கள் என்று தெரிகிறது.

எதுவானாலும் இடைக்கால அரசு ஒன்றை நிறுவுவதற்கு முன் லிபியாவின் கிளர்ச்சியாளர்களின் அராஜகம் தோன்றிவிடக்கூடாது. அங்கே அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்த சகலரும் அவசரமாக செயற்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் கருதுகின்றது.



மவும்மர் கடாபி

# தாய்ப்பாலே தலைசிறந்தது கொடுக்க ஊக்குவியுங்கள்

(9 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பால் கொடுப்பதால் இளமையும், அழகும் குறையும் என்ற சந்தேக மேயில்லாமல் இளம் தாய்மார்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுத்து வளர்க்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### தாய்க்கும் நன்மை உண்டு

தாய்ப்பால் கொடுப்பதால் குழந்தைக்குப் பல நன்மைகள் இருப்பதைப் போல தாய்க்கும் நன்மைகள் இருக்கின்றன. முதலாவது தாய் கருத்தரிப்பதை இயற்கை யாகத் தள்ளிவைக்க உதவுகிறது. மேலும் தாய்ப்பால் கொடுப்பதால் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் வருவதைத் தவிர்க்க முடியும் என்று மருத்துவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

குழந்தைக்கு ஒரு வருடகாலமாவது தாய்ப்பால் கொடுப்பது நல்லது. இவ்வாறு செய்தால் மார்பகப் புற்றுநோயை உண்டாக்கும் ஹோர் மோன்களின் உற்பத்தி கணிச மான அளவுக்குக் குறைக்கப்படுகிறது.

பசுப்பாலை விடத் தாய்ப்பால் பலவிதங்களில் சிறந்தது. இதைக் காய்ச்ச வேண்டிய தேவையில்லை. எப்போதும் பயன் படுத்தலாம். குழந்தைக்குத் தேவையான அத்தனை சத்துக்களும் சரியான விகிதத்தில் இதில் அமைந்திருக்கின்றன. புட்டிப்பாலுக்கு ஆகும் செலவைவிட ஒரு தாய் நல்ல சத்துள்ள ஆகாரங்களைச் சாப்பிட்டு அதன் மூலம் குழந்தைக்குப் பால் கொடுக்கின்ற போது ஆகும் செலவு குறைவானது தான். தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைகளின் மன வளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் மிகவும் நன் றாக இருக்கிறது. ஆகவே இளம் தாய்மார்களே குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுங்கள் என்பதை எல்லா மருத்துவர்களும் தற்போது வலியுறுத்தி வருகின்றனர்.

குறைப்பிரசவத்தில் பிறந்தவை, நோய்ப்பாதிப்பு அடைந்தவை ஆகிய குழந்தைகளுக்கு தாய்ப் பாலை உறிஞ்சிக்குடிக்க முடியாத போது தாய்ப்பாலைக் கறந்தெடுத்து சிறிய கிண்ணத்தின் மூலம் ஊட்ட முடியும். வேலைக்குச் செல்கின்ற தாய்மாரும் தாய்ப்பாலூட்டுவதற்காக அரசு 84 வேலை நாள்களை விடுமுறையாக வழங்கியுள்ளது. விடுமுறையின்பின் இவர்களும் தாய்ப்பாலைக் கறந்தெடுத்து சிறிய கிண்ணத்தின் மூலம் ஊட்ட முடியும். இவ்வாறாகக் கறந்தெடுத்த பாலை ஆறு மணித்தியாலங்கள் வரை சாதாரண அறை வெப்பநிலையில் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்.

எனவே தாய்மார்கள் மட்டுமல்ல ஏனைய குடும்ப அங்கத்தவர்கள், தந்தைமார்கள், உறவினர்கள், சமூகத் தலைவர்கள், நிறுவனத்தலைவர்கள் போன்ற அனைவரும் தாய்ப்பாலூட்டலின் முக்கியத்துவத்தையுணர்ந்து தாய்ப் பாலூட்டுவதற்கான ஊக்குவிப்பையும், கவனிப்பையும், ஆதரவையும் வழங்குவது முக்கியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களுக்கு காலணிகள், சீருடைகள்

யாழ்ப்பாணம், ஒக.28

தேசிய மட்டப் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள வீரர்கள், வீராங்கனைகளுக்கு வடமாகாண விளையாட்டு அமைச்சினால் காலணிகள், சீருடைகள் வழங் கப்படவுள்ளன.

தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பாட சாலை வீரர்கள், வீராங்கனை களுக்கும் வடமாகாண ஆளு நர் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் இடை யிலான சந்திப்பு ஒன்று கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை கண்டி வீதியில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது தேசிய மட்டப் போட்டி யில் கலந்து கொள்ளவுள்ள வீரர் களின் குறைநிறைகள் தொடர் பாக ஆராயப்பட்டது.

இதன் போது போட்டிகளில் பயன்படுத்தும் காலணிகள், சீருடைகள் தேவை என வீரர்கள் ஆளுநரிடம் தெரிவித்தனர்.

தேசிய ரீதியான போட்டிக்கு முன்னர் வீரர்களுக்குத் தேவை யானவற்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு வட மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் சி. அண்ணாத் துரைக்குப் பணித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர் இ.இளங் கோவன், வடமாகாணக் கல்வித் திணைக்கள உதவிப் பணிப்பா ளர் எஸ்.சத்தியபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி, ஒக.28

''அலெக்ஸன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக'' கைதடி வடக்கு நவ சனசமூக நிலையமும் நவசக்தி விளை யாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் ''செற்றப்'' முறையி லான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று 28ஆம் திகதி மோதவுள்ள கழகங்களில் முதல் போட்டியான தென்மராட்சி ரீதி யிலான போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் யாழ். மாவட்ட ரீதியிலான போட்டி யில் அரியாலை ஐக்கிய விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவகீதன்ஸ் விளை யாட்டுக் கழகம் மோதவுள்ளது. (த-288)

## யாழ்.பல்கலையின் கராத்தே போட்டி

யாழ்ப்பாணம், ஒக.28

யாழ்.பல்கலைக்கழகத்தின் உள்ளக மாணவர்களுக்கான கராத்தே சுற்றுப்போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப .2.30 மணியளவில் யாழ்.பல் கலைக் கழகத்தின் பொதுமண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு அலகின் முன்னாள் பணிப்பாளர் எம்.பத்ம நாதன் கலந்து கொள்வார். (த-23)

## கிரிக்கெட் பயிற்றுநருக்கான 'லைசென்ஸ்' வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக. 28

யாழ்.மாவட்டத்தில் கிரிக்கெட் பயிற்றுநர் தரம் I இல் சித்திய டைந்தவர்களுக்கான 'லைசென்ஸ்' வழங்கும் நிகழ்வு இலங்கை கிரிக்கெட் சபையின் துடுப்பாட்டப் பயிற்றுநர் கல்விக்குப் பொறுப் பான ஜே.சி.கமகேயின் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியில் இந்த வைபவம் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பயிற்றுநர் தரம் I இல் சித்தியடைந்த அனை வரையும் தவறாது கலந்துகொள்ளுமாறும், தரம் I சித்தியடைந் தமைக்கான பத்திரத்தையும் அதன் போட்டோப் பிரதி ஒன்றை யும் கலர் போட்டோ பிரதி ஒன்றையும் கலர் போட்டோ இரண்டையும் எடுத்து வருமாறு யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலா ளர் எ.எஸ்.நிசாந்தன் அறிவித்துள்ளார். (த-23)

## அஞ்சல் ஓட்ட வீரர்களுக்கு பயிற்சி முகாம் புதனன்று

யாழ்ப்பாணம், ஒக. 28

37ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் பங்கு கொள்ளவிருக் கும் வடமாகாணத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட அஞ்சல் ஓட்ட வீரர்கள், வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதா னத்தில் இடம்பெறவுள்ளது என வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை அறிவித்துள்ளார். (த-23)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் செயல் திட்டம்

வலி.வடக்கு, ஒக. 28

வடமாகாணக் கல்வித் திணைக்களம் வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக பாடசாலைகளின் உடனடித் தேவை கருதி விளையாட்டு உபகரணங்களை வழங்கும் செயற்பாடு களை முன்னெடுத்துள்ளது.

விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் செயல் திட்டத்தின் கீழ் அண்மையில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசா லைக்கு உயரம் பாய்தலுக்கான மெத்தை உட்பட ஏனைய உப கரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலையில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் உள்ள நிலையில் விளையாட்டு உபகரணங்களுக்கான பற்றாக்குறை காணப்பட்டது. இந்த நிலையில் உயரம் பாய்தலுக்கான உபகர ணங்கள் வழங்கப்பட்டதைப் பாடசாலைச் சமூகம் வரவேற்றுள் ளது. (எ-86)

# மட்டக்களப்பு சென். மைக்கல் அணியை 140 ஓட்டங்களால் வென்றது சென். ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், ஒக. 28

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மட்டக்களப்பு சென். மைக் கல் கல்லூரி அணியை 140 ஓட்டங்களால் வென்றது.

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியில் 15வயது பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தும் இரண்டாவது சுற்றுப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென். ஜோன்ஸ் கல் லூரி அணி முதலில் துடுப்பெ டுத்தாடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப் பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக் களை இழந்து 268 ஓட்டங்க ளைப் பெற்றது.

இதில் அஜித் 69 ஓட்டங்களை யும் கபில்ராஜ் 38 ஓட்டங்களை யும் பிரசாகர் 22 ஓட்டங்களை யும் துவாரகசீலன், கிசான்துஜன் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 40, 21 ஓட்டங்களை யும் தமது அணி சார்பாகப் பெற் றனர்.

பந்து வீச்சில் மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி அணி சார்பாக அலிஷான் 10 ஓவர்கள் பந்து வீசி 41 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி னர்.

269 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக் கெட்டுக்களை இழந்து 121 ஓட் டங்களை மட்டும் பெற்றது.

இதில் மிதுர்ஷன் 28 ஓட்டங் களையும் லதுர்ஷன் 14 ஓட்டங் களையும் எட்வின் 12 ஓட்டங் களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பாக பந்து வீச்சில் பிரிய சங் கர் 5ஓவர்கள் பந்து வீசி 10 ஓட் டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை யும் அஜித் 2 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டத்தைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கானமிர்தன் 2 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட் டத்தை கொடுத்து ஒரு விக்கெட் டையும் வீழ்த்தினராகள். (த-23)

# மானிப்பாயில் இந்து அணியிடம் வீழ்ந்தது சாவகச்சேரி இந்து

யாழ்ப்பாணம், ஒக.28

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட் டில் வடமாகாண பாடசாலை அணிகள் 15 வயதுப் பிரிவின ருக்கு இடையே நடைபெறும் 50 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி ஆட்டமொன் றில் மானிப்பாய் இந்துக்கல் லூரி 66 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட் டத்தில் மானிப்பாய் இந்துக் கல் லூரியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி 38 ஓவரில் 139 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. டிலக்சன் 38 ஓட்டங்களையும், பிரதீபன் 24 ஓட்டங்களையும் ஜோன்சன் 16 ஓட்டங்களையும் நிஷாந்தன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங் களையும் பெற்றனர்.

சாவகச்சேரி இந்துக்கல்லூ ரியைச் சேர்ந்த தன்ஜின் 10 ஓவர் களில் 39 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுக்களையும் அன்ஜீ தன் 6.5 ஓவர்களில் 16 ஓட்டங் களுக்கு 3 விக்கெட்டுக்களை யும், தர்ஷன் 5 ஓவர்களில் 15 ஓட் டங்களுக்கு ஒரு விக்கெட்டை யும் கைப்பற்றினர். 139 ஓட் டங் களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக்கல்லூரி 23.2 ஓவர்களில் 73 ஓட்டங் களைப் பெற்றுக்கொண்டது.

அன்ஜீதன் 24 ஓட்டங்களை யும் தன்ஜின், கபினாத் முறையே 13, 11 ஓட்டங்களையும் பெற் றனர். மானிப்பாய் இந்துக் கல் லூரியைச் சேர்ந்த பிரதீபன் 7.2 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங் களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ஜனேஸ்வரன் 6 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு 3 விக் கெட்டுக்களையும் டிலக்சன் 6 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங் களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சஜித் 2 ஓவர்கள் பந்து வீசி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி 66 ஓட்டங்களால் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. (த)

## இரண்டாவது சுற்றுக்கு சென்.பற்றிக்ஸ் தகுதி

குருநகர், ஒக. 28

அகில இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் 15 வயதுப் பிரிவி னர்க்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் சுற்றில் நடைபெற உள்ள போட்டியில் பங்குபற்றுவதற்கு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி தகுதி பெற்றுள்ளது.

இரண்டாம் சுற்று விலகல் முறையிலமைந்த 50 மட்டுப்படுத் தப்பட்ட ஓவர்களைக் கொண்டது.

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் 15 வயதுக் கிரிக்கெட் அணியினர் முதலாம் சுற்றில் தாங்கள் கலந்து கொண்ட நான்கு போட்டிகளில் மூன்றில் வெற்றிபெற்றது.

இரண்டாம் சுற்றின் முதலாவது போட்டியில் இந்த அணி கிண் ணியா மகா வித்தியாலத்தை எதிர்த்து மோதவுள்ளது. (த-51)

## கராத்தே பயிற்சி புதனன்று

யாழ்ப்பாணம், ஒக. 28

வடமாகாணக் கராத்தே சங்கம் நடத்தும் கராத்தே பயிற்சி முகாம் ஒன்று எதிர்வரும் புதன்கிழமை கீறின்பீல்ட் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாமில் யாழ். மாவட்டத்தில் உள்ள கறுப்புப் பட்டி மண்ணிறப்பட்டி வீரர்களைக் கலந்துகொள்ளுமாறு வட மாகாணக் கராத்தே சங்கத்தின் தலைவர் சென்சேய் றேமன் கபிரி யல் அறிவித்துள்ளார். (த-23)

# ஓல்ட்கோல்ட் அணியை வென்றது பற்றீசியன் வி.க.

யாழ்ப்பாணம், ஒக.28

பற்றிசியன்ஸ் விளையாட் டுக் கழகம் 67 ஓட்டங்களால் 'ஓல்ட் கோல்ட்' விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டு அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

ஜொலிஸ்ரார் விளையாட் டுக் கழகம் நடத்தும் பி.எஸ். குமாரசாமி வெற்றிக் கிண்ணத் துக்கான 20/20 கிரிக்கெட் சுற் றுப் போட்டித் தொடரின் முதலா வது காலிறுதியாட்டம் நேற்று சனிக்கிழமை யாழ்.இந்துக் கல் லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

எரிக்பிரதாப் 56 ஓட்டங்க ளையும் கிளின்ரன் 20 ஓட்டங் களையும் ஜஜிந்திரன் 16 ஓட்டங் களையும் தமது அணி சார்பா கப் பெற்றனர்.

பந்துவீச்சில் 'ஓல்ட் கோல்ட்' விளையாட்டுக் கழக அணி சார் பாக ஜெயசுதன் 4 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 2 விக் கெட்டுக்களையும் குகன் 3 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங் களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சிறிகுகன் 4 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் டுக்களையும் திலீபன் 4 ஓவர் கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த் தினர்கள்.

147 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனப் பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய 'ஓல்ட் கோல்ட்' விளையாட்டுக் கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் குகன் 17 ஓட்டங்களை யும் நிரோஷன் 12 ஓட்டங்களை யும் சிறிகுகன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார் பாக சுஜீவன் 3 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுக்களையும் அஜீத் டார் வின் 3 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும் ஜஜிந்திரன் 2 ஓவர் கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பத்மமுரளி 0.2 ஓவர்கள் பந்து வீசி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (த-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அணி அறிவிப்பு

## பீற்றர்சன் ஓய்வு

### இளம் வீரர் ஸ்டோக்ஸ்க்கு வாய்ப்பு



பீற்றர்சன்

இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் விளையாடவுள்ள இங்கிலாந்து அணி அறிவிக்கப் பட்டுள்ளது. அந்த அணியின் மத்திய வரிசை துடுப் பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனுக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. இளம் வீரர் பென் ஸ்டோக்ஸுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறும் இருபது ஓவர் ஆட்டத்தில் பீற்றர்சன் விளையாடுகிறார். இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காகவும், மூத்த வீரர்களுக்கு ஓய்வு அளிக்கும் வகையிலும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அனுபவம், இளமை என்று சமபலம் வாய்ந்த அணி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தேர்வுக்குழுத் தலைவர் ஜெப் மில்லர் தெரிவித்தார்.

ஒருநாள் அணி:

அலிஸ்டர் குக் (அணித்தலைவர்), ஜேம்ஸ் அன்டர்சன், இயன் பெல், ரவி போபாரா, ரிம் பிரஸ்னன், ஸ்டூவர்ட் புரோட், ஜடே டெர்ன்பேச், ஸ்டீவன் பின், கிரேக் கீஸ்வெட்டர், இயன் மோர்கன், சமித் படேல், பென் ஸ்டோக்ஸ், கிரேம் சுஸ்வான், ஜொனாதன் ரொரட்.

இருபது ஓவர் அணி:

ஸ்டூவர்ட் புரோட் (அணித்தலைவர்), ரவி போபரா, ரிம் பிரஸ்னன், ஜோஸ் பட்லர், ஜடே டெர்ன்பேச், ஸ்டீவன் பின், அலெக்ஸ் ஹேல்ஸ், கிரேக் கீஸ்வெட்டர், இயன் மோர்கன், சமித் படேல், கெவின் பீற்றர்சன், பென் ஸ்டோக்ஸ், கிரேம் சுவான். (15)

# கம்பீருக்கு கண்பார்வை பாதிப்பு!

நான்காவது டெஸ்டில் பின்னந் தலையில் அடிபட்ட கம்பீருக்கு, கண்பார்வை குறைபாடு இன்னும் சரியாகவில்லை. இதனால் ஒரு நாள் ஆட்டங்களில் பங்கேற்பது குறித்து சிக்கல் தொடர்ந்து நீடிக்கிறது.

அண்மையில் முடிந்த நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்தின் பீற்றர்சன் அடித்த பந்தைப் பிடியெடுக்க முயன்ற கம்பீரின், பின்னந் தலைப்பகுதியில் பலமாக அடிபட்டது. இதனால் இவரது கண் பார்வையில் குறைபாடு ஏற்பட்டது. பின்னர் 'எம்.ஆர்.ஐ ஸ்கேன்' எடுக்கப்பட்டது. இதன் முடிவில் பெரிய பிரச்னை இல்லை எனத் தெரிந்தது. இதனால் சசக்ஸ் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் கம்பீர் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பார்வைக் குறைபாடு:

ஆனால், கம்பீரின் பார்வைக் குறைபாடு இன்னும் சரியாகவில்லை என்று இப்போது தெரிய வந்துள்ளது. அதாவது, கைத்தொலைபேசி அல்லது தொலைக்காட்சி பார்க்கும் போது, கண் மங்கலாகத் தெரிகிறது. எதாவது ஒரு செயலை செய்ய தீவிரமாக முயற்சிக்கும் போது, கம்பீரின் கண் ஒரே இடத்தில் நிலையாக நின்று விடுகிறது.

நேற்றுமுன்தினம் பந்து வீச்சு பயிற்சியாளர் எரிக் சிம்மன்ஸ் உடன், ஹோவ் கவுன்டி கிரிக்கெட் மைதானத்தின் உள்ளரங்கில், 45 நிமிடங்கள் பயிற்சியில் ஈடுபட்டார். அப்போது சிம்மன்ஸ் எறிந்த பந்துகளை, சரியான அளவில் கணிக்க முடியாமல் கம்பீர் மிகவும் தடுமாறியுள்ளார்.

சசக்ஸ் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் பங்கேற்காத கம்பீர், ஆட்டத்தின் இடைவேளையின் போது மைதானத்தில் ஓடி பயிற்சியில் ஈடுபட்டார். அப்போது இவரது முன்னேற்றம் குறித்து இந்திய அணியின் உதவி நிர்வாகிகள் கவனமாக ஆராய்ந்தனர்.

இந்தக் குறைபாடுகளில் அடுத்த சில நாள்களில் முன்னேற்றம் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. ஒருவேளை இது சரியாகும் பட்சத்தில், லீசெஸ்டர்ஷையர் அணிக்கு எதிரான ஒரு நாள் பயிற்சி ஆட்டத்தில் கம்பீர் பங்கேற்கலாம். பின்னர் இங்கிலாந்துக்கு எதிரான 'ரி-20' மற்றும் ஒரு நாள் தொடரில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பார்வைக் குறைபாடு நீடிக்கும் பட்சத்தில், சேவாக்கைப் போல, இவரும் எஞ்சியுள்ள ஆட்டங்களில் இருந்து நீக்கப்படலாம். (15)



கம்பீர்

# ஐ.சி.சி. அணித் தலைவர் குமார் சங்ககார

## ஆஸி. வீரர்கள் எவரும் இல்லை.



சங்கக்கார

இந்த வருடத்தின் ஐ.சி.சி. டெஸ்ட் அணி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது. மேற்கிந்திய அணியின் முன்னாள் தலைவர் கிளைவ் லொயிட்டை தலைவராகக் கொண்ட முன்னாள் வீரர்கள் குழுவொன்று இந்தத் தெரிவை மேற்கொண்டது. போல் அடம்ஸ், ஹஸீர் அப்பாஸ், டென்னி மொரிஸன், மைக் கெட்டிக் ஆகியோர் இந்தத் தெரிவுக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

இவர்கள் தெரிவு செய்த வருடத்தின் சிறந்த ஐ.சி.சி. டெஸ்ட் அணியில் இடம் பெற்றுள்ள ஒரேயொரு இலங்கை வீரர் குமார் சங்ககார ஆவார்.

12 பேர் கொண்ட இந்த அணியில் இங்கிலாந்து வீரர்கள் ஐவரும் தென்னாபிரிக்க வீரர்கள் நால்வரும் இடம்பெற்றுள்ளனர். தென்னாபிரிக்காவைச் சேர்ந்த வேகப்பந்துவீச்சாளர் டெயில் ஸ்ரெய்ன், 2008 ஆம்

ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 4 ஆவது தடவையாகவும் வருடத்தின் சிறந்த ஐ.சி.சி. டெஸ்ட் அணியில் இடம்பெற்றுள்ளார். இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் தொடர்ச்சியாக 3 ஆவது தடவையாக இந்த அணியில் இம்பெற்றுள்ளார். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த எவரும் இந்த அணியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வருடத்திற்கான ஐ.சி.சி டெஸ்ட் அணி விவரம் (துடுப்பாட்ட வரிசையின்படி) :

அலெஸ்டர் குக், ஹஸிம் அம்லா, ஜொனாதனன் ரொரட், சச்சின் டெண்டுல்கர், குமார் சங்ககார (விக்கெட் காப்பாளர், தலைவர்), டி வில்லியர்ஸ், ஜக் கலிஸ், ஸ்டுவர்ட் புரோட், கிரேம் சுவான், டெயில் ஸ்ரெய்ன், ஜேம்ஸ் அன்டர்சன், சகீர் கான் (12 ஆவது வீரர்). (15)

# ஆரம்பமாகிறது அமெரிக்க ஓபன் ரெனிஸ்

US OPEN



அமெரிக்க ஓபன் ரெனிஸ் தொடரில், இளம் இந்திய வீரர் சோம்தேவ் தேவ்வர்மன் கடின சுற்றில் இடம் பிடித்துள்ளார். அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில், கிராண்ட்ஸ்லாம் தொடரில் ஒன்றான யு.எஸ். ஓபன் ரெனிஸ் தொடர் நாளை முதல் அடுத்த மாதம் 11 ஆம் திகதி வரை நடக்கிறது. இதற்கான அட்டவணை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு, இளம் இந்திய வீரர் சோம்தேவ் தேவ்வர்மனுக்கு கடின சுற்றாக அமைந்துள்ளது. தரவரிசையில் 64 ஆவது வீரரான இவர், முதல் சுற்றில் இங்கிலாந்தின் அன்டி முர்ரேவை (தரவரிசை - 4) எதிர்கொள்கிறார். ஏ.டி.பி அரங்கில், இவர்கள் இருவரும் முதல் முறையாக மோத உள்ளனர். கடந்த ஆண்டு நடந்த கொமன்வெல்த் போட்டியில் தங்கம் வென்று சாதித்த சோம்தேவ், இந்த ஆண்டு பெரிய அளவில் சோபிக்கவில்லை. கடந்த 2009 இல் நடந்த யு.எஸ். ஓபனில், இரண்டாவது சுற்றுவரை முன்னேறிய இவர், கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்தினால் மட்டுமே குறைந்தபட்சம் காலிறுதிக்கு முன்னேற முடியும்.

இந்திய நட்சத்திரம் சானியா மிர்சா, பெண்கள் ஒற்றையர் பிரிவில் சுலப சுற்றில் இடம் பெற்றுள்ளார். இவர், முதல் சுற்றில் இஸ்ரேல் வீராங்கனை ஷகர் பியரை சந்திக்க உள்ளார். இவர்கள் இருவரும், இதுவரை [illegible] மோதியுள்ளனர். இதில் சானியா 4, ஷகர் பியர் ஒரு போட்டியில் வெற்றி பெற்றனர். சானியா, கடந்த 2005 இல் நடந்த யு.எஸ். ஓபனில், நான்காவது சுற்று வரை முன்னேறினார். சமீபகாலமாக முதல் சுற்றோடு வெளியேறி வரும் இவர், கூடுதல் கவனம் செலுத்தும் பட்சத்தில் பட்டம் வென்று சாதிக்கலாம். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறை கிறீஸ் பூதம் ஒரு கட்டுக்கதை மட்டுமே

## இப்படிச் சொல்கிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்



யாழ்ப்பாணம், ஓக.28

நாவாந்துறையில் இராணுவ சோதனைச் சாவடிக்குள் கிறீஸ் பூதம் சென்றது என்பது பொய் என்கிறார் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்த.

ஊர்காவற்துறையில் சிவில் பாதுகாப்புக்குழுக்களை அமைத்தல் பற்றி பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- நாவாந்துறை மக்களும் அந்தப் பகுதி இராணுவ அரணில் உள்ள படையினரும் நட்பாகவே பழகிவந்தனர். இந்த நிலையில் அன்று நாவாந்துறையில் உள்ள இராணுவ அரணைச் சுற்றி வளைத்து ஒரு கூட் டம் தாக்கிக் கொண்டு இருக்கின்றது என்று இராணுவ ஜெனரலிடமிருந்து பொலிஸ் அத்தியட்சகருக்கு தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது. உடனடியாக பொலிஸாரை அனுப்புமாறு இராணுவ ஜெனரல் கேட்டார்.

யாரோ ஒரு மனிதனால் 'கிறீஸ் பூதங்கள்' இராணுவ அரணுக்குள் புகுந்து கொண்டது என்று புரளி கிழப்பப்பட்டதை மக்கள் நம்பியதால் இந்த நிலை எற்பட்டது. இந்த நிலையில் எமது பொலிஸ் குழுவினர் பொலிஸ் உயர் அதிகாரியின் பணிப்பின் பேரில் அப்பகுதிக்கு விரைந்தன. பொலிஸ் குழு அங்கு சென்று இறங்கி சில நிமிடங் களுக்குள் பொலிஸார் மீது அவர்கள் தாக் கினார்கள். எமது இரு பொலிஸ் வாகனங்கள் அடித்து நொருக் கப்பட்டன. எமது நான்கு பொலிஸார் காயப்பட்டனர்.

நாங்கள் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நூறு பேரைக் கைது செய் தோம். பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் அவர்களில் அடங்கியிருந்தார்கள். அவர்களை நாங்கள் விடுவித்தோம். யாரோ ஒருவர் உங்களை பயப்படுத்த முற்படுவார். அதனை நம்பி அவருக்கு துணை போகா தீர்கள்- என்றார் தளுவத்த. கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கான மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபரான இவர் யாழ்ப்பாணத்துக்கும் பதில் கடமையாற்றுகிறார். (உ-319)

# அன்னா ஹசாரேயின் போராட்டம் வெற்றி

## இன்று உண்ணாவிரதத்தை கைவிடுகிறார்

புதுடில்லி, ஓக.28

இந்தியாவில் ஊழல் ஒழிப்புக்காக லோக்பால் சட்டத்தை நாடாளுமன்றில் நிறைவேற்ற வலியுறுத்தி 12 ஆவது நாளாக உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் காந்தியவாதியான அன்னா ஹஸாரேயின் போராட்டம் இன்று முடிவுக்கு வருகிறது. அவரது நிபந்தனைப்படி 'லோக்பால்' சட்டமூலத்தை இந்திய அரசு நாடாளுமன்றத்தில் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

இந்த நிலையில் அன்னா ஹஸாரே இன்று உண்ணாவிரதத்தை கைவிடுவார் என்று அன்னா ஹஸாரேவின் குழு தெரிவித்துள்ளது. அரசாங்கத் தரப்பினருடனான பேச்சின்போது. இந்தச் சட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வாக்கெடுப்பு நடத்தவேண்டும் எனவும் அன்னா ஹஸாரே வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் நாடாளுமன்றத்தில் விவாதம் மாத்திரம் நடத்துவதெனவும் தீர்மானம் நிறைவேற்றலோ வாக்கெடுப்போ இருக்காது எனவும் இந்திய அரசு நேற்றுக் காலை கூறியதையடுத்து பரபரப்பு ஏற்பட்டது. இந்த விடயத்தில் இந்திய அரசாங்கம் துரோகமிழைத்துவிட்டது என்று அன்னா ஹஸாரே தரப்பு சாடியிருந்தது. எனினும் நேற்று மாலை இந்திய நாடாளுமன்றத்தின் ராஜ்ய சபாவிலும் லோக் சபாவிலும் இதுதொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குரல் வாக்கெடுப்பு நடத்துவதற்கும் இந்திய அரசு சம்மதம் அளித்திருந்தது.

நாடாளுமன்றில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டவுடன் லோக்சபாவை இன்று வரை சபாநாயகர் மீராகுமார் ஒத்தி வைத்தார். இந்தத் தீர்மானத்தை அன்னா ஹஸாரே குழு வரவேற்றுள்ளது. இது தமக்கு கிடைத்த வெற்றி எனவும் தெரிவித்துள்ளது.

இன்று காலை உண்ணாவிரதத்தை அன்னா ஹஸாரே முடித்துக்கொள்வார் என்று அவரின் குழுவிலுள்ள முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான கிரண் பேடி அறிவித்தார்.

அன்னா ஒருபோதும் சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னர் உண்ணாவிரதத்தை முடிப்பதில்லை. எனவே இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவர் உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்வார் என்று கிரண் பேடி தெரிவித்தார். (உ-15)


**பெண் வேலை ஆள்கள் தேவை**

எமது ஸ்தாபனத்துக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.
அனுபவமுள்ளவர்களுக்கு- 7500/= வழங்கப்படும்.
திறமைக்கேற்ப கூடுதலாக வழங்கப்படும்.
பழக விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

**யாழ். றெக்ஸ்,**
13A, நவீன சந்தை (வெளிப்புறம்),
சாவகச்சேரி.

இலங்கையில் முதன்முதலாக உங்கள் போட்டோ 3D இல் உங்கள் திருமணம் அல்லது பிறந்தநாள் அல்லது குடும்ப போட்டோ 2 or 3 போட்டோ 8x10 Size 3Dஇல் ஒரே போட்டோவாக செய்து தரப்படும்.

நல்லூரில் Gold Covering Jewellers
எம்மிடம் வேண்டும் Covering நகைகளுக்கு 6 மாத உத்தரவாதத்தில் வழங்கப்படும். எல்லா அளவுகளிலும் 1000இற்கும் மேற்பட்ட காப்பு, செயின், நெக்லஸ், முத்துமாலை இன்னும் பல Jewellers எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். நகரில் ஒரிஜினல் DVD, ACD, MP3 பக்திப் பாடல்கள் விற்கும் ஒரே இடம்.
நல்லூரில் எம்மிடம் தமிழ் சினிமாவில் வெளிவந்த அனைத்துத் திரைப்படங்கள், திரைப்படப் பாடல்கள் மற்றும் MP3 பெற்றுக் கொள்ளலாம். எம்மிடம் வாங்கும் DVD, MP3 இவைகளில் ஏதும் பிழைகள் இருப்பின் இரண்டு வருட உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

GEEDHAM,
440B, Pointpetro Road,
Nallur, Jaffna T.P- 0777162272

RHYTHM,
107A, Goal Road,
Wellawatta, Colombo-06

**வீடு வாடகைக்குத் தேவை**

நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு கொக்குவில், திருநெல்வேலி பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு- 0775783629

**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள வெள்ளை நிற Nissan Sunny (13sri××××, 1500 CC) கார் விற்பனைக்கு உண்டு.
40/3, கோயில் வீதி, கண்டுக்குழி (IOM அருகில்)
தொடர்பு : 071 8561715.

**வேலை ஆள்கள் தேவை**

பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு பில் கிளார்க், வயரிங் வேலை தெரிந்தவர்கள் தேவை.
வேலையாள்கள் மானிப்பாய், நவாலி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு- 0772171051, 0776630390


## மரண அறிவித்தல்

### தம்பிராசா மயில்வாகனம்

(முன்னாள் ஊழியர், சாவகச்சேரி நீதிமன்றம்)



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா மயில்வாகனம் 24.08.2011 புதன் கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா- பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மோகனா (கொக்குவில்), மேனகா (ஜேர்மனி), ருகாகரன்(பிரான்ஸ்), புஸ்பனா(பிரான்ஸ்), காந்தனா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகாதேவன், மோகனராஜா, கபிலா, தங்கத்துரை, கருணானந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற நல்லதம்பி பரிமளம் மற்றும் தில்லைநாதன் கனகம்மா, காலஞ்சென்ற பொன்னையா அன்னபூரணம் மற்றும் கனகசபை- கோமளேஸ்வரி, பாலசிங்கம் புனிதராணி, ஆறுமுகநாதன்- மகேஸ்வரி, முத்தையா தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நவரத்தினம் மற்றும் தங்கராசா, நாகம்மா, பரமேஸ்வரி, காலஞ்சென்ற பத்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜிந்துஜா, தர்ஷனா, நிலுஜா, பிரவீன், பவித்திரன், தர்சிகா, றெபேக்கா, கிளறா விக்ரோறியா, தனிக்கா, பிறிசிலியா, கெசினா, சபீர்னா, கரீனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.08.2011) திங்கட்கிழமை பிரான்ஸில் பி.ப 3 மணி அளவில் தகனம் செய்யப்படும். அன்றைய தினம் மகாதேவன் இல்லத்தில் (கொக்குவில் கிழக்கு, கோணாவளை லேன்) துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*தி.மகாதேவன் குடும்பத்தினர்*
*தேவன் (மருமகன்)*

*கோணாவளை லேன்,*
*கொக்குவில் கிழக்கு.*


**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள 2 ஸ்ரீ ×× ×× தொடரிலக்கமுடைய Moris minor கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 60, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். 0774115335

**காணித்துண்டுகள் விற்பனைக்கு**

இலவை (சுன்னாகம்) கந்தரோடை ஸ்கந்தா கல்லூரி எதிர்ப்புறமாக உள்ள கல்லூரி வீதியில், ஒவ்வொன்றும் ஒன்றரைப் பரப்பு விஸ்தீரண முள்ளதாகவும், 20 அடி வீதியை முகப்பாகக் கொண்டும் சீரான உறுதிகளோடும், வெள்ளம் தங்க முடியாத மேட்டு நிலத்திலும் உள்ளன. பரப்பு 5 லட்சம்.
தொடர்புகளுக்கு: 0777 386300

**வீட்டுடன் காணி தேவை**

வீட்டுடன் கூடிய காணி வாடகைக்குத் தேவை.
(இடம்)
திருநெல்வேலி, பலாலி வீதிக்கு அண்மையில் அமைந்திருந்தல் நல்லது.
தொடர்பு: Ms. V. Thanishka
இல. 125, செல் மைக்கல் வீதி கொழும்பு - 03.
011 2441084, 011 2323105 - பக்ஸ் : 4611081
email : trade@biopowerlanka.com

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, ரேவதி நட்சத்திரம், கிரகபாவம் 27, 34 வயது அரச உத்தியோகம் (B.Sc) பார்க்கும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை
தொடர்பு : 071 9668444, 077 9184372

**மணமகள் தேவை**

யாழ். இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978இல் பிறந்த 2 இல் செவ்வாயுடைய வங்கியொன்றில் உத்தியோகத்தராகப் பணிபுரியும் பட்டதாரி மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ எதிர் பார்க்கிறார்கள்.
தொடர்புகளுக்கு - 0719253677
kkniveythithah@ymail.com


## ஓராண்டு நினைவின் நிறைவில்

### திருமதி பிருந்தா நவநீதன்

(முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், வலிகாமம் கல்வி வலயம்)



தோற்றம்
12.12.1979

மறைவு
28.08.2010

நிஜமொன்று நிழலாகி
நிறைந்தன ஓராண்டு
நீண்டாலும் ஆண்டுகள்
நினைவுகள் என்றும்

கோண்டாவில்.

கணவர், மாமா, மாமி,
மைத்துனிமார்.

## 31ஆம் நாள்

### நெஞ்சகலா நினைவிலே

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 29 |
| 02 | 07 |
| 1945 | 2011 |



### அமரர் விசுவலிங்கம் திருநாவுக்கரசு

கண்ணீரும் கம்பலையும் எமதாக்கி
காலனவன் கைப்பிடிக்கு நீயாகி
பேரிடியால் எம்மைப் பித்தாக்கி
காரிருளில் ஏழரையில் எமைப் பிரிந்தாயோ
அன்பான துணைவியவள் துடிதுடித்து கதறியழ
பண்பான புதல்வர்கள் பரிதவித்து அழ
துன்பியலில் மருகரும் பேரர்களும் துடிதுடிக்க
தனிமை நிலையானதோ எம் வீடு
கடலைகள் வற்றினாலும் காற்றது ஓய்ந்தாலும்
கண்ணியமாய் எமைக்காத்த அப்பாவே-மாமாவே
கண்ணில் நீர் சொரிய இந்நாளாம் முப்பத்தொன்றில்
உம் ஆத்மா ஈடேற தொழுகின்றோம்

*''நஷனல் எலக்ரேணிக்,*
*372, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.* *(7339)*

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகல், இரவு இருநேரங்களிலும் பொலிஸாரின் ரோந்து அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.28

கிறீஸ் பூதம், அடையாளம் தெரியாதோர் நடமாட்டம் என்பவற்றைக் கட்டுப்படுத்த இரவிலும் பகலிலும் பொலிஸ் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவ தெரிவித்தார்.

சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவது பற்றியும் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் எதிர்கால செயற்பாடுகள் பற்றியும் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் வித்தியாலயத்தில் நேற்றுப்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

''சில பொய்ப்பிரசாரங்கள் பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆனால், உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நாம் நடவடிக்கை எடுத்துவருகின்றோம். உங்கள் பிரச்சினைகளை எமக்கு அறிவித்தால் எம்மால் முடிந்தவரை அதற்கான நடவடிக்கை எடுப்போம். இனிவரும் நாள்களில் வீதிகளில் பொலிஸ் ரோந்துகள் தீவிரப்படுத்தப்படும். பொலிஸாருடன் கிராம சேவகர்கள் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களும் கிராமங்களின் பாதுகாப்பில் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றார் அவர்.

இதற்காக, கிராமங்களில் பாதுகாப்பை உறுதிப்படுதும் பொருட்டு ஒவ்வொரு பொலிஸ் பிரிவுகளிலும் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் நீல் தளுவத்த தெரிவித்தார்.

''பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளது. இந்தக் குழுக்களில் கிராம சேவகர்கள் மற்றும் ஊர் இளைஞர்கள் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர். இந்தக் குழுக்களுக்கு உரிய அடையாள அட்டைகள் எம்மால் வழங்கப்படும். இக்குழுவினர் இரவு பகல் நேரங்களில் பொலிஸாருடன் இணைந்து ரோந்தில் ஈடுபடுவர். இக்குழுவினர் ஏதாவது மோசடிகளில் ஈடுபட்டாலோ அல்லது பிரச்சினைகளில் ஈடுபட்டாலோ அந்தந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு பொதுமக்கள் அறிவிக்கலாம். அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தவறின் எனக்கோ அல்லது யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருக்கோ அறிவிக்கலாம்-என்றார் அவர்.

இதேபோன்ற கலந்துரையாடல் இன்று மு.பகல் 10 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

(உ-86, 319, 323)

## ரூபா 21 லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலய உள் வீதியில் தாலிக் கொடி அறுக்க முற்பட்டபோதே இரு பெண்கள் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

ஆலயத்தின் உட்பகுதியில் ஒன்றும், வெளிப்பகுதியில் நான்குமாக ஐந்து தாலிக்கொடிகள் களவாடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. 7இக்கும் மேற்பட்ட தங்கச் சங்கிலிகளும் களவாடப்பட்டுள்ளன.

ஆலய வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட பேர்ஸ் உள்ளிட்ட பல பொருள்கள் உரியவர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டன என்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

சுமார் 2000 வரையான தொகையுடன் கிடைத்த பேர்ஸ் ஒன்றை உரியவர்களிடம் சுகாதாரத்துறையினர் கையளித்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

### 1000 பொலிஸார். கடமையில்

திருட்டுக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 1000இக்கும் மேற்பட்ட ஆண் மற்றும் பெண் பொலிஸார் சீருடையிலும் சிவில் உடையிலும் ஆலயத்தின் உள்ளேயும் வெளியேயும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இவர்கள் தவிர தொண்டர் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இருந்தபோதும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

### புத்திசாலி இளைஞிகள்

ஆலயத்துக்கு நகை அணிந்து வராதீர்கள் என்று பொலிஸார் ஒவ்வொரு நாள் திருவிழாவிலும் காட்டுக் கத்தல் கத்தியபோதும் கணிசமான பெண்கள் தங்க நகைகளுடனேயே ஆலயத்துக்கு வந்திருந்தனர் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனினும் இளம் பெண்கள் தங்க நகைகளுக்குப் பதிலாக, 'ரோல் கோல்ட்' மற்றும் 'பாஷன்' நகைகளையே அணிந்து வந்தனர். இதனால் இவர்களிடம் திருடர்களின் கைவரிசை செல்லாது போய்விட்டது.

(ம-7-86)

## அரோகரா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிய வண்ணம் பின் தொடர்ந்தனர். தெற்கு வாயிலில் புதிதாக அமைக்கப்பட்ட ஷண்முகப் பெருமான் இராஜ கோபுரத்தைத் தேர் அண்மித்ததும் அந்த வாயிலின் முன்றிலில் விசேட பூசைகள் இடம்பெற்றன. தேர் புதிய இராஜ கோபுரத்தை அண்மிக்கும் வேளையில் படையினரின் ஹெலி அந்த இடத்தில் தேருலாவந்த முருகப் பெருமானுக்கு பூமாரி பொழிந்தது. மூன்று தடவைகள் வட்டமிட்டுப் பறந்து பூமாரி பொழியப்பட்டது. தேர் காலை 9 மணியளவில் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தது.

### காவடிகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவுக்காக குடாநாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் 50க்கும் அதிகமான பறவைக்காவடிகள் வந்திருந்தன். அரசடி வீதி, சிவன் வீதி, பருத்தித்துறை வீதிகளூடாக நண்பகல் வரை வந்த வண்ணம் இருந்தன. எண்ணுக்கணக்கற்ற செதில் காவடிகளும் சாதாரண காவடிகளும் கூட நல்லூர் கந்தனை வந்தடைந்தன. பக்திப்பரவசத்துடன் அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியதனால், நல்லூர் சூழலே நேற்று பக்தி மணங் கமழத் திகழ்ந்தது.

### வீதியில் தடையால் சிரமம்

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பருத்தித்துறை வீதியில் முத்திரைச் சந்திக்கு அருகே வீதியில் கற்களும் மண்களும் போடப்பட்டு இருந்ததால், நல்லூருக்கு வந்த பறவைக் காவடி எடுத்தவர்களும் பக்தர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

வீதியின் அரைவாசிப் பகுதியில் வீதி அதிகாரசபை கற்களையும் மண்ணையும் கொட்டி வைத்திருந்ததனால் காலையில் இந்த வீதியில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது. அங்கிருந்து வந்த பறவைக் காவடிகள் ஒரு பக்க வீதிவழியாக வருவதற்கு பெரும் சிரமம்பட்டன.

இதேவேளை, நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழாவான நேற்று; அதிகாலை ஆலய பூசைப்பணிகளில் ஈடுபட்டிருந்த வேளை மாரடைப்புக்குள்ளாகி குருக்கள் ஒருவர் இறைவனடி சேர்ந்தார். சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிர் பிரிந்துவிட்டது என்று மருந்துவர்கள் தெரிவித்தனர்.

தலங்காவில் பிள்ளையார் கோயிலடி திருநெல்வேலியைச் சேர்ந்த சோமசுந்தரக்குருக்கள் சண்முகநாதக்குருக்கள் (வயது 65) என்பவரே இறையடி சேர்ந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ம-7-4-86)

# அனைத்துலகம் தரும் அழுத்தமே இலங்கையின் மிகப்பெரிய சவால்

## வெளிவிவகாரச் செயலர் கருத்து

கொழும்பு, ஓக.28

முப்பதாண்டு காலப் போரில் எதிர்கொண்ட சவால்களை விட அனைத்துலக சமூகத்தால் இப்போது வழங்கப்படும் அழுத்தங்களைச் சமாளிப்பது மிகப்பெரிய சவாலாக இருக்கிறது என்று இலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜே.எவ்.ரஞ்சித் பெரேரா எழுதிய 'வெல்லப்பட முடியாத போரை வெற்றி கொள்ளுதல்' என்ற நூல் வெளியீட்டு நிகழ் வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

''மில்லியன் கணக்கான மக்களையும், பில்லியன் கணக்கான வளங்களையும், பெரிய அரசுகளையும், பெருந்தொகையான ஊடகங்களையும் எதிர்த்துப் போரிட வேண்டிய நிலையில் இப்போது அரசு இருக்கின்றது.

இலங்கை போன்ற சிறிய தொரு நாட்டுக்கு இது மிகப் பெரிய சவாலான விடயம்'' என்று கூறியுள்ள கருணாதிலக அமுனுகம, போர்க் குற்றச் சாட்டுகளால் மங்கிப் போயுள்ள நாட்டின் புகழை மீளக்கட்டி யெழுப்ப இணையம், அச்சு ஊடகங்கள், கலை, உள்ளிட்ட அனைத்து ஊடகங்களின் மூல மும் பரப்புரை செய்ய வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## கழுத்துவெட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியைச் சேர்ந்தவரும் ஊர்காவற்றுறையில் வசித்து வந்தவருமான போல் றொபின்சன் றொனி (வயது 22) என்ற இளம் குடும்பஸ்தரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது மைத்துனரே இவரைக் கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கொலையுண்டவரும் மைத்துனரும் தனது வீட்டில் இருந்து ஒன்றாகவே புறப்பட்டுச் சென்றனர் என்றும் பின்னர் மைத்துனரது வீட்டில் கழுத்து வெட்டுண்ட நிலையில் சடலம் காணப்பட்டது என்றும் றொபின்சனின் அத்தை முறையான ஒருவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கொலையாளி எனச் சந்தேகிக்கப்படும் யா.றஜீவன் தலைமறைவாகி விட்டார் என்று பொலிஸார் கூறுகின்றனர். அவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று வருகை தந்த ஊர்காவற்றுறை நீதிவான் ஜோய் மகாதேவா மரண விசாரணைகளை நடத்தினார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

(உ-4)

## மரண தண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம்.

வரலாற்றினால் இணைவு பெற்ற இருதேசங்களாகவும் இரத்த பந்த உறவினர்களாகவும் நாங்கள் உங்களுடன் வாழ்ந்து வருகின்றோம். இலங்கையில் ஏற்பட்ட பகைமையும் அதனால் எழுந்த ஈழத்தமிழரின் துயரவாழ்வையும் மூன்றாந்த தரத் தந்திரோபாயங்கள் ஊடாகவே இலங்கை அரசு அணுகி வருகின்றது. இந்தப் பகை முரணும் அதன் பரிணாமங்களும் சில சந்தர்ப்பங்களில் ஈழத்தமிழர் மீதான தவறான புரிதல்களையும் அணுகு முறைகளையும் பிற அரசுகள் கைக்கொள்ள வழிகோலி உள்ளது. இதற்கு இலங்க க அரசு ஊக்கியாக இருந்துள்ளது. ஆனால் இந்திய தேசத்தின் உண்மையான நேச சக்தியாக எப்போதும் ஈழத்தமிழர்களே இருந்து வருகின்றார்கள்.

ராஜீவ்காந்தி கொலையின் போதும் அந்தக் கொலையால் இந்திய மக்கள் கொண்டிருக்கின்ற நெடுந்துயரிலும் அனுதாபம் மிகுந்த பங்காளர்களாக ஈழத்தமிழர்கள் இருக்கின்றனர். அன்பு, காருண்யம், மன்னித்தல் என்றும் உயர் விழுமியங்களை ஏற்றுப் போதிக்கின்ற பாரத அரசும் பாரத மக்களும் தூக்குத் தண்டனைக்காக காத்திருக்கின்ற எமது உறவுகளுக்கு இரக்கம் காட்டி உலக அளவில் காலாவதியாகி வரும் தண்டனை முறைகளுக்கு மாற்றீடு ஒன்றைச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

சிங்களப் பெருந்தேசிய அடக்குமுறைகளாலும், போரால் ஏற்பட்ட வலிகளையும் ஆற்ற முடியாது அந்தரித்து நிற்கும் சமூகம் சார்பில் எங்கள் சகோதரர்கள் மீது கருணை காட்டுமாறு கோருகின்றோம். தூக்குத் தண்டனை எனும் பாவச் செயல் ஒன்றை நிறைவேற்றி ஈழத்தமிழர்களின் இதயங்களில் மாறா பெருங்காயத்தை ஏற்படுத்திவிட வேண்டாம் என்று அன்புரிமையோடு கேட்டுகிறோம். பழிக்குப் பழிதீர்க்கா பக்குவம் மிகுந்த இந்திய மண்ணையே காண விரும்புகின்றோம் என்றுள்ளது.

(உ-15, 426)

## கைதிகளுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகளுக்கும் ஒரு விடிவு காலம் பிறக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

''அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதால் கிடைத்த முக்கிய பிரதிபலன் சிறைகளில் உள்ள 6,000 பேர் விடுதலையாவதற்கான சந்தர்ப்பம் ஒன்றே'' என்று அமைச்சர் வாசுதேச நாணயக்காரவும் தெரிவித்திருந்தார். ஆனால், அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டதால் மட்டும் அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமாகாது என்று நீதி அமைச்சின் செயலாளர் சுதா கே.கமலாத் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பதால், அவர்கள் மீதான வழக்குகள் விசேட ஏற்பாடுகளின் கீழேயே முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்த அவர், ''அவர்கள் உடனடியாக விடுவிக்கப்படும் சாத்தியங்கள் ஏதும் இல்லை'' என்றார்.

வழக்கம் போல சட்டமா அதிபரே அவர்களின் விடுதலை தொடர்பான சட்ட நகர்வுகளை மேற்கொள்வார் என்றும் நீதி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதற்கிடையே, அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டதை அடுத்து அதற்குப் பதிலாக அவசர காலச் சட்ட விளைவுகள் ஏற்பாட்டு விதிகளை அரசு விரைவில் கொண்டுவரவுள்ளதாக 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் சட்டமா அதிபர் திணைக்களம் இதனை உறுதிப்படுத்தவில்லை.

''அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு எதிராக இப்போது சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலை தோன்றி உள்ளது. ஆதனால் புதிய சட்ட விதிகள் தேவை என்ற நிலை தோன்றி உள்ளது. அதற்கான முன்மொழிவுகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் அவற்றில் என்ன இருக்கின்றது என்பது தெரியாது'' என்றார் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரி ஒருவர்.

இறுதிப் போரின் பின்னர் சரணடைந்தார்கள் என்று அரசு கூறும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அனைவரும் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழேயே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலம் இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முயற்சிக்கும் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசிடம் 6 கோரிக்கைகள் தமிழ்க் கட்சிகளால் முன்வைப்பு

## புதுடில்லி கலந்துரையாடலின் இறுதியில்

யாழ்ப்பாணம், ஓக.28

தமிழ் மக்களுடைய நிலங்களை இலங்கை அரசு ஆக்கிரமிப்பதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட 6 கோரிக்கைகளை இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்ற இரண்டு நாள் கலந்துரையாடல்களின்போது மத்திய காங்கிரஸ் அரசிடம் தமிழ்க் கட்சிகள் ஏகமனதாக முன்வைத்துள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஈழத்தமிழ்க் கட்சிகளுக்கு இடையில் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் காங்கிரஸ் கட்சியின் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன் நாச்சியப்பன் இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். 8 தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை அரசினால் அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் .

மக்கள் தமது சொந்தக் காணியில் சொந்த இடத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்படவேண்டும்.

✱ வடக்கு, கிழக்கு சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு முற்றாக நிறுத்தப்படவேண்டும். அத்துடன் தமிழர் நிலப் பகுதிகளில் இருந்து இராணுவம் முற்றாக அகல வேண்டும். வீதிகள், கிராமங்கள் தோறும் படையினர் இருப்பதால் தான் தேவையில்லாப் பிரச்சினைகள் வருகின்றன.

✱ யுத்த காலத்திலும் இதற்கு முன்பாகவும் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

✱ இந்தியாவிலுள்ள 2 லட்சம் ஈழத் தமிழரும் நாடு திரும்புவதற்கு ஏதுவான சூழ்நிலைகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும். அவர்கள் இராணுவப் பிரசன்னங்கள் இருப்பதால் தாயகம் திரும்புவதற்கு அச்சப்படுகின்றார்கள். மேலும் தாயகம் திரும்பும் அகதிகளுக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

✱ தமிழ் மக்களுடைய நிலங்கள் அபகரிப்பதை - ஆக்கிரமிப்பதை இலங்கை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும். தமிழ் மக்களை அவர்களது வசிப்பிடத்துக்கு திரும்பவிடாமல் உயர் பாதுகாப்பு வலயங்களை அமைத்து விட்டு அந்த இடங்களில் சிங்கள மக்களை குடியமர்த்துவதை முதலில் நிறுத்த வேண்டும்.

✱ பயங்கரவாதச் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும். ஆகிய ஆறு அம்சக் கோரிக்கைகளே அனைத்துத் தமிழ்க் கட்சிகளாலும் ஏக மனதாக முன்வைக்கப்பட்டுள்ளன.

'தீர்வுத்திட்டம் பற்றிப் பேசப்பட்டபோதும் அனைத்து தமிழ்க் கட்சிகளதும் ஒருமித்த கருத்துக்கு வரமுடியவில்லை. அதற்காக இந்த முயற்சியைத் தோல்வியடைந்ததாகக் கருதவேண்டியதில்லை. உண்மையில் இதைப் பற்றி ஆலோசிப்பதற்கான நேரம் எமக்கும் போதுமாக இருக்கவில்லை. கால அவகாசம் கிடைத்திருக்குமானால் அனைத்துக் கட்சிகளும் ஒரு மித்த கருத்துக்கு வந்திருக்க முடியும். மேலும், எம்மால் முன்வைக்கப் பட்ட கோரிக்கைகள் தொடர்பில் இந்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினோம்' - என்றார் சுரேஷ் பிரேமச் சந்திரன்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சி சார்பில் மாவை சேனாதிராசா மற்றும் எம்.ஏ.சுமந்திரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியில் இருந்து சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஆனந்த சங்கரி, பத்மநாபா, ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் இரா. துரைரத்தினம், சிறிதரன், ரெலோவில் இருந்து செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் கந்தையா சிவனேசன், பெனடிக் தனபாலசிங்கம், ஈ.பி.என்.எல்.ப் சார்பில் பரந்தன் ராஜன், தமிழ் காங்கிரஸிலிருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எஸ்.கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(உ-15)

## நடமாடும் சேவை ஒத்திவைப்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனை (மருதங்கேணி) மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த மீளக்குடியமர்ந்தவர்களுக்கான நடமாடும் சேவை தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது என்று வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

## திருட்டு முயற்சி முறியடிப்பு

இணுவில் கந்தசுவாமி கோயிலில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி பொதுமக்கள் விழித்துக் கொண்டதால் முறியடிக்கப்பட்டது.

ஓட்டோ ஒன்றில் வந்த நால்வரே இந்தத் திருட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். கோயிலின் ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கிய இருவர் பொதுமக்களிடம் வசமாக மாட்டிக் கொண்டனர். எஞ்சிய இருவரும் அந்தப் பகுதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**வேலை ஆள்கள் தேவை**

இளவரசன் மருந்தகத்துக்கு மருந்து விற்பனை அனுபவமுள்ள இருபாலாரும் தேவை.
No. 462 D, Hospital Road, Jaffna
T.P: 021 222 8083

**தனிப்பட்ட வகுப்புக்கள்**

யாழ். பிரபல கல்லூரியில் 30 வருடங்கள் இரசாயனபாடம் கற்பித்த ஆசிரியரால் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் A/L மாணவர்க்கு இரசாயனம் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: T.P- 0214901637

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட் சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
குறிப்பு:-ஜேர்மன் மொழி Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

**வீடு விற்பனை**

கோவில் கடவை, துன்னாலை மத்தி கரவெட்டியில் அமைந்துள்ள 4 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
கோ.கோகிலரதன்,
தும்பளை, பருத்தித்துறை.
T.P- 0774669841, 021 790 0668

**மரண அறிவித்தல்**

*சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் சண்முகநாதக்குருகள் (வரதராஜக் குருக்கள்)*

ஊர்காவற்றுறை, புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் தலங்காவல் பிள்ளையார் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட (இந்தன் முத்து விநாயகர ஆலய பிரதம குரு) சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் சண்முகநாதக் குருக்கள் (வரதராஜக் குருக்கள்) நேற்று (27.08.2011) சனிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் நாளை அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*தலங்காவல் பிள்ளையார் வீதி,*
*திருநெல்வேலி.*

**ரூபா 50,000/- க்கு**
மேல் மாத வருமானம் பெற
இன்றே முதலீடு செய்யுங்கள்

**ஐஸ் கிரீம் இயந்திரம்**



கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

BRAND NEW

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
Hotlines: 077 391 8870, 077 1066902

**A/C விற்பனைக்கு**

Carier 24000 btu Split type used Airconditions for sale.
தொடர்பு: 0750415160

**கார் விற்பனைக்கு**

மாருதி 800AC கார்
இல.JX-xxxx
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு- 0773119936

**பிரத்தியேக கணினி வகுப்பு**

✱ Laptop (மடிக்கணினி) மூலமாக உங்கள் வீடுகளுக்கு வந்து அனைத்துக் கற்கை நெறிகளும் கற்பிக்கப்படும்.
✱ MS Office 2007/2010, Internet and E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களுக்கான பயிற்சி நெறிகள்.
✱ சான்றிதழ்கள் வழங்கப்படும்.
ஆசிரியர்: KRC
T.P. 0779672038 நல்லூர்.

**VAN FOR HIRE**



யாழ். நகரிலிருந்து குடும்பத்துடன் கொழும்பு சென்று வருவதற்கும் மற்றும் உள்ளூர், வெளி யூர் விசேட வைபவங்களுக்கானதும் சுற்று லாவுக்குமான AC, NONAC வான் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: S.மதன் 0777289283

**After A/L?** CIMA-UK Per Level Rs.14,400 | Engineering-USA 80% off | BIT University of Colombo Per year Rs.20,000 | Multimedia_USA 80% off

இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்



Government Schol.
A/L 2011 மாணவர்களும் பதிவுசெய்யலாம்
Diploma Courses.. MsOffice, DTP, English, AutoCAD, Hardware, Accounting, Web Designing
MCS Supported By UNDP/JRRP
324, Palaly Road, Campus Junction, Jaffna.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Kids Courses கணினி, சதுரங்கம், ஆங்கிலம், Games
Free Course fee: BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL,
Free Diploma Courses: English, Hardware, Accounting (Total Course Fee Free 1st 20 Students)

**DHL**
உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்

London Rs750
Canada, U.S.A, France, Denmark, Germany, Italy, Norway, Swiss Rs900

220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, VCD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்

10 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

குறிப்பு
DHL கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.
ரூபாவிலோ அன்னிய நாட்டுச் செலாவணி முறையிலோ செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பொதிகளை செலுத்தி உங்களுக்கான DHL Tracking Number களை பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாணத்தில் DHL வலைப்பின்னலுடன் முதல் முதலாக திருமுருகன் கொம் நெற் இணைக்கப்பட்டுள்ளது. DHL Online Tracking



TCN Express,
2B, Nelsan place, Colombo-06.
Customer service No.021 222 7835

திருமுருகன் கொம்நெற்

இல.259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். | இல.18, பிரதானவீதி, நெல்லியடி. | இல.05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி. | இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 தசாப்தங்களுக்கு மேலாக

நிலையானதும் ஸ்திரத் தன்மையும் கொண்ட சேவைக்கு

சென்ட்ரல் பினான்ஸ்

# யாழ் மண்ணில்

## நிதி வளம் பெருக, நாம் உங்களுடன்!





உங்கள் அனைத்து நிதித்தேவைகளுக்கான தீர்வுகள் எம்மிடம் உள்ளன.
பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கான குத்தகை வசதிகள்.
மக்ஸிமோ ட்ரக்களுக்கான கவர்ச்சிகரமான குத்தகை வசதிகள்.
டிமோ பட்டா வாகனங்களுக்கு விசேட நிதி வழிமுறைகள்.
மக்ஸிமோ ட்ரக் மற்றும் டிமோ பட்டா வாகனங்களுக்கான இலவச காப்புறுதி சேவை.
நிலையான வைப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளுக்கான அதி கூடிய வட்டி வீதம்.

**சென்ட்ரல் பினான்ஸ் பிஎல்சி**
364, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 1608, 021 222 1942

---

ஜேர்மன் தொழில்நுட்பத்தில்
வெற்றிகரமான அறுவடையைப் பெறுவதற்கு
சிறப்பான முதலீடு...




## CLAAS க்ரொப் டைகர் ஹாவஸ்டர்

★ சேற்றில் சிக்குண்டு நிற்காது ★ அறுவடை வீண்விரையமாகாது ★ வயலுக்கு எவ்விதமான பாதிப்பும் இல்லை


ஹய்ட்ரோலிக் தொழில்நுட்பம் என்பதால் இலகுவான செயற்பாடு


அறுவடையை 100% சுத்தப்படுத்திக் கொள்ளலாம்.


லிவர் உட்பட்ட அனைத்து கட்டுப்பாடுகளும் ஓரிடத்தில் இருப்பதால் செயற்படுத்துவது இலகுவானது.


இரும்புச் சில்லுகள் உள்ளதால் சேற்றில் சிக்குண்டு நிற்காது.


சிறப்பான எரிபொருள் செயற்திறனுடன் 60 குதிரைவலு சக்தியைக் கொண்ட என்ஜின்.


சௌகரியமான ஓட்டுநர் இருக்கையினால் வேலைசெய்வது இலகுவானது.


நவீன தொழில்நுட்ப வெட்டும் கருவியினால் கதிர்கள் சிந்தாது.

Mel Ads 10/11/5965

• 6 மாதங்கள் அல்லது 600 வேலை மணித்தியாலங்கள் உத்தரவாதம் • விற்பனையின் பின்னரான சிறப்புச்சேவை • கொள்வனவின் போது நிதி வசதி • உதிரிப்பாகங்களை எந்நேரத்திலும் டிமோவிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும் • அதிகமான கேள்வியென்பதால் மீள்விற்பனை இலகுவானது

உங்களின் CLAAS க்ரொப் டைகர் ஹாவஸ்டரை இன்றே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

**விலை ரூ. 7,150,000/-**

dimo TECHNOLOGY

**வரையறுக்கப்பட்ட டீசல் மற்றும் மோட்டர் என்ஜினியரிங் பகிரங்க கம்பனி**
உழவு உபகரணப் பிரிவு, கிரிந்தவலை வீதி, வெலிவேரிய.
தொ.பே / ∴பக்ஸ்: 033-4674616 வெப்: www.dimolanka.com

துரித இலக்கம்: 0773 633 867

TAF தொழில்நுட்பத்தால் ஏக்கர் ஒன்றிற்கு 150 கிலோ அறுவடை சேமிப்பு

T.A.F

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இனிமையான முதுமைப் பருவத்துக்கு

நோய்நொடிகள், தனிமை என்று முதுமையை வாட்டும் பிரச்சினைகள் பல. இதிலிருந்து தப்பிக்க சில வழிகளும் இருக்கின்றன. இளமையாக இருக்கும் போதே எமக்கும் முதுமை உண்டு என்பதை உணர வேண்டும். அந்த யதார்த்தம் புரிந்தாலே முதுமை இனிமையாகிவிடும். முதுமையைத் தடுக்க முடியாது. தள்ளிப் போடலாம்.

வாட்டும் முதுமையை வாழ்வின் யதார்த்தமாக உணர்ந்து மன உறுதியுடன் செயற்பட்டால் முதுமையிலும் இளமையாக இனிமை யாக, வாழலாம். அதற்கு முதுமை என்பது உடலின் வளர்ச்சியாக மட்டுமல்லாமல், அறிவின் வளர்ச்சி, அனுபவ வளர்ச்சியாக இருக்க வேண் டும்.

முதுமையின் கொடுமையைத் தடுக்க இளமையில் உறுதியான திட்டமிடல் அவசியம். இளமையில் உட லை எப்படிப் பாதுகாக்கிறோமோ, அதற்கேற்ப முதுமையில் உடல் தொந்தரவின்றி வாழலாம். எனவே தினமும் சிறிது உடற் பயிற்சி செய்யுங்கள்.

எப் போதும் வயிறு நிறைய முட்ட சாப்பிட வேண்டாம். இது முதுமையில் நீரிழிவு, மாரடைப்பு வராமல் காக்கும். இளமையிலேயே கீரை, பால், பழங்கள், கோதுமை, அதிகமாக சேர்த்துக் கொள்ளுங்கள். நன்றாகத் தூங்கி ஓய்வெடுங்கள்.



முதுமையின் தொடக்கம் 50 வயது தான். அப்போது நோய் இல்லாவிட்டாலும் ஆண் டுக்கு ஒரு முறை உடல் பரி சோதனை அவசியம். முதுமையின் விரோதி தனிமை. தனிமையைத் தவிர்க்கப் பழகுங்கள். முடங்கினால் முதுமை 6 மடங்கு அதிகமாகும் என்கிறது ஆய்வு. புத்தகம் படிப்பது, வானொலி கேட்பது என பிடித்தமான பொழுதுபோக்கு ஒன்றைக் கடைப்பிடியுங்கள். கூட்டங்களுக்குச் சென்று வரலாம். நண்பர்களோடு மகிழ்ந்திருங்கள்.

முதுமையில் உடல் தளர்வால் கால் இடறி விழ வாய்ப்பு இருப்பதால் கைத்தடி உபயோகிப்பது நல்லது.

வயதான பின்னர் மனது பந்த பாசங்களை எதிர்பார்க்கும். இருந்தாலும் அவர்களோடு அதிக எதிர்பார்ப்பு வைத்தி ருக்காமல் இருப்பது முது மையை இனிமையாக்கும். இளைய தலைமுறையினரின் லட்சியங்கள், கஷ்டங்களைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு உதவி செய்து வாழுங்கள். தியானம் செய்து மனதை ஒரு நிலையில் வைத்திருங்கள். வாரம் ஒருமுறை உண்ணா விரதம் இருப்பது உடலை சமநிலையில் வைத்திருக்க உதவும்.

சக்திக்கு ஏற்ற உழைப்பும், உழைப்புக்கு ஏற்ற ஓய்வும் முதுமைக் காலத்தில் அவ சியம். உறவுகளிடம் தற்பெருமை பேசுவதும், உறவுகளைத் துண்டிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

முதுமையில் உங்களுக்கான வசிப்பிடத்தை முடிவு செய்து வைத்திருப்பது நல்லது.

அது எதிர்பாராத ஏமாற்றங்களைத் தவிர்க்க உதவும். கடமைகளை நிறைவேற்றிய திருப்தி ஏற்பட்டவுடன் உங்கள் சொத்துக்களை உயில் எழுதி வைத்து விடலாம்.

இது வாரிசுகளுக்குள் வீண் பிரச்சினைகளை தடுக்கும். மரணம் நிச்சயமானது. மரண பயத்தை விட்டுவிட்டு வாழப் பழகினால் முதுமை இன்னும் ஆனந்த மாகும். எண்ணங்களும், செயற்பாடுகளும் ஒரே சீராகவும், ஆணித்தரமாகவும் இருந்து செயற்பட்டால், முதுமைக் காலத்தில் ஏற்படும் பல தொல்லைகளைத் தவிர்க்க முடியும். இளமையில் நல்ல உடற் பயிற்சி, சீரான உணவு, முது மையில் இனிய பொழுது போக்கு, போதிய அளவு பணம் இவற்றுடன் மன உறுதியும் இருந்தால் முதுமை வசந்த மாகும்.

ஜீவன்
மானிப்பாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வான்வெளியில் இருந்து பூமியை ரசிக்கும் காலம் தொலைவில் இல்லை

2013 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகாயத்தில் பறந்தபடி பூமியையும், தினமும் உதிக்கும் சூரியனின் அழகையும் பார்த்து ரசிக்க முடியும். பூமிக்கு மேல் தொங்கிக் கொண்டு உலகக் காட்சிகளைப் பார்ப்பது என்பது எம்மை சிலிர்க்க வைக்கும் சாகசமாக இருக்கும். இந்த வித்தியாசமான பயணத்துகான செலவு 5 மணித்தியாலத்துக்கு 90 ஆயிரம் பவுண்ட் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பூமியின் கடைசி வளைவுப் பகுதியை ஹீலியம் நிரப்பப்பட்ட பலூன் கலத்தில் இருந்து பார்த்து ரசிக்கலாம். இப்படி பயணம் செய்பவர்கள் சூரிய உதயத்தைப் பார்க்கும் முதல் மனிதர்களாகவும் இருப்பார்கள்.

பூமிக்கு மேல் 22 மைல் பயணம் செய்பவர்கள் செல்லும் கலம் 2 பைலட்டுகள் மற்றும் 4 பயணிகள் அமரும் வகையில் உள்ளது. இந்த கலத்துடன் 423 அடி விட்டம் கொண்ட ஹீலியம் பலூனும் இணைக்கப்பட்டு இருக்கும்.

ஹீலியம் காற்று ஒரு பொருளை உயரத்தில் கொண்டு செல்லக்கூடிய தன்மை படைத்தது ஆகும். இந்தக் கலத்திற்குப் ளூன் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தக் கலம் விண் வெளிப் பகுதியை அடைய ஒரு மணித்தியாலம் ஆகும்.

அதன் பின்னர் 3 மணித்தியாலத்துக்கு பூமிக்கு மேல் பயணம் செய்த பின்னர் மீண்டும் அது திரும்பும். இந்த ஹீலியம் கலத்தை ஸ்பெயின் தொழிலதிபர் ஜோஸ் மரியானோ லோபஸ் உருவாக்கி உள்ளார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுக்குச் சிறந்தது யோகா

யோகாசனப் பயிற்சியால் உடல் எடை குறையாது என்று பலர் கூறுவார்கள். ஆனால் அது மிகவும் தவறு. உடல் எடை குறைவு மற்றும் உடல் கட்டுக்கோப்புக்கு யோகா மிகவும் அத்தியாவசியமானது. யோகாவின் உதவியால் உடலை கட்டுக்குலையாமல் பாதுகாக்க முடியும் என்கின்றனர் பயிற்சியாளர்கள்.

**இளமை நீடிக்கும்**

நாம் தன்னம்பிக்கையுடன் முன்னோக்கி செல்லும் ஆற்றலை நமக்கு கொடுக்கிறது யோகா பயிற்சி. தினமும் தவறாமல் பயிற்சி செய்தால் கோபம், எதிர் மறை எண்ணங்கள் கூடக் கட்டுப்படும்.

யோகா உடலில் உள்ளுறுப்புகளை சுறுசுறுப்பாக இயங்க வைக்கும். இதன் மூலம் உடல் உறுப்புகள் அனைத்தும் சீராக இயங்கி ஆரோக்கியம் மேம்படும். யோகா பயிற்சியின்போது சரியான வழியில் மூச்சுப் பயிற்சியை மேற்கொண்டால், சுவாசம் ஒழுங்காக இயங்க ஆரம்பிக்கும். இதனால் உங்களது இளமையின் காலம் நீடிக்கும்!

யோகாசனம் செய்யும்போது உடல்உறுப்புகளின் அசைவுகளினால் ரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதனால் ரத்தம் அனைத்து உறுப்புகளுக் கும்பாய்ந்து அவற்றின் இயக்கம் சீராகும். மற்ற பயிற்சிகளை விட யோகாவில் மட்டுமே, ரத்த ஓட்டம் முகம் மற்றும் சருமத்தின் மீதும் பாய்ந்து உடல் அழகை பாதுகாக்கிறது. இதனால் ஆஸ்துமா, சைனஸ் போன்ற பிரச்சினைகள் குணமடையும்.

**சோர்வு நீங்கும்**

யோகா உடலை சீராக, கட்டுக்கோப்பாக மாற்றுவதில் முக்கிய பங்குவகிக்கிறது. உடல் பருமனாக இருப்பவர்களில் அனைவருக்குமே உடல் முழுவதும் கொழுப்பு சேர்ந்திருக்க வாய்ப்பில்லை. சிலருக்கு இடுப்பில், சிலருக்கு தொடையில், சிலருக்கு முதுகில், சிலருக்கு அடிவயிற்றில், சிலருக்கு மேல் வயிற்றில், சிலருக்கு மார்பில் பருமன் வெவ்வேறுவடிவில்இருக்கும். குறிப்பிட்ட யோகாசனத்தை மட்டும் செய்தால் போதும். உடல் முழுவதும் ஒரே மாதிரியாக சீராகும்!

நீங்கள் எந்த அளவுக்கு, எத்தனை நிமிடத்திற்கு யோகாசனம் செய்கிறீர்களோ அதைப் பொறுத்து உங்களுடைய உடலில் இருக்கும் தேவையற்ற கொழுப்பு கரைந்து, உடல் பருமன் குறையும். அதே நேரத்தில் உணவுக் கட்டுப்பாடு, உடற் பயிற்சியால் உடல் எடை குறையும் போது ஏற்படும் சோர்வு, யோகாவில் இருக்காது என்பது உறுதி. மேலும் செயற்கையை தவிர்த்து, எவ்வித பிரச்சினையும் இல்லாமல், இயற்கையாக உடல் எடை குறைய யோகா மட்டுமேசிறந்தவழி.

நாயகர்களின் நாயகன்
ரூ. 99,000/- வுக்கு
சென்றல் பினான்ஸ் மூலம்*




WORDS

விசேட லீசிங் வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்

- 25 குதிரை வலு கொண்ட சக்தி மிக்க டீசல் எஞ்ஜின்
- விலை ரூபா 855,000/- (அனைத்து வரிகள் அடங்கலாக)
- சுமக்கக்கூடிய மொத்த எடை 850 கி.கி
- ஒரு வருட / 40,000 கி.மீ உத்தரவாதம்*

CF
சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சீ
நேரடி தொலைபேசி இல. 011 2315315
*நிபந்தனைகளும் அடங்கும்

புத்தம் புதிய வாகனம்
டீசல்
சிறந்த எரிபொருள் சிக்கனம்

அயிடியல் வாகனம் - CF லீசிங் சக்தி - வெற்றிக்கு வழி

Mahindra MAXXIMO
Mahindra Rise.

அயிடியல் மோட்டர்ஸ் தனியார் நிறுவனம்
271, காலி வீதி, கொழும்பு 3
IDEAL Motors
011 7755555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...களா?
உங்கள் வீரியக் குறைவு மற்றும் உத்வேகமின்மை காரணமாக உங்கள் துணைவருக்கு வேதனையும் விரக்தி ஏற்படக்கூடும் என்பதை...

...களா?
வயதாகி விட்டதால் வீரியம் குறைந்து, விவாக வாழ்க்கையை இனிதே அனுபவிக்க முடியாமல் தவிக்கிறீர்களா?

...களா?
சரியான தகவல்களை அறியாமல் வெவ்வேறு மாத்திரைகளுக்கு அடிமையாகி, தீய விளைவுகளுக்கு ஆளானவர்களில் நீங்களும் ஒருவரா?

எதற்கும் அடிமையாகாமல் எவ்வித பக்க விளைவுகளும் இல்லாமல் இல்லற வாழ்வை இன்பகரமாக அனுபவிக்க ட்ரைபுல் மாத்திரைகளைப் பாவியுங்கள்

TRI BULL
TRI BULL TABLETS
தினமும் இரு மாத்திரைகள் 3-4 வாரங்களுக்கு எடுங்கள். ஆண்-பெண் இருபாலாருக்கும் உகந்தது.
மேலதிக விபரங்களுக்கு 077 3943113
www.alaris.lk
உத்வேகமான தாம்பத்திய உறவுக்கு...

# செம்பருத்தியின் மருத்துவ குணம்



அழகிய மலர் தான் செம்பருத்தி. ஆனால் இதன் மருத்துவ குணம் பற்றி அதிகமான மக்களுக்கு தெரிவதில்லை.

இதன் இலைகள்மற்றும் பூ நமது கேசத்துக்கு ஆரோக்கியத்தையும் கருமையையும் வழங்குகிறது. கேசத்தின் வலிமையை அதிகரிக்க செய்கிறது.


இதன் மலர் நீரிழிவு நோய்க்குச் சிறந்த மருந்தாகும். நாம் தலைக்குத் தேய்க்கும் எண்ணையுடன் காய வைத்த செம்பருத்தி இலைகளை கலந்து தடவி வந்தால் கேசம் இளமைப் பொலிவுடன் காட்சி தரும். குளிர்மையாகவும் இருக்கும்.

சேமிப்புக்களுக்கு மிகக் கூடுதலான வட்டி வீதம் 7% p.a.
நிபந்தனைகள் கிடையாது!
Fitch Rating – BB+(lka) RAM Rating – BBB-P3

சேமிக்கும் வேளையில் வெல்லுங்கள்!
1,000,000 வரை வெல்லுங்கள்
ரூ.10,000 வீதம் 100 வெற்றியாளர்கள்
மாபெரும் சீட்டிழுப்பு 2011 டிசெம்பர் 31
யூனியன் வங்கி

நிலையான வைப்புகளுக்கு மிகக் கூடுதலான வட்டி வீதங்கள்
01 ஆண்டு
9.5%+
*AER 9.5%
யூனியன் வங்கி

முதலீட்டுக்கான அரிய சந்தர்ப்பம்
இச் சந்தர்ப்பம் செப்டெம்பர் 7 ஆம் திகதி வரை மட்டுமே



எமது நிறுவனத்தினூடாக பங்குச் சந்தையில் புதிதாக முதலீடு செய்ய முன் வருகின்ற முதல் 100 முதலீட்டாளர்களுக்கு குறித்த பெறுமதியான இலவச பங்குகளை பெற்றுக் கொள்ள அரிய வாய்ப்பு.

மேலதிக விபரங்களுக்கு :
SKM LANKA HOLDINGS (PVT) LTD.
A Member of Colombo Stock Exchange
பங்குப் பரிவர்த்தனை நிலையம், யாழ்ப்பாணக்கிளை.
முதலாம் மாடி, இல.398/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 1596, 0773 562 048

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உடலை விட குளிர்ச்சியான நட்சத்திரங்கள் கண்டுபிடிப்பு

நாசாவின் நீண்ட தூர அகச்சிவப்பு ஆய்வு கண்டுபிடிப்பு விவரங்களை பயன்படுத்தி விஞ்ஞானிகள் குளிர்ச்சியான நிழல் நட்சத்திரங்களைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த நட்சத்திரங்கள் மனித உடலை விட குளிர்ச்சித் தன்மை பொருந்தியதாக உள்ளன. விண்வெளி ஆய்வாளர்கள் இவற்றுக்கு ஒய் ட்வார்ப் என பெயர் சூட்டியுள்ளனர். கண்ணுக்குத் தெரியக்கூடிய வெளிச்சத்தில் பார்க்கக்கூடிய தொலைநோக்கியைப் பயன்படுத்திப் பார்த்தபோது மங்கிய வெளிச்சத்தில் இருந்த 6 ஒய் ட்வார்ப் நட்சத்திரங்களை விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர். இந்த நட்சத்திரங்கள் சூரியனுக்கு அருகில் 40 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளன. இவை மற்றும் இதரப் பொருள்களுக்காக வைஸ் விவரங்கள் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டன. அடர்த்தியான அகச்சிவப்பு கதிர் காரணமாக அவை மிகவும் குறைந்த வெளிச்சத்துடன் காணப்பட்டன. பழுப்பு நிற சிறிய குடும்ப நட்சத்திர வரிசையில் ஒய் நட்சத்திரங்கள் மிகக் குளிர்ச்சியானவை. இதனைத் தவறிய நட்சத்திரங்கள் என்று கூறுவது உண்டு. இந்த ஆய்வு அறிக்கை கிர்க் பாட்ரிக் ஆய்வாளர் தலைமையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தோல் பராமரிப்புக்கு
# ஒலிவ்

நமது தோலின் மேல்பகுதி எபிடெர்மிஸ், அடிப்பகுதி ஹைப்போடெர்மிஸ், மையப் பகுதி டெர்மிஸ் என்று அழைக்கப்படுகிறது.

தோலின் இந்த மூன்று அடுக்குகளும் சீராகப் பணிபுரிந்தால்தான் அழகிய, ஆரோக்கியமான தோல் நமக்கு கிட்டும். நாம் தற்சமயம் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருள்கள், களிம்புகள், முகப்பூச்சு மருந்துகள் தோலின் மூன்று அடுக்கு வரையும் ஊடுருவுவதில்லை.

அதனால்தான் விலையுயர்ந்த களிம்புகளை பயன்படுத்தினாலும் பூரண பலன் கிடைப்பதில்லை. சாதாரணமான தோலை அழகாக புத்துணர்ச்சியுடனும் மினுமினுப்புடனும் திகழச்செய்து ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் அற்புத மூலிகைதான் ஒலிவ்.

இதன் இலை மேற்புறம் கரும் பச்சை வண்ணத்திலும் அடிப்புறம் வெளிர் பச்சை நிறத்திலும் இருக்கும். கனியின் நடுவில் கடினமான விதையும் சுற்றி திடமான சதைப் பகுதியும் இருக்கும்.

கனிகள் உருண்டை, நீளுருண்டை எனப் பலவடிவில் இருக்கும். காய் பச்சை நிறத்திலும், கனிந்த பின் பழுப்பு, சிவப்பு அல்லது கறுப்பு நிறத்திலுமிருக்கும். இலைகளில் எண்ணெய்ச் சத்து அதிகம்.

ஒலியா யுரோபியா என்ற தாவரவியல் பெயர்கொண்ட ஒலியேசியே குடும்பத்தைச் சேர்ந்த மரங்களின் பழக்கொட்டைகளே ஒலிவ் விதை. இவற்றிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் ஒலிவ் எண்ணெய் என்றும் மேற்கத்திய மருத்துவத்திலும், சைத்தூன் எண்ணெய் என்று இந்திய மருத்துவத்திலும் அழைக்கப்படுகிறது.

### செயல்திறன் மிக்க வேதிப்பொருள்கள்

ஒலிவ் எண்ணெயில் ஒலிரோசைடு, ஒலிரோபின், ஒலினோலிக் அமிலம், லிவ்டியோலின், எபிஜெனின் பிளேவனாய்டுகள், பால்மிட்டிக் மற்றும் ஸ்டீரிக் அமிலங்கள் பெருமளவு காணப்படுகின்றன.

### திரவத் தங்கம்

ஒலிவ் எண்ணெய் சருமத்திற்கு வெண்மையும், கேசத்திற்கு போஷாக்கும் அளிக்கிறது. ஒலிவ் எண்ணெயில் வைட்டமின்களும், தாது உப்புகளும் அடங்கியுள்ளன. ஆன்டி ஆக்ஸிடென்டல், புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு அமிலங்கள், நார்ச்சத்துகள், காணப்படுகின்றன.

கால்சியம், பொஸ்பரஸ், பொட்டாசியம், இரும்பு, மெக்னீசியம், துத்த நாகம், செலினியம் போன்றவை உள்ளன.

### தோலினை மினுமினுப்பாக்கும்

இவை தோலில் ஹைப்போடெர்மிஸ் வரை ஊடுருவி, தோலின் அனைத்து அடுக்குகளையும் பளபளப்பாகவும் வழுவழுப்பாகவும் வைத்திருப்பதுடன் தசைக்கும் தோலுக்கும் இடையே வறட்சி ஏற்படாமலும் பாதுகாக்கிறது.

100மிலி ஆலிவ் எண்ணெய்யில் ஏறத்தாழ 20 கிராம் ஒமேகா 6 கொழுப்பு அமிலங்களும், 12மிகி வைட்டமின் ஈ, 62 மைக்ரோகிராம் விட்டமின் கே என்பனவும் காணப்படுகிறது.


அவுஸ்திரேலியாவில் இருந்து கணனிகளை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் எமது நிறுவனத்திற்கு வடக்கு கிழக்கு பிரதேசங்களில் எமது நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய முகவர்களைத் தேடுகின்றோம். வசதிகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் தயவு செய்து தங்களது விபரங்களை அனுப்பவும்.
I Group Consulting International (Pvt)Ltd.
35,Sri Dhamma Mawatha,Colombo 10
(near Nalanda College)
Tel 011-2689877
www.igroup.com.au Hot line-077-6030898

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org